ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 2 ஜுலை-1939 கதிர் 12

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை		1
உலகத்தில் என்ன நடக்கிறது?	(கார்ட்டூன்கள்)	9
காந்தீயம்	ஸர் எஸ். ராதாகிருஷ்ணன்	13
உலக யுத்தமும் ருஷ்யாவும்	ஸ்டாலின்	17
ஆப்ரிக்காவின் அழகு	அரு. சொ	23
'நமக்கு அழகான இடம் வேறில்லை'	பொ. திரிகூடசுந்தரம் M. A., B. L.,	32
கனவோ ? நினைவோ ?	"வருணன்"	33
ஞானக் களஞ்சியம்	ரா. சீனிவாசன்	42
விஜய நகரத்தின் வளமை	"சரித்திரக்காரன்"	46
வார்தா கல்வித் திட்டம்	க. அருணாசலம் B. A.	49
நல்ல புத்தி	எஸ். கிருஷ்ணன்	52
நவாப் சையத் முகம்மது பஹதூர்	"ஒரு காங்கிரஸ்வாதி"	58
நாடும்—நகரமும்	"நாட்டான்"	60
ஏகாதிபத்தியம் என்றால் என்ன ?		64
அமெரிக்காவின் யந்திர நாகரிகம்	வர்க்கீஸ்	66

தமயன்னை கடிதம்—4 "தேவி தாஸன்" 72
புராதன எகிப்து "துரோணன்" 74
சர்வதேசப் பொதுவுடமைக் கட்சியின்
வேலைத் திட்டம் — 80
திருவிளையாடலின் ரகசியம் எஸ். கே. நாராயணஐயர் B. A. B. L., 85
தாழ்மையின் தகவுடமை வ. மு. இரத்தினேசுவர ஐயர் 87
ஐரோப்பாவில் ஸ்பெயினுடைய
ஸ்தானம் என்ன? மான்யுவல் அஜானு 90
சமஷ்டி அரசியலில் சட்ட சபைகள் கே. வி. ராமசுப்ரமண்யம் B. A. B. L. 94
அன்றுட உலகம் 98
துலாக்கோல் 102
கம்பர் நா. லக்ஷ்மீ நரசிம்மன் 105

ஸ்ரீ சரவணபவ வைத்திய சாலை.

மூலவியாதி நிவாரணம்.

(15-நாளில் குணம்)

இம்மருந்தை 15-நாள் சாப்பிட்டால் தவறாமல் உள்மூலம், புற மூலம், மூலவாய்வு. இரத்த மூலம், முதலிய எவ்வித மூலமாயிருந்தாலும் நிவர்த்திப்பதில் முதன்மையானது. நற் சாக்ஷி பத்திரங்கள்பெற்றது. வி. பி. வேறு— விலை ரூபாய்:—3-8-0.

தாது புஷ்டி சூர்ணம்.

இச்சூர்ணத்தை விடாது 40-நாள் (அல்லது) 20-நாள் வரை காலை மாலை பாலுடன் சாப்பிட்டு வந்தால் சூட்டை தணித்து நீற்றுப்போன விந்துவை கட்டி நல்ல தேக பலமும், முகவசீகரமும் உண்டாகும்.

10-நாள் சாப்பிடக்கூடிய டின் விலை ரூ:—2-12-0 }
20-நாள் " " ரூ:—1- 8-0 } வி. பி. வேறு.

ஸ்திரி சம்பந்தப்பட்ட வியாதிகள் எதுவாயினும் கொடிய வெள்ளை முதலிய வியாதிகளையும் 3-நாளில் குணப்படுத்தப்படும். வி, பி. வேறு மூன்று-நாள் மருந்து விலை ரூ:—5-0-0

பித்த நிவாரணி

இந்த லேகியத்தை சாப்பிட்டால் தலை சுற்றல், மயக்கம், கைகால் அசதி, அரோசிகம், வாந்தி, அஜீர்ணம், முதலியன நீக்கி நல்ல ஜீர்ண சக்தியை யுண்டாக்கும். மலச்சிக்கலையும் நீக்கும், வி. பி. வேறு;— சேர் 1-க்கு ரூ:—1-0-0

இதில் கண்ட மருந்துகள் தவிர நல்ல தைலங்களும், பற்பொடி முதலியனவும் கிடைக்கும். தவிர வியாதி எதுவாயினும் சரிவர தெரிவித்தால் தக்க ஔஷதம் செய்து கொடுக்கப்படும். இவை வேண்டுவோர் அடியிற் காணும் விலாசத்தில் நேரிலும். தபால் மூலமாயும் பெறலாம்.

DR. M. R. J. RAO, அனுபோக ஆயுர்வேத வைத்யசாலை

அமூர்தபுரம்-திருத்தணி (சித்தூர் ஜில்லா) S. I.

சட்ட சபையிலே நிகழ்த்தப் படுகிற சடங்குகளைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது; அவைகளைப் பற்றி அவர்கள் கவலையும் படுவதில்லை. இந்த மாதிரியான நிலையில், காங்கிரஸ் அரசாங்கத்தின் மீது அதிருப்தி வளர்ந்து கொண்டு வருமானால் அது குறித்து யாருமே ஆச்சரியப்பட வேண்டியதில்லை யல்லவா?

' ஒரு சிலர் கேட்கலாம், இப்படி அவசரப் படலாமா, இரண்டு வருஷ காலத்திற்குள் என்ன சாதிக்க முடியும், என்று. உண்மை. நாம் அவசரப் பட வில்லை. நிதானமாகவே இருக்கிறோம். ஆனால் நாம் ஏறிக் கொண்டு செல்கிற காலக் குதிரை வேகமாகச் செல்கிறதே. அஃது எங்கேயாவது நம்மைக் குப்புறத் தள்ளி விடாமல், பாது காத்துக் கொள்ள வேண்டாமா?

வால்டேர் என்ற பிரெஞ்சு அறிஞன், ஒரு சமயம் கூறினான்:- 'ஒரு சமுதாயம், சிந்தனை செய்யத் தொடங்கி விட்டதே யானால் அதன் வேகத்தை யாருமே தடுக்க முடியாது'. பாரத சமுதாயம், இன்னும் சிந்தனை செய்யத் தொடங்க வில்லை யாதலினால்தான், வேகமாகச் செல்ல வேண்டு மென்ற எண்ணங் கூட அதற்கு உதிக்க வில்லை போலிருக்கிறது! ஐம்பத்திரண்டு வருஷ காலமாகக் காங்கிரஸ் உழைத்து வந்து கூட, இன்னும் நமக்குச் சிந்தனா சக்தி கூட உண்டாக வில்லை யென்றால், அது தலைவர்களின் குற்றமாகுமா என்ன? 'நமது கர்மம், நமது தலை விதி' என்ற தத்துவங்களில் தஞ்சம் புகுந்து கொண்டு விட்டால் எல்லாம் சரியாகி விடுகின்றன. இல்லாவிட்டால், 'ராமனாண்டாலென்ன, ராவணனாண்டா லென்ன' என்பன போன்ற பழ மொழிகள் நம் நாட்டில் உற்பத்தியா யிருக்குமா?

மெது மெதுவாக, படிப் படியாகச் செல்ல வேண்டு மென்று சொல்கிறவர்களுக்கு ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்ட விரும்புகிறோம். 1922ம் வருஷம், ருஷ்யா தேசம், அறியாமையில் மூழ்கிக் கிடந்தது. 100க்கு 85 பேர் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாயிருந்தார்கள். இப்பொழுது—பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு—100க்கு 99 பிள்ளைகள், பள்ளிக்கூடம் சென்று படிக்கிறார்கள்.

இங்கே ஒரு பிரச்னை எழலாம். ருஷ்யாவிலே யாகட்டும், மற்றநாடுகளிலாகட்டும், அரசியல் அதிகாரம் ஜனங்களிடத்தில் இருந்தது; அதனால் தான் அவர்கள் அநேக விதமான முன்னேற்றங்களைவிரைவிலே அடைய முடிந்தது என்று சொல்லலாம். வாஸ்தவந்தான். இதற்காகவே நாம் கூறுகிறோம், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட பிறகல்லவோ நீங்கள் நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்று. இஃதொரு சங்கடமான பிரச்னைதான். நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அதிலிருந்த வண்ணமே நமது திறமையையும் தகுதியையும் ருஜுப்படுத்திக் கொண்டு, படிப்படியாக அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்பது ஒரு சிலருடைய அபிப்பிராயம். இந்த அபிப்பிராயமே அநுஷ்டானத்தில் தற்போழ்து இருந்து கொண்டு வருகிறது. ஆனால், இந்த முறை, நம்மைக் கொண்டே நம்மை மறக்கச் செய்து விடுகிறது. நாம் ஏதோ ஒரு லட்சியம் வைத்துக்,

கொண்டிருந்தால், அதிலிருந்து நமது கவனத்தை வெகு சூட்சுமமாகத் திருப்பி விடுகிறது. இதை, நாம் சென்ற இரண்டு வருஷ காலமாக, காங்கிரஸ் மாகாணங்களில் கண்கூடாகப் பார்க்கிறோமல்லவா? சட்டத்தை உடைப்பதற்காக அந்த சட்டத்திற்குள்ளே புகுந்த காங்கிரஸ் காரர்கள், இப்பொழுது அந்தச் சட்டத்தினின்று மீளமுடியாமல், சட்ட சம்பிரதாயம் என்கிற சோட்டிலே (ரோதையிலே) சென்று கொண்டிருக்கிற பரிதாபக் காட்சியை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோமில்லையா? தவிர, நமது நாட்டை நாம் ஆள, நமக்குத் திறமையுண்டு, தகுதியுண்டு என்று நாம் யாருக்கு ருஜுப்படுத்த வேண்டும்? அப்படித் திறமையும் தகுதியும் நமக்கு இல்லையானால், பாரத ஜாதியே நிர்மூலமாகிவிடுவது சிரேஷ்ட மல்லவா? பிறருடைய சன்மானப் பொருளாகக் கிடைக்கிற சுதந்திரம், ஒரு ஜாதியின் தன்மதிப்பைக் காப்பாற்றுமா? ஆனால் துரதிருஷ்ட வசமாக, காங்கிரஸ்காரர்களில் பலருக்கு, பிரிட்டிஷ் பார்லிமெண்டின் சன்மான மளிக்கிற யோக்கியதையிலும், நமது தகுதியின்மையிலும் நம்பிக்கை இருக்கிறது. இந்த மனப்பான்மை மாறினால்தான், பாரத ஜாதிக்கு விமோசனம் உண்டு.

காங்கிரஸ்காரர்கள், நிருவாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, ஜனங்களுடைய கவனமெல்லாம் நிருவாக யந்திரத்தின் மீதுதான் சென்றுவிட்டதே தவிர, தேசத்தின் மீதோ, தேசத்தின் வருங்காலத்தின் மீதோ செல்லவில்லை. பாபு ராஜேந்திர பிரசாத்தைப் போன்ற ஒரு சில தலைவர்கள், சமஷ்டி அரசியல், இறந்துபோன ஒரு பிரச்னை யென்றும், ஆனால், அதற்காக நாம் சும்மாயிருந்து கொண்டிருக்கக் கூடாதென்றும், சுயராஜ்யத்தைப் போராடிப் பெறவேண்டுமென்றும் கூறிக் கொண்டிருக்கிறார்கள் என்பது வாஸ்தவம். ஆனால் நடைமுறையில் காணப்படுவதென்ன? காங்கிரஸ்காரர்கள், உத்தியோக மேற்றுக் கொண்ட பிறகு, வருங்காலப் போராட்டத்தைப் பற்றிய பேச்சு, ஈன ஸ்வரத்திலே போய்க்கொண்டிருக்கிறது. காங்கிரஸ் பிரசாரம் என்பது ஏதோ ஒரு ஜில்லா போர்டு தேர்தல், அல்லது நகர சபைத் தேர்வின் போதுதான் கேட்கப்படுகிறது. அந்தந்த ஸ்தல காங்கிரஸ் கமிட்டிகள், அந்தந்த ஸ்தல தேர்தல்களின் போதுதான், தங்களுக்கும் ஜீவன் இருக்கிறதென்று காட்டிக் கொள்கின்றன. ஜன நாயகம் என்ற பெயரால் நடைபெறுகிற தேர்தல்களும், இவைகளுக்கு அஸ்திவாரமாயுள்ள பதவி மோகமும், இவற்றின் விளைவாக உண்டாகிற ஊழல்களும் 1935ம் வருஷத்து அரசியல் சட்டத்தினாலுண்டாயிருக்கிற பிரத்தியட்ச பலன்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ, நமது தலைவர்கள், இந்த ஊழல்களைக் காங்கிரஸின் தலை மீது சுமத்தி நம்மை ஆத்ம பரிசோதனை செய்து கொள்ளுமாறு கூறுகிறார்கள்!

சாதாரணமாக, இப்பொழுது காங்கிரஸ் மாகாணங்களில் மந்திரிகளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறதே தவிர, காங்கிரஸ் கமிட்டிகள் பின் வரிசைக் கவனத்திலேதான் இருக்கின்றன. சட்ட சபைகளின் நடவடிக்கைகளில் காட்டப்படும் உற்சாகம், காங்கிரஸ் கமிட்டி நடவடிக்கைகளில் காட்டப்படுகிறதா? இவைகளினால், சட்ட சபைகளின்

ஜோதி

சுடர் 2　　ஜூலை-1939　　கதிர் 12



சாதித்தது என்ன?

காங்கிரஸ், அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக்கொண்டு இரண்டு வருஷங்களாகின்றன. சட்டத்திற்குள்ளே புகுந்துகொண்டு அந்தச் சட்டத்தை உடைக்கிற முயற்சி, வெற்றி பெற்றுக் கொண்டு வருகிறதா, அல்லது தோல்வி யடைந்து கொண்டு வருகிறதா என்பதைப் பரிசீலனை செய்து பார்க்க இந்த இரண்டு வருஷ காலம் போதிய அவகாசமென்றே கருதுகிறோம். இந்த இரண்டு வருஷ காலத்தில், இந்திய தேசிய வாழ்வில்—அல்லது காங்கிரஸ் மந்திரிகள் நிருவாகம் செய்கிற ஏழு மாகாணங்களில்—என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்பதை நாம் தெரிந்து கொள்ள ஆவலுடையவர்களா யிருக்கிறோம்.

1. கல்வி முறையில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன? அப்படி ஏதேனும் மாற்றம் ஏற்பட்டிருக்குமானால், அஃது, இளைஞர்களின் எதிர் கால வாழ்க்கைக்கு எவ்வளவு தூரம் துணை செய்யக் கூடியதா யிருக்கிறது?

2. கல்வி யறிவு பெற்றவர்களின் தொகை நூற்றுக்கு அரை சத விகிதமாவது அதிகப்பட்டிருக்கிறதா?

3. விவசாயியின் கஷ்டங்கள் எவ்வளவுக்குக் குறைந்திருக்கின்றன? அவனுடைய வரிச்சுமை எவ்வளவு தூரம் இறங்கியிருக்கிறது?

4. தேசியத் தொழில் ஸ்தாபனங்கள் என்னென்ன ஏற்பட்டிருக்கின்றன?

5. கிராமங்களிடையே போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்த எத்தனை மைல் நீளம் புதிய ரோட்டுகள் போடப்பட்டிருக்கின்றன?

6. நீர்ப்பாசன வசதிகளில்லாமல் தான் அருமையாய் வளர்த்து வந்த பயிர் கருகிப் போய் வருவதைக் கண்டு, துக்கக் கண்ணீர் விட்டுக்கொண்

டிருந்த விவசாயி, அந்தக் கண்ணீரைத் துடைத்து விட்டானா?

7. குடிகளின் க்ஷேமத்தில் ஜமீன்தார்கள் காட்டி வருகிற அக்கரை, எந்தெந்த ரூபங்களாக வெளியாகிக் கொண்டிருக்கிறது?

8. நமக்கு ராணுவப் பயிற்சி இல்லாமற் போனால் போகட்டும்; நாம் தான் அஹிம்சா தர்மவாதிகளா யிற்றே! நம்முடைய தேகபலமாவது எவ்வளவுதூரம் விருத்தியடைந் திருக்கிறது? அதற்குரிய சாதனங்கள் என்னென்ன ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன?

9. ஜனங்களுடைய சுகாதார வாழ்க்கை அந்தஸ்து அதிகப்பட்டிருக்கிறதா? அது காரணமாக சிசு மரணம் எவ்வளவு தூரம் குறைந் திருக்கிறது? நோயினால் இறந்து போவோரின் தொகை, நூற்றுக்கு எத்தனை விகிதம் குறைந்திருக்கிறது?

10. வெளி நாட்டுப் பொருள்களின் இறக்குமதி எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது?

11. ஜனங்கள், அரசாங்கம் இயற்றி யிருக்கிற சட்டத்திற்குப் பயந்தோ, அல்லது தங்களுக்கு இயற்கையா யெழுந்த உற்சாகத்தினாலோ, அல்லது தேசிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கங் கொண்டோ, சுதேசியத்தை ஆதரித்து வருவதை அநுஷ்டான பூர்வகமாக என்னென்ன விதங்களில் காட்டிக்கொண்டு வருகிறார்கள்?

12. ஐந்நூறு ரூபாய் சம்பளத்தோடு திருப்தியடைகிற மந்திரிகளின் தியாகமானது, ஆயிரக்கணக்காகச் சம்பளம் வாங்கும் ஐரோப்பிய, இந்திய உயர்தர உத்தியோகஸ்தர்களின் மனதை எவ்வளவு தூரம் மாற்றி யிருக்கிறது? அது காரணமாக அவர்கள் தங்கள் சம்பளத்தில் எவ்வளவு சதவிகிதம் தியாகம் செய்திருக்கிறார்கள்? இதனால் அரசாங்க பொக்கிஷம், ஏதேனும் சாதகம் அடைந்திருக்கிறதா?

இவை யாவும், காங்கிரஸ் அரசாங்கங்களுக்கு நாம் விடுக்கிற வினாப் பத்திரங்களல்ல. வினாக்கள் விடுக்கிற உரிமையை, நாம் இப்பொழுது உபயோகித்துக் கொள்ள விரும்பவில்லை. ஏனென்றால், விடையளிக்கக் கூடிய அவகாசம் காங்கிரஸ் மந்திரிகளுக்கு இல்லை யென்பதை நாம் அறிந்திருக்கிறோமாதலின். சட்டச் சுழலிலே அகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கிற அவர்கள் பால் நமக்கு உண்மையில் அநுதாபமே உண்டாகிறது. தேசத்திலே ஒரு பெரிய போராட்டம் தொடங்கினால்தான், அவர்கள் இந்தச் சுழலிலிருந்து மீள முடியும். ஆனால் போராட்டத்தைப் பற்றி நினைக்கக் கூட அவர்களுக்கு அவகாசமில்லை போலிருக்கிறதே!

காங்கிரஸ்காரர்கள், அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொண்ட காலத்தில், அவர்களிடமிருந்து பொது ஜனங்கள்—சிறப்பாக ஏழை மக்கள்—அதிகமாக எதிர் பார்த்தார்கள். அவர்களுக்கென்ன தெரியும், வரம்பிட்ட ஒரு சட்டத்திற்குள்ளேயே காங்கிரஸ் காரர்கள் கிரகப் பிரவேசம் செய்திருக்கிறார்களென்று? பசிப்பிணி யினின்றும், வரிச்சுமை யினின்றும் ஒவ்வொரு நிமிஷத்திலும் அவர்கள் விடுதலையை எதிர் பார்க்கிறார்கள்.

விவாகச் சீர்திருத்த சம்பந்தமாகத் தருக்கியில் ஒரு புதிய சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அதன்படி

விவாகச் சீர்திருத்தம்

1. விவாகத்திற்கென்று விசேஷமான சடங்குகள் நடத்துவதும்,

2. பெண்களுக்கு வரதட்சிணை கொடுப்பதும்,

3. விவாகத்திற்காகச் சன்மானங்கள் அளிக்கப்படுவதும்,

4. விவாக ஊர்வலத்தின் போது ஐந்து வண்டிகளுக்கு அதிகமாகச் செல்வதும்,

5. ஹோட்டல்களில் விவாக விருந்துகள் நடத்துவதும்,

குற்றங்களாகும். இந்தக் குற்றங்களுக்காளாவோர், அபராதம் விதிக்கப்படுவர். இந்த மாதிரியான சட்டம் ஒன்று, இந்தியாவில்—சிறப்பாகத் தென்னிந்தியாவில்—மிக அவசியம் என்று கருதுகிறோம். பொருளாதார காரணங்களுக்காகத்தான், இந்தச் சட்டம் தேவையென்று நாம் கூறுகிறோம்.

* * *

இங்கிலாந்துக்கு வேறென்ன சிறப்பு இருக்கிறதோ இல்லையோ, அந்நிய நாடுகளிலிருந்து வருகிற பெரிய மனிதர்களுக்கு அடைக்கலம் கொடுப்பதில் சிறப்புப் பெற்றிருக்கிறது.

அடைக்கலம்

பத்தொன்பதாவது நூற்றாண்டிலிருந்தே இதற்கு இந்தச் சிறப்பு ஏற்பட்டிருக்கிறதென்று சொல்ல வேண்டும். ஆனால் சமீப காலத்திலிருந்து, மாஜி மன்னர்களின் அடைக்கல க்ஷேத்திரமாக இது விளங்குகிறது. எத்தியோப்பியாவின் ஹெயிலி செலாஸி என்ன, சையாமின் மாஜி மன்னர் என்ன, ஸ்பெயினின் அல்பான்ஸோ என்ன, இப்படி ஒருவர்பின் ஒருவராக இந்த நாட்டில் குடி புகுந்திருக்கின்றனர். இப்பொழுது அல்பேனியாவின் ஜோக் அரசரும் இங்குச் சென்றுவிட உத்தேசமாம். இந்த மாஜி மன்னர்களின் கோஷ்டி விருத்தியாகிக் கொண்டிருக்குமானால், சர்வதேச சங்கத்திற்கு வேலையேயிராதென்று நாம் அஞ்சுகிறோம்.

* * *

ஸர் சர்வேபல்லி ராதா கிருஷ்ணன், உலக அறிஞர்களில் ஒருவர். அவருடைய அபிப்பிராயங்களில் நமக்கு எப்பொழுதும் மதிப்பு உண்டு. சென்ற

யாரை உயர்த்த?

4—6—39ல் அவர் லண்டனில் கூடிய கூட்டத்தில் காந்தியடிகளின் உயர்ந்த கொள்கைகளைப் பற்றி மிக அழகாய்ப் பேசியிருக்கிறார். பேச்சின் பெரும் பாகத்தை நாம் அப்படியே ஆதரிக்கிறோம். ஆனால் ஓரிரண்டு விஷயங்களில் அவர் கூறும் அபிப்பிராயங்கள் நம்மைச்சிறிது பிரமிக்கவே செய்கின்றன. ஓர் உதாரணம்.

தென்னாப் பிரிக்கா அரசாங்கத்தார் தற்போது, ஜனநாயக மற்ற முறைகளைக் கையாண்டு வருகின்றனர். காந்தியடிகள் அங்கிருந்த போது, அவர்கள் அப்படியே நடந்து கொண்டார்கள். அதனால் அந்த அரசாங்கத்தை உயர் நிலைக்குக் கொணர்வது தமது

கடமை யென்று காந்தியடிகள் கருதினார். தென்னாப்பிரிக்கா வில் போராட்டத்தை நடத்தியதன் மூலம் காந்தியடிகள், தமது இந்திய சகோதர சகோதரி களுக்கு மட்டும் தொண்டு செய்ய வில்லை; தென்னாப்பிரிக்கா அரசாங்கம் ஓர் உயர் நிலையை யடையுமாறு அதற்குத் துணையும் செய்தார்.

இந்தப் புதிய காரணத்தைக் கற்பிக்கிற அறிவை நாம் உண்மையில் பாராட்டுகிறோம். ஆனால் காரணத்தைமட்டும் அங்கீகரிக்க முடியவில்லை. தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தின் மானஸிக திருஷ்டியையும் மனிதத்தன்மையையும்மேலுக்குக்கொண்டுவரவே காந்தியடிகள் பாடுபட்டார் என்றால், அந்த அரசாங்கத்தின் திருஷ்டியும், தன்மையும் இப்பொழுது எந்நிலையி லிருக்கின்றன? ஓர் அங்குலமாவது உயர்ந்திருக்குமானால், நிறத்துவேஷத்தை நிலை நிறுத்தக் கூடிய சட்டங்களை இயற்றிக் கொண்டு வருமா? என்னவோ, இந்தப் பாரமார்த்திக தத்துவோபதேசங்களையெல்லாம் அரசியலிலேயோ அரசியல் தலைவர்க ளிடத்திலேயோ கொண்டு புகுத்தப்படுவதை நம்மால் ரசிக்க முடிய வில்லை. நாம் உயர்ந்தால் தான், பிறரை உயர்த்த முடியும். நமது தேசிய வாழ்வு சீர்பட்டால்தான், சர்வ தேசிய வாழ்வுக்கு நாம் அடிகோல முடியும்.

* * *

நல்ல காலமா?

வட மேற்கு எல்லைப்புற மாகாண காங்கிரஸில், ஜமீன்தார்கள், ஜாகிர்தார்கள் முதலிய பலர் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருக்கிறார்களென்று ஒரு செய்தி சொல்கிறது. இது காங்கிரஸுக்கு நல்ல காலமா, அல்லது ஜமீன்தார்களுக்கு நல்ல காலமா வென்பது நமக்குத் தெரிய வில்லை. ஆனால், பம்பாயில் கூடிய சுதேச மன்னர்கள் மகாநாடு, சமஷ்டி திட்டத்தை நிராகரித்திருப்பதற்கும், இந்தப் பெரிய தனம் படைத்தவர்கள் காங்கிரஸில் சேருவதற்கும் ஏதோ சம்பந்தம் இருப்பது போலில்லையா?

* * *

ஒரு கேள்வி

ஓர் இந்தியனுடைய சராசரி வருஷ வருமானம் ஏறக்குறைய 90 ரூபாய் என்று சில பொருளாதார சாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள். இது சரி யென்றே நாம் வைத்துக் கொள்வோம். பதினேழாவது நூற்றாண்டில்—அதாவது சுமார் 250 வருஷங்களுக்கு முன்னர்—இங்கிலாந்திலுள்ளவர்களின் சராசரி வருமானம் 650 ரூபாயாக இருந்தது. இப்பொழுது—இந்த இருபதாவது நூற்றாண்டில்—மேற்படி வருமானத் தொகை இரட்டித்திருக்கிறது. அதாவது சுமார் 1300 ரூபாயாகி யிருக்கிறது. அப்படியானால், இந்தியா, பதினேழாவது நூற்றாண்டு இங்கிலாந்தின் நிலையை யடைய எத்தனை வருஷங்கள் ஆகும்? இருபதாவது நூற்றாண்டு இங்கிலாந்தின் நிலையை யடைய எத்தனை வருஷங்கள் ஆகும்? இந்தப் புள்ளி விவரங்களை நாம் கணக்குப் போட்டுக் கொண்டு பார்த்த பிறகாவது சிறிது உற்சாகம் பெற வேண்டாமா? தாய் நாட்டின் பொருளாதார விடுதலை எவ்வளவு முக்கியமானது என்பதை உணர வேண்டாமா?

மூலமாகச் சுயராஜ்யத்தைச் சுலபமாகவும், யாருடைய மனம் புண்படாமலும் சம்பாதித்து விடலாமென்ற மனப்பான்மை, திண்மை பெற்றுவருகிறது! என்ன ஆச்சரியம்! சட்டசபைகள் மூலமாகச் சுதந்திரம் பெற்ற நாடுகளின் சரித்திரத்தைப் படிக்க நாம் மிக ஆவலுள்ளவர்களாயிருக்கிறோம். நமது ஆவலைப் பூர்த்தி செய்கிறவர்களுக்கு, முன்கூட்டியே நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவை போகட்டும். நிர்மாண திட்டங்கள் என்று சொல்லப்படுகிற கதர், மதுவிலக்கு, தீண்டாமை, சமூக ஒற்றுமை முதலியன, சுயராஜ்யத்திற்கு நம்மைத் தகுதிப் படுத்திவிடும் என்று சொல்லப் படுகிறதல்லவா? இவையெல்லாம் மிக உத்தமமான திட்டங்கள் என்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இவைமட்டுமே, நம்மைச் சுயராஜ்யத்திற்குத் தகுதிப் படுத்தி விடுமா? அநீதியையும் அடக்கு முறையையும் எதிர்த்துப் போராடக் கூடிய ஆற்றலை நமக்கு அளிக்குமா? ஜன சக்தியை உருவகப் படுத்த இவை போதுமான திட்டங்களாகுமா?

இந்த நிர்மாண திட்டங்கள் கூட, எவ்வளவு தூரம் அநுஷ்டான பூர்வகமாகக்கொண்டுவரப்பட்டிருக்கின்றன? தற்போதைய காங்கிரஸ்பிரசாரத்தில், இவை எவ்வளவு தூரம் வலியுறுத்தப் படுகின்றன? மந்திரிகளின் புகழைப் பாடுவதும், அவர்கள் விதிக்கிற புதிய 'வரிகளை ஆதரிக்க வேண்டுமென்று சொல்வதுந்தான் தற்போதைய காங்கிரஸ்' பிரசாரமாயிருக்கிறது. இன்னொரு விஷயம். காங்கிரஸானது, பொதுஜனத்தோடு நெருங்கிய உறவு கொள்ள வேண்டுமென்று தொடங்கப்பெற்ற இயக்கம் என்னவாயிற்று? அதற்காகக் காரியக் கமிட்டி என்னென்ன திட்டங்களை வகுத்திருக்கிறது?

இந்தப்பிரச்னைகளையெல்லாம் நாம் கிளப்பினோமானால் நமக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலவேயிருக்கிறது. ஆனால், கடமையை முன்னிட்டு இவைகளைக் கிளப்பாமலுமிருக்க முடியவில்லை.

பொதுவாகவே, தற்போதைய சட்டத்தின் கீழ் காங்கிரஸ் மந்திரிகளால், அதிகமான நன்மைகள் செய்ய முடியாதென்றும், நன்மை செய்யக் கூடிய அவர்களுடைய சக்தியெல்லாம் ஏற்கனவே செலவழிந்து விட்டதென்றும் பொதுஜனங்கள் கருதி வருகிறார்கள். இந்த எண்ணம் வலுக்குமாறு செய்யாமல், தேசத்தின் மீது ஜனங்களின் கவனத்தைத் திருப்புவது 'காங்கிரஸ் தளகர்த்தர்'கள் கடமையாகும்.

* * *

ஆங்கிலோ-சோவியத்

ஆங்கிலோ சோவியத் ஒப்பந்தம், இன்னும் வாதநிலையிலேயே இருக்கிறது. பேச்சளவிலேதான் இதுநின்றுவிடுமாவென்றுகருத வேண்டியிருக்கிறது. இப்படி இந்த ஒப்பந்தம் விரைவிலே நிறைவேறாததற்கு என்ன காரணம்? இரண்டு காரணங்கள் கூறலாம். ஒன்று, பொதுவுடமையுடன் எந்தவிதமான சம்பந்தமும் வைத்துக் கொள்ளக் கூடாதென்ற பிரிட்டனின் 'மனப்பான்மை. இரண்டாவது, ருஷ்யாவோடு ஒப்பந்தம் செய்து கொண்டு

விட்டால், ஜெர்மனியோடு சமாதானப் பேச்சுகள் நடத்தமுடியாதே என்ற பிரிட்டனின் கவலை. பொதுவாகவே பொதுவுடமையைப் பற்றி ஒரு துவேஷமான அபிப்பிராயம் இங்கிலாந்தில் இருந்து வருகிறது. யுத்தம் ஏற்படுமானால் அதன் விளைவாக இங்கிலாந்தில் பொதுவுடமைக் கொள்கை பரவக் கூடும். அதனைத்தடுக்க வேண்டுமானால் யுத்தம் வராமல் தடுக்கவேண்டும். யுத்தம் வராமல் தடுக்க வேண்டுமானால் ருஷ்யாவோடு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். இது சாதாரணமாக எல்லாருக்கும் புரியக்கூடிய விஷயந்தான். ஆனால், பிரிட்டனில் ஏற்பட்டுள்ள பொதுவுடமை துவேஷமானது, இந்தச்சாதாரண நியாயத்தைக் கூடச் செவி கொடுத்துக் கேட்க மறுக்கிறது. இஃதோர் ஆச்சரியமில்லையா? ஜெர்மனி விஷயத்தில், பிரிட்டனுக்காகட்டும், ருஷ்யாவுக்காகட்டும் பூர்ண நம்பிக்கை ஏற்பட வில்லை. பரஸ்பர சந்தேகங்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. இதை மறைத்து வைப்பதில் பயனில்லை. அப்படியிருந்தும் ருஷ்யாவுடன் பிரிட்டன் ஒன்று சேர மனங் கொள்ளா திருப்பது எப்படியிருக்கிறதென்றால், ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிற இரண்டு பேர் வழிகள், ஒருவரை யொருவர் அறிமுகம் செய்து வைக்கப் படாத காரணத்திற்காக, பரஸ்பரம் உதவி செய்து கொள்ளாமல் விலகி யிருப்பதைப் போல் இருக்கிறது.

யாரையும் சமாதானப்படுத்திக் கொண்டே போகலாம் என்ற நம்பிக்கை, பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளிடமிருந்து அகலவேயில்லை. இதன் மூலமாகத்தான்—அதாவது உறுமுகிற பிராணிகளைப் பார்த்துத் தலையசைத்துக் கொடுப்பதனால்தான்—உலகத்தில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையும் தளரவில்லை. இப்பொழுதில்லாவிட்டாலும், இன்னும் சிறிது காலத்திற்குப் பிறகாவது, ஜெர்மனி, தன்னோடு சமாதானம் பேசவருமென்றும், அப்பொழுது அஃது ஆட்சேபம் சொல்லக்கூடிய மாதிரி எந்தவிதமான இடையூறுகளும் ஏற்படக் கூடாதென்றும் பிரிட்டன் கருதுகிறது. ஆனால், உலக சமாதானத்திற்காக—ஏன்? ஐரோப்பிய சமாதானத்திற்கு மட்டுங்கூட—ஜெர்மனியும் பிரிட்டனும் மட்டும் சிநேக ஒப்பந்தமோ, பரஸ்பர யுத்த உதவி ஒப்பந்தமோ செய்து கொண்டால் போதுமா? எல்லா நாடுகளும் இதில் ஒன்று கலந்து கொள்ள வேண்டாமா? இவைகளெல்லாம் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளுக்குத் தெரியாமலில்லை. இவர்கள் சாவதானமாக நடந்து கொள்வதற்கு முக்கிய காரணம், வெகு சீக்கிரத்தில் யுத்தம் வரப்போவதில்லை யென்ற நிச்சய நம்பிக்கைதான். ஐரோப்பிய அரசியல் நிலையையும், கீழ் நாட்டில் சீன-ஜப்பானிய யுத்த நிலையையும் நாம் எந்த அளவு கோல் கொண்டு அளந்து பார்த்தாலும், உலக யுத்த ஹேஷ்யங்கள் ஒன்றும் புலனாகவில்லை. அந்தந்த நாடுகளிலே தோன்றுகிற யுத்தப் புகைசல்களை, ஸ்தலப் பிரச்னைகளாக்கிவிடவே ஒவ்வொரு வல்லரசும் முயன்று வருகிறது. தற்பொழுது, எந்த வல்லரசும் மனவமைதியோடு வாழவில்லை யென்பது உண்மையேயானாலும், எதுவும் யுத்த தேவதையின் காலில் சிலம்புகளைக் கட்டத் தயாராயில்லை.

உலகத்தில் என்ன நடக்கிறது?

சிறிய நாடுகள் : எங்களுக்கென்ன கவலை? எங்களுக்குப்பின்னாலே, ஜன நாயக வல்லரசுகள் இருக்கின்றனவே!

வல்லரசுகள் : எங்களுக்கென்ன கவலை? எங்களுக்கு முன்னாலே சிறிய சிறிய நாடுகளெல்லாம் இருக்கின்றனவே!



ந வீ ன ச ர் க் க ஸ்!



யூகோஸ்லேவியாவைப் பார்த்து:—
என்ன? எங்களுடைய ரோம்—பேர்லின் அச்சில் நீயும் சேருகிருயா? இல்லையா?

இவ்வளவையும் ஜப்பான் ஜீரணிக்க முடியுமா?

அமெரிக்கா: ஐரோப்பாவில் யார், யாரை அடித்துக் கொண்டாலும் சரி, என்னுடைய யுத்த தளவாட சப்ளை பில்கள் பெருகிக்கொண்டு போனால் போதும்.



இந்த மாதிரியான நாற்காலி மீது சர்வாதிகாரிகள் எவ்வளவு காலந்தான் வீற்றிருக்கப் போகிறார்கள்?

இங்கிலாந்துடன் ஐர்லாந்தைப் பிணைத்தால், விபரீதமாக வல்வவோ ஆகிக் கொண்டு வருகிறது!

வாத்தியத்திற்குத் தகுந்தாற் போல் இந்தக் கரடி நாட்டியம் செய்தால்தானே? ஊதும் போது என் கன்னந்தான் வீங்கிப் போகிறது?

காந்தீயம்

—ஸர் எஸ். ராதாகிருஷ்ணன்

இந்த வருஷம் அக்டோபர் மாதத்துடன் காந்தியடிகளின் எழுபதாவது வயது பூர்த்தியடைகிறது. அதனாலேயே, அவரைப்பற்றிச் சில கூறுவது பொருந்தும் என்று கருதுகிறேன். காந்தியடிகளைப் பற்றிக் கூறுவதற்கு வேறொரு காரணமும் உண்டு. அதாவது, காந்தியடிகளை யாராவது பார்த்து 'உங்களுடைய வாழ்க்கைக்கு அடிப்படையாயிருப்பது எது' என்று கேட்டால் 'மதந்தான் என்னை வாழச் செய்கிறது' என்று கூறுகிறார். காந்தி, ஒரு பெரிய அரசியல் தலைவர் என்பதை நாம் நன்கு அறிந்து கொண்டிருக்கிறோம்; உலகமும் நன்கு அறிந்து கொண்டிருக்கிறது. அவர், ஒரு பெரிய தேசத்தைப் பிணைத்துக் கொண்டிருந்த சங்கிலிகளைத் தளர்த்தி விட்டார்; அல்லது உடைத்து விட்டார். அவர் பெரிய அரசியல் கிளர்ச்சிகளுக்குப் பொறுப்பாளியாயிருந்திருக்கிறார். இப்படியெல்லாந்தான் உலகம் அவரைத் தெரிந்து கொண்டிருக்கிறது. உலகத்திலுள்ள எல்லா ராஜதந்திரிகளும், கடவுளும் மதமும் ஒன்று என்று கூறுகிறார்கள். ஆனால் காந்தியடிகளோ, மனிதனும் மதமும் ஒன்று என்று கூறுகிறார். கடவுளையும் மனிதனையும் ஒன்றுசேர்ப்பிக்க வேண்டுமென்று அவர் முயற்சிசெய்து வருகிறார். அரசியல்வாதிகள், தங்களுக்கு மதபக்தி உண்டு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறார்களில்லையென்பது நம்மெல்லோருக்கும் தெரியும். இதனால் அவர்கள் மதத்தைப்புறக்கணித்து விட்டு, சமுதாய ஊழல்களைமட்டும் கவனிக்கத் தொடங்குகின்றனர். ஆனால் அவர்கள், தங்கள் காரியம் ஒவ்வொன்றுக்கும் மதத்தையே ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார்கள். காந்தியடிகளின் நோக்கமோ, அரசியல் லட்சியங்களுக்கு ஓர் உயர்ந்த ஸ்தானம் கொடுக்க வேண்டுமென்பதாகும். அதாவது மதத்தை அரசியலில் புகுத்த முயற்சி செய்கிறார். அவருடைய பொதுவாழ்வெல்லாம், மதத்தினின்று பிறந்த ஊக்கமேயாகும்.

இப்பொழுது ஐரோப்பாவின் பாதி பாகத்தில், மதம் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது. 'இன்னும் ஏன் மதத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்' என்று கேட்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இவர்களைப் பார்த்து நான் கேட்பதென்னவென்றால் கடவுள் படைத்ததை யெல்லாம் அழித்து விட உங்களுக்குச்சக்தி யுண்டாவென்பது தான். இவர்கள் தேவாலயங்களை

அழித்து விடலாம்; நாகரிகத்தைச் சிதைத்துவிடலாம்; மானிட சமூகத்தின் சிருஷ்டியனைத்தையுமே உருவில்லாமல் செய்து விடலாம். ஆனால் மனிதனுடைய ஆத்மாவை இவர்கள் அழிக்க முடியாது. ஒரு மானிடனால், ஆத்மாவை அழிக்க முடியுமா? முடியவே முடியாது. அப்படி அழிக்க முடியுமானால், மானிட ஜாதியே, மதத்தைத் துறந்து விட வேண்டியது தான். மிருகங்களுக்கு மதமில்லையே. ஆனால் மானிடனாக ஜென்மம் எடுத்தவுடனேயே ஒருவன் சில பிரச்னைகளைத் தீர்க்க வேண்டிய கடமைக் குள்ளாகிறான். அதாவது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் 'நான் ஏன் வளர்கிறேன்? எனக்கு வயோதிகம் ஏன் வருகிறது? எனக்கு ஏன் மரணம் உண்டாகிறது? என்கிற பிரச்னைகளையெல்லாம் தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறான். ஆனால் மிருகங்கள் இந்தப் பிரச்னைகளை எழுப்புவதேயில்லை.

புத்தர் பிரான், ஒரு நோயாளியையும், வயோதிகனையும், பிச்சைக் காரனையும் பார்த்தவுடனே அவருக்கு மத உணர்ச்சி உண்டாயிற்று. மனிதனால் தான், 'நான் ஏன் நோயாக விருக்கிறேன், ஏன் இறந்து போகிறேன்' என்கிற கேள்விகளையெல்லாம் கேட்டுக் கொள்ள முடிகிறது. மனிதனால் தான், சமுதாயக் கட்டுப்பாடுகளினின்று சிறிது விலகிக் கொண்டிருக்க முடியும். மனிதனொருவனிடத்தில் தான், சுயநல உணர்ச்சி இருக்கிறது. சுயநலமுள்ள பிராணிகளை நாம் காண்கிறோமில்லை. சுயநலமுள்ள மனிதர்களைத் தான் பார்க்கிறோம். மிருகங்களுக்குக் கவலை யில்லை; பிறரை வருத்த வேண்டு மென்ற எண்ணமும் இல்லை. மனிதனிடத்திலோ, பயம், ஹிம்சை, அசாந்தி முதலியன இருக்கின்றன. இதனால் மனிதன் என்ன கூறுகிறானென்றால், 'நான் பூர்ண மிருகத் தன்மையை யடைய வேண்டும்; நான் உயர்ந்த நிலையில் இருக்க வேண்டு மென்று விரும்புகிறேன்' என்று சொல்லிக் கொள்கிறான். பாரமார்த்திகத் துறையிலே இறங்கி யிருக்கும் ஒரு மனிதனானவன், பயமில்லாதவனாகவும், ஹிம்சையினின்று விடுதலையடைந்தவனாகவும், அசாந்தியில்லாதவனாகவும் இருக்க வேண்டும். 'பயப்படாதே' என்று கீதை கூறுகிறது. மத உணர்ச்சியோடு இருக்கிற மனிதன், மற்ற ஆத்மாக்களோடு சமமாகப் பழக வேண்டுமென்று விரும்புகிறான். ஆகையால், மத உணர்ச்சியோடு கூடிய ஒரு மனிதன், அஞ்சாமையுடையவனாகவும், அஹிம்சாவாதியாகவும், சாந்தியுடையவனாகவும் இருக்க வேண்டும். இந்த உணர்ச்சியை மனிதனிடத்திலிருந்து அகற்றி விட முடியுமா? இந்த நிலையை யடைய வேண்டுமென்ற ஆவலை, மனிதனுடைய உள்ளத்தினின்று அப்புறப்படுத்திவிட முடியுமா?

மகாத்மா காந்தி மதம் என்று சொல்கிறபோது, சடங்குகள் முதலியவற்றைப்பற்றி அவர் கூறவேயில்லை. ஹிந்து மதத்தைக்கூட அவர் ஒரு கருவியாக உபயோகிக்கிறார். கிறிஸ்தவர்களின் கிறிஸ்துநாதரும், ஹிந்துக்களின் கிருஷ்ணரும் எல்லாரும் ஒன்றுதான் என்று அவர் கூறுகிறார். சத்தியத்தைக் கடைப்பிடிப்பதனால்தான் மனிதன் நித்தியத்துவத்தை அடைகிறான் என்று அவர் நம்புகிறார். இது மிகக் கடினமானது என்பது உண்மை

தான். மனிதனிடத்திலேயுள்ள மிருக உணர்ச்சிகளையெல்லாம் ஒருவன் களைந்தெறிய வேண்டியது வசியமாகும். ஒருவன் உண்மையிலேயே கடவுள் பக்தனாயிருப்பானேயாகில், அவன் மானிட சமூகத்தின் தொண்டனாகவே இருக்க வேண்டும். எனவே காந்தியடிகள் கடவுள் தொண்டு செய்கிறார். எப்படி? மனித சமூகத்திற்குத் தொண்டு செய்வதன் மூலமாக.

யார் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும்; இப்பொழுது தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தார் ஜன நாயகமற்ற முறைகளைக் கையாள்கிறார்கள் என்பது நிச்சயம். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்த போதும் அவர்கள் அப்படியே செய்தார்கள். இதனால், அவர் அரசாங்கத்தாரை ஓர் உயர் நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று முயற்சி செய்தார். தென்னாப்பிரிக்காவில் அவர் நடத்திய போராட்டம், தமது இந்திய சகோதரர்களையும் சகோதரிகளையும் உயர்த்துவதற்காக மட்டுமல்ல; தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தையும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு போவதற்குத் தான்.

காந்தியடிகள், இந்தியாவுக்கு வந்ததும், தமது நாட்டார் விஷயத்திலும் இப்படியே நடந்து கொண்டார். தீண்டாமையை யகற்ற முயன்றார். பிரிட்டிஷ் அரசாங்கத்தைப் பார்த்து அவர் கூறுகிறார்:—'எனக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீது துவேஷம் இல்லை. பிரிட்டிஷாரை நான் நேசிக்கிறேன். ஆனால் நாட்டில் ஏற்பட்டிருக்கிற அநேக தீமைகளுக்கு அவர்கள் காரணர்களாயிருக்கிறார்கள்.' லண்டனுக்கு அவர் விஜயஞ் செய்த போது, அமெரிக்கர்களுக்கு இதே செய்தியைத்தான் அவர் அறிவித்தார். இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற வறுமைக்கெல்லாம் பிரிட்டிஷாரே காரணர் என்று அவர் கூறுகிறார். இந்த வறுமை ஒழிய வேண்டுமென்பதுதான் அவர் நோக்கம். இந்தியாவின் விடுதலையைவிட அவர், அஹிம்சையையே முக்கியமாகக் கொள்கிறார். மனித சமூகமனைத்தையும் அவர் நேசிக்கிறார். அவர் ஒருவர்தான், இந்தியாவைப் பொறுத்த மட்டில், சமாதானத்திற்காக உழைக்கிறவர். இதைப் பல சந்தர்ப்பங்களிலும் அவர் நிர்த்தாரணம் செய்து காட்டி யிருக்கிறார்.

ஜனங்களின் பலாத்காரத்திற்குப் பிறகு அரசாங்கத்தின் அடக்கு முறை ஏற்பட்டால், அவர், நடு நாயகமாய்த் தோன்றி, இந்திய தேசிய இயக்கத்தைச் சமாதான வழியில் செலுத்தி யிருக்கிறார். தற்போதைய இந்திய அரசியல் சட்டத்தை நடத்தி வைக்கிறவர் மகாத்மா காந்திதான். பொறுமை யிழந்திருக்கிற இந்தியாவுக்கும் பிடிவாதமுள்ள பிரிட்டனுக்கும் இடையில் அவர் நிற்கிறார். உலகத்திற்குக் காந்தியடிகள் செய்திருக்கிற பரோபகாரம் என்னவென்றால் அவர் மதத் தலைவராக வேலை செய்து வருவதேயாம். கடவுள் தன்மை, சத்தியம், நித்தியத்துவம் ஆகிய இவற்றில் உலகம் ஈடுபட்டு விடுமானால், நாம் எதற்குமே அஞ்ச வேண்டுவதில்லை. மகாத்மா காந்தி அஹிம்சா தர்மத்தை அனுஷ்டிக்கிறபோது, அவர் தமது எதிரியைப் புண்படுத்துவதே யில்லை. கடவுளிடத்தில் நமக்கு உண்மை

யான நம்பிக்கை யிருக்கு மாஞல், நாம் எந்தவிதமான தீமைகளுக்கும் அஞ்சவேண்டுவ தில்லையென்று அவர் கூறுகிருர். தீமையை எதிர்த்துப் போராட வேண்டு மென்றும் அப்படி எதிர்த்துப் போராடுகிறபோது அன்பு முறையைக் கையாள வேண்டு மென்றும், இறுதியில் நன்மை உண்டாவது நிச்சயம் என்றும் அவர் உறுதியாகக் கருதுகிருர். அஹிம்சா தர்ம முறையில் எதிர்த்துப் போராட வேண்டு மென்பதுதான் அவர் கொள்கை.

ஐரோப்பிய மகாயுத்தம் முடிந்த இருபது வருஷங்களுக்குப் பிறகு, இப்பொழுது கிறிஸ்தவ உலகத்தில் நாம் என்ன காண்கிருேம்? யுத்த தளவாடங்களின் பெருக்கம்; ஆகாய விமானங்களின் பரபரப்பு. இது, பேயைக் கொண்டு பேயை ஓட்டுவது போல் இல்லையா? சாத்தானை விரட்ட சாத்தானைத் துணைநாடுவது போலில்லையா? மனிதனுடைய தனித்துவமானது, அவன் வசிக்கும் ராஜ்யத்தோடு ஐக்கிய மாகிவிட வேண்டு மென்று ஹிட்லர், முஸோலினி முதலிய சர்வாதிகாரிகள் கூறுகிருர்கள். காண்டர்பரி பிரதம பாதிரியோ, சாத்தானை ஒடுக்க, பீரங்கிகளையும் ஆகாய விமானங்களையும் துணைகொண்டு பொது ஜன அபிப்பிராயத்தைத் திரட்ட வேண்டு மென்று கூறுகிருர். இந்த மாதிரியான அபிப்பிராயங்களுக் கிடையில், கடவுள் வாழ்க்கையை நடத்திஞல், நலம் பல உண்டாகும் என்று காந்தியடிகள் முழங்குகிருர்.

காந்தியடிகளின் மணிவாசகம் வருமாறு :—'எளியவாழ்க்கையை நடத்துதல்; உண்மையாயிருத்தல்; எல்லாரிடத்தும் அன்பு செலுத்துதல்; அகில உலகத்திற்கும் தொண்டு செய்தல்; இறந்து போனவர்களைவிட இருக்கப்பட்டவர்களுக்கு உழைத்தல். இதுதான் என் வாழ்க்கையின் லட்சியம்'.

உலகம் தோன்றிய காலத்திலிருந்து, இதுவரை யாரும் இப்படிக் கூறியதில்லை யென்று நான் கருதுகிறேன்.

(பிரசங்கம்)

மது விலக்குத் திட்டத்தின் பயன்

சென்னை மாகாணத்தில் சேலம், கடப்பை, சித்தூர் ஆகிய மூன்று ஜில்லாக்களிலும் மது விலக்குத் திட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. இதன் பயஞக, 2151 கள்ளுக் கடைகளின் லைசென்ஸுகள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. 8638 கள்ளிறக்கும் லைசென்ஸுகள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன

உலக யுத்தமும் ருஷ்யாவும்

——ஸ்டாலின்

1939 வருஷம் மார்ச் மாதம், ருஷ்யப் பொதுவுடமை காங்கிரஸ் கூடியபோது, அக்கட்சியின் தலைவனுன ஸ்டாலின்—ருஷ்யாவின் சர்வாதிகாரி என்று அழைக்கப் படுகின்றவன்—ருஷ்யாவின் அந்நிய நாட்டுக் கொள்கையைப் பற்றி விரிவாகப் பேசியிருக்கிருன். இவன் இதுகாறும் பேசியுள்ள வற்றில் இந்தப்பேச்சுதான் முக்கியமானதென்று ஐரோப்பிய ராஜதந்திரிகள் கருதுகிருர்கள். ஆனுல் இந்தப்பேச்சு, சரியாக வெளியாக்கப்படவேயில்லை, அங்கு மிங்குமாகச் சிலவாக்கியங்களை மட்டுமே மேற்கு ஐரோப்பியச்செய்தி ஸ்தாபனங்கள் வெளியிடச் செய்தன. இப்பொழுது இந்தப்பேச்சு 'ஓர்ல்ட் ரெவ்யு' என்ற பிரபல ஆங்கில மாசிகையில் வெளியாயிருக்கிறது. அதனை அப்படியே இங்குத்தருகிறோம்.

புதிய ஏகாதிபத்திய யுத்தம் ஒன்று, சென்ற இரண்டு வருஷ காலமாக நடைபெற்று வருகிறது. ஷாங்காய் நகரத்தி லிருந்து ஜிப்ரால்டர் துறைமுகம் வரை இந்த யுத்தம் நடைபெறுகிறது. இதில் சுமார் ஐம்பது கோடி ஜனங்கள் சம்பந்தப்பட்டிருக்கிருர்கள். ஐரோப்பா, ஆப்ரிக்கா, ஆசியா ஆகிய மூன்று கண்டங்களின் பூகோள, படமானது, பலவந்தமாகத் திருத்தி எழுதப்படுகிறது. ஐரோப்பிய யுத்தத்திற்குப் பின்னர் அமைக்கப்பட்ட சமாதானக் கட்டிடம் அஸ்திவாரத்தோடு பெயர்க்கப் படுகிறது.

ஆனுல் ருஷ்யாவிலோ, இந்த வருஷங்களில் தான் வளர்ச்சியும் செழுமையும் ஏற்பட்டிருக்கின்றன. பொருளாதாரத் துறையிலும் கலைஞானத் துறையிலும் முன்னேற்றம் உண்டாயிருக்கிறது. அரசியல் சக்தியும் ராணுவ பலமும் அதிகப் பட்டிருக்கின்றன. உலகமெங்கணும் சமாதானம் நிலவவேண்டு மென்று இடைவிடாத முயற்சி செய்யப்பட்டு வந்திருக்கிறது.

1929ம் வருஷம் பிற் பகுதியில் முதலாளித்துவ நாடுகளில் ஒரு பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இது 1933ம் வருஷக் கடைசி வரையில் இருந்து கொண்டிருந்தது. இந்த நெருக்கடிக்குப் பிறகு ஒரு மந்தம் உண்டாயிற்று. பின்னர் கொஞ்சம் முற்போக்கு ஏற்பட்டது. ஆனுல் பொருளாதாரச் செழிப்பு ஏற்படவில்லை. அதற்கு மாருக 1937ம் வருஷப் பிற்பகுதியில் மீண்டும் ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இது, முதலில் அமெரிக்காவையும், பின்னர் பிரிட்டன், பிரான்ஸ் முதலிய பல நாடுகளையும் பாதித்தது. இதனுல், முதலா

ளித்துவ நாடுகள், ஒரு பொருளாதார நெருக்கடியி னின்று பூரணமாக மீள்வதற்கு முன்னர், மற்றொரு பொருளாதார நெருக்கடிக்குள் அகப்பட்டுக் கொண்டன. எனவே எல்லா நாடுகளிலும் வேலை யில்லாத் திண்டாட்டம் அதிகப்பட்டது. 1933ம் வருஷத்தில் எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் 3 கோடி பேர் வேலை யில்லா திருந்தனர். இவர்களின் தொகை 1937ம் வருஷத்தில் 140 லட்சம் பேருக்குக் குறைந்தது. இப்பொழுது, இந்தப் பொருளாதார நெருக்கடியின் பயனாக, வேலையில்லாதவரின் தொகை 180 லட்சம் பேராக உயர்ந்திருக்கிறது.

இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடி, இதற்கு முன் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளி னின்று மாறுபட்டது; அவற்றை விட மோசமானது. முதலாவது 1929ம் வருஷத்து நெருக்கடியைப்போல், ஒரு பொருளாதாரச் செழிப்பிற்குப் பிறகு ஏற்பட வில்லை. ஆனால் ஒரு நெருக்கடிக்குப் பிறகு அந்த நெருக்கடி யினின்று மீளுந் தருணத்தில் ஏற்பட்டிருக்கிறது. இதனால் இப்பொழுதைய நெருக்கடி மிகவும் கடுமையானதாக இருக்கும் என்பது உறுதி.

இரண்டாவது, சமாதான காலத்தில் இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்க வில்லை. ஏகாதிபத்திய யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இரண்டாவது வருஷத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஜப்பான், சீனாவோடு தொடுத்திருக்கும் யுத்தத்தின் விளைவாக, சீனாவின் மார்க்கெட்டைச் சீர்குலைத்து விட்டது. மற்ற நாடுகளும் சீனா மார்க்கெட்டுக்குள் நுழைய வொட்டாதபடி செய்து விட்டது. இத்தலியும், ஜெர்மனியும், தங்கள் தேசீய பொருளாதாரத்தை யுத்த முறையில் அமைத்து விட்டன. இந்த இரண்டு நாடுகளும் தங்களுடைய, மூலப்பொருள்களையும், அந்நிய நாட்டு மூலதனங்களையும், யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கென்று உபயோகப் படுத்தி யிருக்கின்றன. இதே மாதிரி மற்ற முதலாளித்துவ நாடுகளும் யுத்த தளவாடங்களைச் செய்து கொண்டு போவதில் தங்கள் பொருளாதார சாதனங்களை யெல்லாம் உபயோகித்து விடுகின்றன. இதனால் என்ன ஏற்படுகிறதென்றால் முதலாளித்துவமானது, தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு தற்போது குறைந்த சக்திகளையே பெற்றிருக்கிறது என்பது தெளிவாகிறது.

பிற நாடுகளை ஆக்ரமித்துக் கொள்வதாகிற நோக்கத்தைக் கொண்டிருக்கும் ஜப்பான், ஜெர்மனி, இத்தலி, ஆகிய நாடுகள் தங்களுடைய பொருளாதார சக்திகளை யுத்த முறையில் அமைத்திருப்பதாலும், யுத்த தளவாடங்களை அதிகமாக உற்பத்தி செய்து கொண்டிருப்பதாலும், அதிக உற்பத்தியினால் ஏற்படுகிற பாதகங்கள் அந்த நாடுகளில் காணப்படவில்லை. ஆனால் அந்த நிலைமையை யடைந்து கொண்டு வருகின்றன. இதனால், யுத்த நோக்கமில்லாத, ஆனால் பொருளாதாரத்தில் பலமாயுள்ள நாடுகள் தற்போதைய நெருக்கடியினின்று மீண்டதும், யுத்த நோக்கமுள்ள இந்த நாடுகளில்—அதாவது ஜெர்மனி, இத்தலி, ஜப்பான் ஆகிய நாடுகளில்-யுத்த ஜுரம் தணிந்ததும், பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்படுமென்பது நிச்சயம்.

ஜப்பான், இத்தலி ஆகிய இந்நாடுகளின் கைத் தொழில்கள் இப்போழுது இறக்கு முகத்திலேயே போய்க் கொண் டிருக்கின்றன. ஜெர்மனி

யும் இந்த இறக்கு முகத்திலேயே போகவேண்டிய நிலையையடைந்து வருகிறது. ஒரு நாட்டின் பொருளாதாரத்தை யுத்த முறையில் வைப்பது என்றால் என்ன அர்த்தம்? பொருளுற்பத்தி சாலைகள் யுத்த தளவாடங்களையே உற்பத்தி செய்ய வேண்டுமென்பதுதான். பொது ஜனங்களுக்குத் தேவையான பொருள்களின் உற்பத்தியைக் குறைத்துக் கொண்டு, யுத்தத்திற்குத் தேவையான பொருள்களை மட்டும் அதிகமாக உற்பத்தி செய்து கொண்டு போதல் என்பதுதான் அர்த்தம்.

இந்த மாதிரியான பொருளாதார நிலைமையானது, ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்கும்பகைமையை உண்டுபண்ணி வைப்பது சகஜந்தானே. இதற்குமுன் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது, அதிகமான மார்க்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தையும், மூலப்பொருள்களைத்தேடிப் பிடிக்கிற ஆவலையும் அதிகப்படுத்தி விட்டது. மஞ்சூரியாவையும் வடசீனாவையும் ஜப்பான் கைப்பற்றிக் கொண்டதும், இத்தலி அபிசீனியாவைக் கைப்பற்றிக் கொண்டதும், வல்லரசுகளிடையே ஏற்பட்டிருக்கும் போராட்ட மனப்பான்மையையே காட்டுகின்றன.

புதிதாக ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியானது, ஏகாதிபத்தியப் போராட்டத்தைத் தீவிரப்படுத்திக் கொண்டு வருகிறது. மார்க்கெட்டுக்களைக் கைப்பற்றிக்கொள்ளப் போட்டிபோடுவது, வர்த்தக யுத்தம், பிறநாடுகளில் பொருள்களைக்கொண்டு திணிப்பதுமுதலியவையெல்லாம் இப்பொழுது முக்கியப் பிரச்னைகளாக்கொள்ளப் படவில்லை. இந்த மாதிரியான போராட்டங்களெல்லாம் போதாவென்று சொல்லப் படுகிறது. இப்பொழுதெழுந்துள்ள பிரச்னை எல்லாம், உலகத்தை எவ்வாறு பகிர்ந்து கொள்வது, பொருளாதாரச் செல்வாக்கை எங்கெங்கு நாடுகளில் தேடிக்கொள்வது, ராணுவபலத்தைக் கொண்டு எங்கெங்கு குடியேற்ற நாடுகளை ஆக்கிரமித்துக் கொள்வது என்பது தான்.

இப்பொழுது நடைபெற்று வருகிற ஏகாதிபத்திய யுத்தமானது உலக யுத்தமாக இன்னும் மாறவில்லை. யுத்த நோக்கங் கொண்ட நாடுகள், யுத்த நோக்கமில்லாத நாடுகளின் உரிமைகளை—சிறப்பாக பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா முதலியவைகளை—பாதிக்கக் கூடியவையாயிருக்கின்றன. பிற கூறப்பட்ட நாடுகளோ, பின்னடைந்து போன வண்ணமாயிருக்கின்றன; சர்வாதிகார நாடுகளுக்குச் சலுகைமேல் சலுகை காட்டிக் கொண்டு வருகின்றன.

இங்கே ஒரு கேள்வி எழலாம். யுத்த நோக்கமில்லாத ஜனநாயக நாடுகள், அநேக விதமான சந்தர்ப்பங்களைப் பெற்றிருந்தும் ஏன் சர்வாதிகார நாடுகளுக்கு விட்டுக்கொடுத்த வண்ணமாயிருக்கின்றன? தங்களுடைய உரிமைகளையும், கடமைகளையும் ஏன் இழந்து வருகின்றன? பலஹீனம் காரணமாகவா? இல்லை. ஜனநாயக நாடுகளெல்லாம் ஒன்று சேர்ந்து கொள்ளுமானால், பொருளாதார சக்தியிலாகட்டும், ராணுவசக்தியிலாகட்டும், சர்வாதிகார நாடுகளை விட எவ்வளவோ மேன்மையான நிலையில் இருக்கின்றன. அப்படியானால் ஏன் இந்தத்திகைப்பு?

ஜனநாயக நாடுகள் யுத்தத்திலே இறங்க, அந்த யுத்தமானது உலக யுத்தமாக மாறுமானால், ஒரு புரட்சி ஏற்படுமே யென்று இவை—இந்த ஜனநாயக நாடுகள்—பயப் படலாம். கடந்த மகாயுத்தத்தின் போது, ஒரு பெரிய நாட்டில்—ருஷ்யாவில்—புரட்சி ஏற்பட்டு வெற்றிகரமாக முடிந்தது என்பதை முதலாளித்துவ மனம் படைத்த அரசியல் வாதிகள் மறந்துவிட வில்லையல்லவா? இதனால், மீண்டும் ஓர் உலக யுத்தம் ஏற்பட்டு அதன் விளைவாக இன்னும் பல நாடு களில் புரட்சி உண்டாகி வெற்றிகர மாக முடிந்தால் என்ன செய்வது என்று இந்த ஜனநாய்க நாடுகள் யோசிக்கலாம்.

ஆனால் தற்போது இது முக்கிய காரணமில்லை. உண்மை யென்ன வென்றால், யுத்த நோக்க மில்லாத பெரும்பாலான நாடுகள்—சிறப்பாக பிரிட்டனும் பிரான்ஸும்—எல்லா நாடுகளுடைய க்ஷேமத்தையும் பொது வாகக்கவனிப்ப தென்கிற முறையைக் கைவிட்டு விட்டு, தலையிடாத முறை யை அனுஷ்டித்து வருகின்றன. அதா வது நடுநிலைமை வகிப்பதாகக் கூறிக் கொண்டு ஒதுங்கி நிற்கின்றன.

இந்த நடுநிலைமைக் கொள்கை யிருக்கிறதே—அதாவது தலையிடாத கொள்கை—அதற்குப்பின் வருமாறு வியாக்கியானஞ் செய்யப்பட்டு வந்தது ஒரு காலத்தில்:—"ஒவ் வொரு நாடும், தன் விருப்பத் திற்கும் திறமைக்கும் தகுந்தவாறு சத்துருக்களி னின்று தன்னைக்காப் பாற்றிக் கொள்ளட்டும். அது மற்ற நாடுகளுக்குச் சம்பந்தமில்லை. தாக்கு கிறவர்களோடவும், தாக்கப்படுகிற வர்களோடவும் நாம் வியாபாரம் செய் வோம்". இதுதான் பழைய வியாக் கியானம். ஆனால் உண்மையில் அனுஷ் டானத்தில் நடைபெறுவ தென்ன வென்றால், போராட்டத்திலே முனைந் திருக்கிற நாட்டுக்குத்துணை செய்தல்; யுத்தம் நடைபெறுவதற்குத் துணையா யிருத்தல்; கடைசியில் இந்த யுத் தத்தை உலக யுத்தமாக மாற்றி விடுதல். இதுதான் தற்போது நடை பெற்றுவருகிறது. யுத்தம் நடத்துகிற வல்லரசுகளுக்கு எவ்வித தடையும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது தான் தலையிடாம லிருப்பதற்கு அர்த் தம். உதாரணமாக, சீனாவில் ஜப் பான் யுத்தந் தொடுத்திருப்பதைத் தடை செய்யாம லிருப்பது; அல்லது ருஷ்யாவோடு யுத்தந் தொடுக்க முயற் சிக்குமானால் அதைத் தடைசெய்யாம லிருப்பது; போருக்கு மார்தட்டி நிற்கும் தேசங்களை, இன்னும் யுத்தச் சேற்றிலே நன்றாக அழுந்துமாறு செய்தல்; அப்படி அழுந்துமாறு அவைகளை உற்சாகப்படுத்துதல்; ஒரு வர்க்கொருவர் போரிட்டு, இருசாரா ரும் பலஹீனமடைந்து போன பிறகு தாங்கள் மட்டும்—அதாவது நடு நிலைமை வகிக்கும் தேசங்கள் மட்டும்—புதிய பலத்தோடு முன்தோன்றி,—ஆமாம்; எல்லாம் சமாதானத்திற் குத்தான்!—போரிலே சளைத்துப் போயிருக்கும் தேசங்களுக்குச் சில நிபந்தனைகளை விதிக்கலாமல்லவா?

எவ்வளவு சுலபமான வழி!

உதாரணமாக ஜப்பானை எடுத்துக் கொள்ளுங்கள். ஜப்பான், வடசீனா வின்மீது, படைஎடுப்பதற்கு முன் னர், பிரான்சிலும் பிரிட்டனிலும் உள்ள செல்வாக்கான எல்லாப்பத்திரி கைகளும், சீனாவின் பலஹீனத்தைப் பற்றிப் பத்தி பத்தியாக எழுதின.

இரண்டு மூன்று மாதங்களில், சீனாவை ஜப்பான் அடிமை படுத்தி விடும் என்று முழக்கம் செய்தன. பின்னர் ஐரோப்பிய ராஜ தந்திரிகளும் அமெரிக்க ராஜ தந்திரிகளும் என்ன தான் நடக்கிறது, பார்ப்போம் என்று கவனித்து வந்தார்கள். பிறகு ஜப்பான், தன் ராணுவ பலத்தைச் கொண்டு சீனாவில் அந்நியர்களின் மூலதனம் நிரம்பி யிருக்கும் ஷாங்காய் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டது; பின்னர் காண்டன் நகரம்; அதற்கப்புறம் ஹைனான்; பிறகு ஷாங்காய். இப்படி வல்லரசுகள் ஒவ்வொன்றாக விட்டுக் கொண்டு வருவது எதைக் காட்டுகிறது? ஜப்பானை ஆதரிக்கிற மாதிரி யில்லையா? அதாவது 'யுத்தத்திலே இன்னும் ஆழமாகச் சிக்கிக் கொள்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று ஜப்பானைப் பார்த்துச் சொல்வது போலில்லையா?

இது போகட்டும். ஜெர்மனியை எடுத்துக் கொள்வோம். ஆஸ்திரியாவின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதாக ஜெர்மனி வாக்குறுதி கொடுத்திருந்தும் அதனை ஜெர்மனி விழுங்கி விட்டதை வல்லரசுகள் பார்த்துக் கொண்டிருந்தன. ஸுடேடென் பிரதேசத்தை விட்டுக் கொடுத்தன. ஜெக்கோஸ்லோவேகியாவையும் கைவிட்டன. இவைகளினால், இதற்கு முன் செய்து கொள்ளப் பட்ட எல்லா ஒப்பந்தங்களையும் இந்த வல்லரசுகள் புறக்கணித்து விட்டனவென்று சொல்ல வேண்டும். ஆனால் இதே சமயத்தில் இந்த மேற்கு வல்லரசுகளின் பத்திரிகைகள், ருஷ்ய ராணுவத்தின் பல ஹீனத்தைப் பற்றியும், ருஷ்ய ஆகாயப்படையில் ஒழுங்கீனம் ஏற்பட்டிருப்பதாகவும், ருஷ்யாவி லெங்கணும் உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டு வருவதாயும் என்னென்னவோ எழுதி வந்தன. இந்த மாதிரி எழுதி, இன்னும் கிழக்குப் பக்கமாகப் படை யெடுத்துச் செல்லுங்கள் என்று ஜெர்மனியைத் தூண்டி வந்தன. அதாவது 'போல்ஷ்வெக்கர்கள் மேல் யுத்தம் தொடுங்கள்; எல்லாம் சரியாகி விடும்' என்று சொல்வது போலிருந்தது.

சோவியத் உக்ரேன் பிரதேசத்தைப் பற்றி பிரிட்டிஷ், பிரெஞ்சு, அமெரிக்கப் பத்திரிகைகள் கிளப்பிய கூச்சல்கள் விநோதமானவை. ஜெர்மானியர்கள், சோவியத் உக்ரேன் பிரதேசத்தை நோக்கிப் படை யெடுத்துச் செல்கிறார்களென்றும், அதற்கு முதற்படியாக ஏற்கனவே கார்ப்பேதியன் உக்ரேன் பிரதேசத்தை ஆக்ரமித்துக் கொண்டு விட்டார்களென்றும் இந்த கார்ப்பேதியன் உக்ரேன் பிரதேசத்தில் 7 லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்களென்றும், கூடிய சீக்கிரத்தில் மூன்று கோடி ஜனத்தொகையுடைய சோவியத் உக்ரேன் பிரதேசத்தையும் ஆக்ரமித்து, கார்ப்பேதியன் உக்ரேனோடு சேர்த்து விடப் போகிறார்களென்றும் இந்தப் பத்திரிகைகள் கூறி வந்தன. இந்தக் கூச்சல்களின் மூலமாக ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் பகையை உண்டு பண்ண வேண்டுமென்பதே இவற்றின் நோக்கமென்பது நன்கு புலனாகிறதல்லவா?

கார்ப்பேதியன் உக்ரேன் என்கிற கொசுவுடன், சோவியத் உக்ரேன் என்ற யானையைச் சேர்த்து விடலாம் என்று கனவு காணக்கூடிய பைத்தியக் காரர்களும் ஜெர்மனியில் இருக்கலாம். அப்படிப் பட்ட பித்தர்கள் உண்மையிலேயே ஜெர்மனியில் இருப்பார்களானால் அவர்களுக்கு நமது

நாட்டிலே தகுந்த இடம் இருக்கிறது. அவர்களைப் புறக்கணித்து விட்டு உண்மையை நாம் கவனிப்போம். கார்ப்பேதியன் உக்ரேனுடன் சோவியத் உக்ரேனைச் சேர்த்துக் கொள்வதென்பது கேவலம் முட்டாள் தனமாக இல்லையா? இஃது எப்படி இருக்கிறதென்றால் கொசுவானது (கார்ப்பேதியன் உக்ரேன்) யானையிடம் (சோவியத் உக்ரேன்) வந்து, 'ஹா! சகோதரா! உனக்காக நான் நிரம்பவும் பச்சாதபப் படுகிறேன். நிலச் சுவான்தார்கள், முதலாளிகள், தேசிய அடக்குமுறை, பாஸிஸ்ட் எஜமானர்கள் முதலிய ஒன்றுமே இல்லாமல் நீ இருக்கிறாயே. என்னோடு சேர்ந்து கொண்டால் தான் கதி மோட்சம் உண்டு' என்று சொல்வதுபோல் இருக்கின்றது.

இன்னொரு விசேஷம். இந்த ஐரோப்பிய, அமெரிக்க ராஜதந்திரிகளும், சோவியத் உக்ரேன் மீது ஜெர்மனி படையெடுக்காததைக் குறித்து ஆசாபங்கமடைந்து, தங்கள் உண்மையான நோக்கங்களை மெதுமெதுவாக வெளியிடுகின்றன. இந்த ஜெர்மானியர்கள் கிழக்குப் பக்கமாகப்படையெடுத்துச் செல்வதை விடுத்து, மேற்குப் பக்கமாகத் தன் கவனத்தைத் திருப்பி, குடியேற்ற நாடுகள் தேவை என்று கேட்கின்றனவே என்று கூறுகின்றன. மேற்கு வல்லரசுகள் நடு நிலைமை வகித்து வந்ததன் நோக்கம் புலனாகிறதல்லவா? ருஷ்யாவின் மீது ஜெர்மனி படையெடுக்க வேண்டுமென்பதற்குச் சன்மானமாகத்தான், அதற்கு ஜெக்கோஸ்லோவேக்கியா பலி கொடுக்கப் பட்டு விட்டது என்று நாம் கருதலாமல்லவா? ஆனால் ஜெர்மனி, இவர்கள் நோக்கப்படி வரவில்லை.

சோவியத் ருஷ்யாவின் அந்நிய நாட்டுக் கொள்கை, மிகத் தெளிவாகவே இருக்கிறது. அது வருமாறு:—

1. நாம் சமாதானத்திற்காகவே இருக்கிறோம். எல்லா நாடுகளுடனும் வியாபார சம்பந்தத்தைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று விரும்புகிறோம். மற்ற நாடுகள் இதேமாதிரியான சம்பந்தத்தை நம்முடன் வைத்துக் கொண்டிருக்கிற வரையில், நம்முடைய உரிமைகளில் அவை தலையிடாதவரையில், நாமும் பிறநாடுகளுடன் சிநேக மனப்பான்மையே கொண்டிருப்போம்.

2. ருஷ்யாவின் எல்லைப் புறத்திலுள்ள எல்லா நாடுகளுடனும் சிநேகமாகவும் சமாதானத்துடனுமே வாழ விரும்புகிறோம். இந்தச் சுற்றுப்புற நாடுகள், நமக்கும் அவைகளுக்கும் பொதுவாயுள்ள எல்லைப் புறத்தை அத்துமீறிப் பிரவேசிக்காத வரையிலும், அந்த எல்லைப் புறத்தின் புனிதத்தன்மையைப் பாதுகாக்கும் வரை, நாம் அவைகளுடன் சிநேகமாகவே வாழ விரும்புகிறோம்.

3. பிற நாடுகளின் படையெடுப்புகளுக்கு இரையாகியுள்ள தேசங்களையும், சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கும் தேசங்களையும் நாம் ஆதரிக்கிறோம்.

4. யுத்த மனப்பான்மை கொண்டுள்ள தேசங்களைக் கண்டு நாம் அஞ்சவில்லை. சோவியத் எல்லைப் புறத்திற்குப் பாதகம் உண்டாக்குமாறு தூண்டுகிறவர்கள், ஒரு அடி கொடுத்தால், நாம் இரண்டு அடிகள் கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம்.

இவைதான் சோவியத் ருஷ்யாவின் அந்நியநாட்டு கொள்கைகள். இந்தக்

ஆப்ரிக்காவின் அழகு

—அரு. சொ

உலகத்தில் இப்பொழுது அழகுக்கு இருக்கிற கிராக்கியை சொல்லி முடியாது. அழகில் மோகங் கொள்ளாதார் யார்? இரண்டு வயதுக் குழந்தை முதல், 98 வயது கிழவன் வரை அழகு படுத்திக் கொள்ளவே நினைக்கின்றனர். கவிகள் காலமெல்லாம் அழகை வர்ணிப்பதில்தான் செலவிட்டிருக்கின்றனர். அழகு வாய்ந்தவளென்று ஒரு பெண்ணைச்

கொள்கைகளுக்குப் பின்வருவனவே ஆதாரங்கள் :—

1. ருஷ்யாவின் பொருளாதார, அரசியல், கலைஞானம் முதலியவற்றின் பெருக்கம்.

2. சோவியத் சமுதாயத்தின் அரசியல் ஒற்றுமை.

3. நமது நாட்டு ஜனங்களிடையேயுள்ள பரஸ்பர சிநேக மனப்பான்மை.

4. ருஷ்யாவின் ராணுவபலம்; கடற்படை பலம்.

5. சமாதானக் கொள்கை.

6. உலகத்தில் சமாதானம் நிலவ வேண்டுமென்று உலகத் தொழிலாளர்களுக்கு இருக்கிற சிரத்தையானது, ருஷ்யாவுக்கு ஆதாரவாயிருக்கிறது.

7. சமாதானத்தைக் குலைக்கக் கூடாதென்ற நாடுகளின் நல்லெண்ணம்.

ருஷ்யாவின் அந்நிய நாட்டுக் கொள்கை விஷயத்தில், பொதுவுடமைக் கட்சியின் வேலைகள் வருமாறு :—

1. சமாதானக் கொள்கையை நீடித்து அநுஷ்டிப்பது; எல்லா நாடுகளுடனும் இருக்கிற வியாபாரத் தொடர்பை வலுப்படுத்தல்.

2. யுத்த பீதியை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறவர்களுடைய கூச்சல்களுக்கு இரையாகாமல் மிக எச்சரிக்கையாயிருத்தல்.

3. ருஷ்யாவின் ராணுவத்தையும் கடற்படையையும் இன்னும் அதிகமாக வலுப்படுத்தல்.

4. உலக சமாதானத்திலும், எல்லாநாடுகளும் சிநேகப்பான்மையுடனிருக்க வேண்டுமென்கிற விஷயத்திலும் சிரத்தை கொண்டுள்ள உலகத்தொழிலாளர்களின் பாந்தவ்யத்தை அதிகரித்தல்.

சுட்டிக் காட்டிச் சொன்னால் போதும்; அவள் உள்ளங் குளிர்ந்து விடுகிறது. அடுத்த நிமிடம் அவளின் அழகைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்து விடுகிறாள். அழகுக்காக மனிதன் செலவிடும் பணம், வாழ்க்கைச் செலவில் பெரும் பகுதியாகி விட்டது. மேல் நாட்டிலுஞ் சரி, கீழ் நாட்டிலுஞ் சரி, பல தேசங்கள் அலங்காரப் பொருள்களை உற்பத்தி செய்து வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதே தொழிலாகக்கொண்டிருக்கின்றன. அலங்காரத்திற்கு பிறப்பிடமென்று சொல்லும் பாரிஸ் நகரில் அழகு, தினம் உருமாறிக்கொண்டே போகிறது. கலி கால அழகின் சிருஷ்டிகர்த்தாக்கள் வியாபாரிகள்தான். ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாரை அநாகரிகர்களென்றும், காட்டு மிராண்டிகளென்றும் கூறுகின்றனர். ஆனால் அந்த காட்டுமிராண்டிகளும் அழகை ஒருவிதமாய் உருவகப்படுத்தாமலில்லை. அவர்களும் அழகில் மயக்கங் கொண்டேயிருக்கின்றனர். காட்டு மிராண்டிகளும் அவர்களுக்குள் அழகான காதலன் காதலியைத் தேர்ந்தெடுத்தே கொள்கின்றனர். சர்வாதிகாரிகள் கூட காட்டு மிராண்டிகளை நாகரீகர்களாக்கி உலகத்தை அழகு படுத்த நினைக்கின்றனர். வெள்ளைத் தோலில் ஒரு அழகிருப்பதாகக்கண்டது முதல், கருப்புத் தோலுடையவர்களெல்லாம் காட்டு மிராண்டியாகி வருகின்றனர். கருப்பர்களுக்கு தன் தேசமென்று ஒன்று எப்பொழுதில்லையோ அப்பொழுதே அவர்கள் அழகுக்கும் அருகதையற்றவர்களாகி வருவதில் ஆச்சர்யமென்ன? அடிமைக்கு அழகு மட்டும் எப்படிச் சொந்தமாகும்? உலகம் மாறிக்கொண்டுவரும் நிலையில் அழகும் வர வர உன்னத நிலைக்கு வந்து கொண்டிருக்கிறதல்லவா? கட்டுமஸ்தான தேகத்தை உடையவர்களானாலும், நாகரீகப் பொருளால் அழகு படுத்திக் கொள்ள வில்லையேல், அவர் அழகில் குறைந்தவராகவேதான் மதிக்கப்படுகின்றனர். மேல் நாட்டு நாகரீகத்தில் மூழ்கிய இந்திய நாரீமணிகள்கூட அழகு படுத்திக் கொள்ளும் கருவிகள் நிறைந்த பையை கையோடு தூக்கிச் செல்லுகின்றனர். ஒரு கனவானின் வீட்டை நிலைக்கண்ணாடிதான் அலங்கரித்து நிற்கின்றது. திரும்பும் பக்கமெல்லாம் கண்ணாடி வேண்டிய நிலைக்கு அழகு உயர்ந்து விட்டதால், அடிக்கடி கண்ணாடி மூலம் அழகைச் சரி பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அழகை ஒருவிதமாய் நிறை போட்டு மதிக்கிற நாகரீகக் கூட்டம் ஒரு பக்கமிருந்தாலும், காட்டு மிராண்டுகளென்றழைக்கும் மற்றொரு கூட்டத்தாரும் அழகென்பதை மதித்தே வருகின்றனர். ஆதிகாலம் முதற்கொண்டு, அழகு படுத்தும் ஆபரணங்கள் அணிவதன் அடையாளங்களிலிருந்தே தான், ஜாதிப் பிரிவினைகூட ஏற்பட்டிருக்க வேண்டும். தினம் உருமாறும் நாகரீகர்களைப் போலல்லாமல், காட்டுமிராண்டிகள் தங்கள் வகுப்புக்கென்று நிர்ணயித்து வைத்திருக்கும் ஆபரணங்களையும் உடைகளையும் விட்டு மாறுவதே இல்லை. அதோடு அவர்கள் இயற்கையான வஸ்துக்களையே ஆபரணமாக அணிகின்றனர்.

இந்திய ஜாதியைத்தான் எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் ஆசாரத்திற்குத் தகுந்த ஆபரணங்களைப் பூண்டே அழகு படுத்திக் கொள்ளுகின்றனர். அழகில் கரை கண்ட மேல் நாட்டாரை எடுத்துக் கொண்டாலும்,

ஒவ்வொரு தேசத்தாரும் ஒவ்வொரு விதமாகவே அலங்கரித்துக் கொள்கின்றனர். ஆனால், அவர்கள் எல்லோரும் நாகரீகர்களானதால், ஒருவர்க்கொருவர் கேலி செய்து கொள்வதில்லை. அந்த அலங்காரம் அவர்கள் சீதோஷ்ண நிலைக்குப் பொருத்தமென்றே கருதப்படுகின்றன. குளிர் மிகுந்த தேசத்து நாரீமணிகள் அரையாடையுடனே காட்சி கொடுக்கின்றனர். அதுதான் நாகரீகத்தின் உச்சநிலையாம். ஆனால், பூமத்திய ரேகையிலுள்ள சுதேசி, கௌபீனதாரியாகத் திகழ்வது காட்டுமிராண்டித்தனமாம். காட்டுமிராண்டித்தனத்துக்கோ, அல்லது அழகுக்கோ எல்லை ஒன்று இல்லையானால், அவரவர்கள் கற்பனைக் கேற்றவிதம் அழகு செய்து கொள்வதில் கேலிக்கிடமேது? இருண்ட வனமென்று சொல்லப்பட்ட ஆபிரிக்கா கண்டம், யாருக்குச் சொந்தமென்று ஒரு மாணவனைக் கேட்டால், இங்கிலீஷ்காரருக்கு என்று சொல்வான். அல்லது, இத்தலிக்காரருக்கு என்று சொல்வான். இன்னுங் கொஞ்சம் விரிவாகக் கேட்டால், வெள்ளையர்களுக்குச் சொந்தமென்று மொத்தமாகச் சொல்லி விடுவான். பொதுவாகப் பார்க்குமிடத்து, எந்த தேசந்தான் வெள்ளையருக்கு சொந்தமல்லாதது? அவர்களுக்கு சொந்தமாக இருக்கும்? அல்லது, அவர்கள் வாழும் உரிமை பெற்றிருப்பார்கள்? பாபகிருத்தியம் செய்தவர்களெல்லாம் உலகத்தில் அடிமையாகப் பிறக்க வேண்டுமென ஒரு சாபத் திடு ஆண்டவனால் ஏற்படுத்தப்பட்டு அதை நிறைவேற்றும் பொருட்டுத்தான் இந்த உலகில் கருப்பர்களாக நாம் வாழ்கிறோமா? அப்படியானால் வெள்ளை நிறமுடைய யூதருக்கு வந்திருக்கிற சாபத் திடும் நம்மோடு போட்டி போடுகின்றதே! பாவம்! அவர்களாவது தேசமில்லாதவர்கள். நமக்கு என்னமோ, மனிதர் தோன்றிய நாளாக தேசமிருக்கத்தான் செய்கிறது. வாழும் உரிமையும், சுதந்தரமும் தான் மறுக்கப்படுகின்றன.

இருண்டவனத்திற்கு ஞாயப்படிச் சொந்தக்காரர்கள் நீக்ரோவர்கள் என்பதை நாம் அறிந்தே இருக்கிறோம். ஆனால், அவர்கள் உலகத் தொடர்பற்றவர்களாகையால் அவர்களைச் சரிவர நாம் எப்படி அறிந்திருக்க முடியும்? அவர்களை உங்கள் முன்னிலைப் படுத்துவதும் அவர்களின் அழகின் விசித்திரங்களை உங்கள் கவனத்துக் கொண்டு வருவதுந் தான் இந்த வியாசத்தின் நோக்கம். இந்த விசித்திரமான மனிதர்களின் கூட்டாளிகள் ஆப்பிரிக்கா கண்டத்தில் அதிகம். அந்தக் கூட்டாளிகளென்ற மிருகங்கள்தான் அவர்களுக்குக் கூட்டாளிகளும், உணவும், தெய்வமுமாகும். அந்தக் கூட்டாளிகள் இல்லையேல் நம் கதா நாயகர்கள் அங்கு வாழவே முடியாது. ஆப்பிரிக்கா கண்டத்தைத் தரை மார்க்கமாக ஊடுருவிச் சென்றவர்களை இல்லை என்றால், எவ்வளவு அடர்ந்த வனங்கள் அங்கு நிறைந்திருக்க வேண்டும்! இவ்வளவு அடர்ந்த காடுகளில் மிருகங்களுக்கு ஏன் பஞ்சமிருக்கப் போகிறது? கண்டபடி பெருகிக் கிடக்கும் ஒவ்வொரு மிருக ஜாதியும் அங்குக் கூட்டம் கூட்டமாகவேதான் வசிக்கும். ஒவ்வொரு கூட்டத்திலும் ஆயிரக்கணக்கான ஒரே ஜாதி மிருகங்களாகவே இருக்கும். இந்த மிருகக்கூட்டங்கள் எங்கெங்கு பிரயா

ணம்செய்கின்றனவோ, அங்கெல்லாம் ஆப்பிரிக்கச் சுதேசிகளும், தங்கள் வாசஸ்தலத்தை மாற்றிக் கொண்டே போவார்கள். இன்னும் மிருகங்களின் உணவையே உண்டு வாழும் சுதேசிகள் அதிகமாகத் திகழ்ந்த போதிலும், வெள்ளையர் கைக்கு வருமுன், ஆப்பிரிக்காவில் மிருக உற்பத்திக்குக்கணக்கே இல்லை. வெள்ளையர் வந்து காலடி வைத்தது முதல் தினே தினே நசித்துக் கொண்டு வரும் மிருகங்களும், சுதேசிகளும், ஒருபடியாக பூண்டற்றுப் போகாமல் இருப்பது ஆண்டவன் அதிசயங்களி லொன்று. இந்த அதிசய நாட்டில்தான் காந்தி மகான் வாழ்க்கை நடத்தியது. அரசியலில் ஆபிரிக்க காலனி கிடந்து அடிபடும் இத்தருணத்தில், ஆப்பிரிக்காவைத் தெரியாத வாசகர்கள் அதிகமிருக்கமாட்டார்கள். ஆனல் ஆப்பிரிக்கா செல்லாத வாசகர்களிருக்கலாமல்லவா? ஆப்பிரிக்கா சென்று வந்த வாசகர்களிருந்த போதிலும் கூலிகளாகவும் வயிற்றைக் கழுவும் நிலையிலும் வாழ்க்கை நடத்தி வந்த தமிழர்கள் ஆப்பிரிக்க ஜாதியின் ஆராய்ச்சியில் எங்கே இறங்கி இருக்கப்போகின்றனர்? சுரண்டும் பொருள் அதிகமிருக்கும் நாடானலும், அதிருஷ்டமில்லாத ஜாதிக்கு சுரண்டும் உரிமை ஏது? ஆற்று நிறைய ஜலம் போய்க் கொண்டிருந்தாலும், நாய், தன் நாக்கின் அளவுதான் கொள்ள முடியும். இந்திய ரத்தத்தை வியர்வையாகச் சிந்தி பண்படுத்தப்பட்ட தேசங்களெல்லாம் இன்று, இந்தியக் காற்றடிக்கச் சம்மதிக்கவில்லை. மேனித் தொடர்பு கூட நமக்கு இல்லை. மேனித் தொடர்பு வேண்டுமென்றல் ஆப்பிரிக்கச் சுதேசிகளை வேண்டுமானல் நம்மோடு சேர்த்துக்கொள்ளலாம். அதற்கும் 'மேலா'வின் உத்திரவு வேண்டுமே!

இன்னமும் நம் வாசகர்களை பூர்வாசி ரமத்திலே வைத்து சோதிப்பது அழகாக இருக்க மாட்டாதல்லவா? அழகை ஆதாரமாகக் கொண்டெழுந்த வியாசம் வாசகர்களின் வருத்தத்தை கிளப்பி விகாரத் தோற்றமடையச் செய்வது வியாச கர்த்தா கொண்ட கருத்தல்லவே. ஆகையால், இதோ பாருங்கள். ஆப்பிரிக்காவின் அழகை. ஆபிரிக்கா சுதேசிகளை மொத்தமாக அழைத்தால் நீக்ரோக்க ளென்று தான் சொல்லவேண்டும். அந்த நீக்ரோக்களில் அநேகம் பிரிவுகளிருக்கின்றன. அதில் வாகம்பா ஜாதி ஒரு பிரிவினர். படத்தில் காணும் வாகம்பா மங்கை எவ்வளவு நாசூக்காக ஆபரண மணிந்திருக்கிருள்! இவளின் சுருட்டை மயிரை இதற்குமேல் வளரவிடுவதில்லை. கருத்த மேனியில் எவ்வளவு களை! இந்த திடகாத்திரமுள்ள நங்கையர் கடுமையான வெயிலில் எத்தனை மைல் வேண்டுமானலும் சளைக்காமல் நடப்பார்கள்.

குக்குயூ ஜாதிப்பெண்கள் கழுத்தில் ஒரே ஒரு வளையம் மாதிரியுள்ள ஆபரணத்தை மட்டும் பூண்ட போதிலும், காதுகளில் வீசைக் கணக்கான வளையங்களைத்தொங்க விட்டு கொள்கின்றனர். வளையத்திற்கு சுதந்திரம் கொடுத்தால் காது அறுந்து போகுமென்று நினைத்து நாடாவைக் கொண்டு மண்டையைச் சேர்த்து சுற்றப் பட்டிருக்கிறது. இம்மாதின் மண்டையை வழு வழுவென சிறைத்திருப்பதை பார்த்தால் திருப்பதிக்கு முடி செலுத்திய தென்னிந்திய பெண்களைப் போலில்லையா? இவர்கள் ஜாதியில் முடி செலுத்தும் வழக்கமில்லை.

யானாலும் மயிரை வளர விடாது அடிக்கடி க்ஷவரம் செய்து கொள்கின்றனர். கூந்த லழகிகள் என்று பெயர் படைத்த மாதர்கள் க்ஷவரஞ் செய்து கொள்வது உங்களுக்குச் சிரிப்பாக இருக்கலாம். அவர்கள் அழகை உயர்த்திக் கொடுப்பதில் க்ஷவரஞ் செய்து கொள்வ தொன்று என்பதை அறிந்தால் என்னைப்போல் உங்களுக்கும் சிரிப்பு வராதல்லவா? இந்த மாதின் பல்லழகைப் பார்த்தீர்களா? கருப்பு உருவத்திற்கு முத்துப் போலுள்ள பல், அழகை எடுத்துக் காட்டுகிற மாதிரி இல்லையா?

கணக்கற்ற ஆபரணங்களை அணிந்து காட்சி கொடுக்கும் குக்குயூ ஜாதி தலைவனுக்கு, குக்குயூ ஜாதியார் அபாரமான மரியாதை செலுத்துகின்றனர். நாகரீக உலகிலுள்ள பைத்தியக்காரன் மாதிரி ஆபரணம் பூண்ட இந்தத் தலைவன் தான் குக்குயூ ஜாதியின் தலையெழுத்தை நிர்ணயிக்கிறவன். ஐக்கியமாகாண பெண்கள் மாதிரி மணிக்கட்டு வரை காப்புகளை அணிந்திருந்த போதிலும் அந்தக்கையின் உறுதிக்காகத்தான் குக்குயூ வர்க்கம் நடுங்குகிறது. காட்டுமிராண்டிகள் என்று சொல்லும் மக்கள், தலைவன் இட்ட கோட்டை தாண்டுவதில்லை என்றால், கட்டுப்பாட்டின் உட்கருத்து காட்டுமிராண்டிகளிடந்தான் பதிந்திருக்கிறதுபோலும்.

குக்குயூ ஜாதிக் குழந்தையை பார்த்தீர்களானால் கிருஷ்ண விக்கிரகம் மாதிரி இருக்கும். காட்டுமிராண்டிகளும் தங்கள் குழந்தையை எவ்வளவு அலங்காரம் செய்கிறார்கள்! இந்த குழந்தையில் அவர்கள் அழகைக்காணவில்லை என்றால் மணிக்கொருதரம் சும்மாவா கொஞ்சுகிறார்கள்? இவனுடைய அறிவையும் சாணை கொடுத்தால் நாகரீகக் குழந்தைகளை தோற்கடித்துவிடுவான்.

எதியோப்பியா யுத்தத்திற்கப் புறம் சோமாலிலாந்தைப் பற்றி வாசகர்கள் நன்கறிந்திருக்கக்கூடும். சோமாலி மங்கையர்கள் வெள்ளை ஆடை உடுத்திய போதிலும் அவர்கள் கழுத்தணி, மார்புவரை அலங்கிர்தமாகத் திகழ்வது ஒருசோபிதத்தைக் கொடுக்கும். இந்தக்கழுத்தணி உயர்ந்த வேலைப்பாடுடையது. சோமாலி மங்கையர் தலைமயிரைக் கத்தரித்துவிட்டிருப்பது மிகவும் ஒய்யாரமாக இருக்கும்.

கோல்டு கோஸ்டிலுள்ள அக்ரா ஹிண்டர்லாந்து மங்கையர், கௌபீனதாரியாக இருப்பதைத் தான் விரும்புகிறார்கள். பாதம்வரை தொங்கிக் கொண்டிருக்கும் கௌபீனம் அதிகவேலைப்பாடுடையதாக இருக்கும். மணிக்கட்டுக்கு மணிக்கட்டுஇந்தப் பெண்கள் ஆபரணம் பூணுவது வழக்கமாக இருந்தபோதிலும் நிரம்ப மிதமாகவே இருக்கிறது. இந்தப் பெண்ணைப் பார்த்து நாகரீகமில்லாதவளென்றோ அழகில் குறைந்தவளென்றோ இவள் பாஷையால் சொல்லுவீர்களானால் இந்தக்கூட்டம் உங்களை கைலாயத்திற்கு அனுப்பிவிட்டுத்தான் மறுஜோலி பார்க்கும்.

பண்டு ஜாதியும் நிலோடிக் நீக்ரோ ஜாதியும் கலந்த இந்தப் படத்தில் காணப்படும் தம்பதிகள் எவ்வளவு உல்லாசமாக இருக்கின்றனர்! ஆண்கள் தேகத்தை மூடிக் கொள்ளும்படியான உடையணிந்த போதிலும், பெண்கள் அவர்கள் அணியும் திருவாபரணத்தோடே உடையைப்பற்றி திருப்தி யடைந்து விடுகின்றனர்.

வேலைப்பாடுடைய இந்த ஆபரணங்கள் எந்தத் தேசத்திலிருந்தும் இறக்குமதி செய்யப் பட்டதல்ல. இந்த அலங்கிர்த தம்பதிகளுக்கு வேட்டைப் பண்டங்கள் அகப்பட்டு விட்டால் போதும். வேறு இவர்களுக்கு என்ன கவலை வேண்டும்? மறு உலகத்தைப்பற்றியோ இந்த உலகத்தின் மாருட்டங்களைப் பற்றியோ நினைப்பில்லாத இந்தத் தம்பதிகளின் தேகம் எவ்வளவு கட்டுமஸ்தாக இருக்கிறது! கூனல் முதுகை உடைய நாகரீகர்கள்தான் அழகில் சிறந்தவர்களென்ருல் கட்டுமஸ்தான காட்டுமிராண்டிகளுக்குக் கடவுள் தான் தீர்ப்புக் கூறவேண்டும்.



............வாகம்பாமங்கை எவ்வளவு நாசூக்காக ஆபரணமணிந்திருக்கிருள்....................

......குக்குயூ ஜாதிப் பெண்கள்—
...காதுகளில் வீசைக் கணக்கான
வளையங்களை தொங்க விட்டுக்
கொள்கின்றனர்..............................

...........பைத்தியக்காரன் மாதிரி
ஆபரணம் பூண்ட இந்த தலை
வன் தான் குக்குயூ ஜாதியின்
தலை எழுத்தை நிர்ணயிக்கிற
வன்..........



....குக்குயூ ஜாதி குழந்தை யைப் பார்த்தீர்க ளானல் கிருஷ்ண விக்கிரஹம் மாரிதி இருக்கும்...........

சோமாலி மங்கையர் தலைமயிரைக் கத்தரித்து விட்டிருப்பது மிகவும் ஒய்யாரமாக இருக்கும்.

அக்ரா ஹிண்டர் லாந்து மங்கையர் கௌபீன தாரியாக இருப்பதைத்தான் விரும்புகிறார்கள்.

பண்டு—நிலோடிக் தம்பதிகள் எவ்வளவு உல்லாசமாக இருக்கின்றனர்.

'நமக்கு அழகான இடம் வேறில்லை'

ஸ்ரீ ஜான் லட்விக் ருனிபெக்

(தமது ஸ்வீடன் தேசத்தைப்பற்றிப் பாடுகிறார்)

மொழி பெயர்த்தவர்:—பொ. திருகூட சுந்தரம் M. A., B. L.

நமக்கு அழகான இடம் வேறில்லை.
இந்த நமக்குத் துறை வொன்று மில்லை.

நமக்கு விதி எது தரினும் சரி:
நமக்குச்சொந்தமாக உளது இது.

அன்பு செய்ய—ஐசுவர்யமாய் மதிக்க
உலகில் இதைவிட—உயர்ந்தது எது?

நீர்நிலைகள் நிறைந்த நாடே.
பாட்டும் மெய்யும் நிரம்பிய நாடே.

வாழ்வின் அலைகட்கு அஞ்சா நாடே.
எங்கள் தந்தையர் நாடே.

எங்கள் தனையர் நாடே.
வறுமைக்கு நாணற்க,
ஆனந்த சுதந்திரமாய் வாழ்க!

கனவோ? நினைவோ?

—"வருணன்"

(சென்ற மாதத்தொடர்ச்சி)

நர.—டைம் ஆய்விட்டதே. பிறகு பேசிக் கொள்ளலாமே. டிக்கட்டை வாங்கி விட்டால்—(இதற்குள் சேவகன் பன்னிரண்டு டிக்கட்டுகளைக் கொண்டுவந்து அச்சுத ஐயர் கையில் கொடுத்தான்.)

நர.—எல்லாம் தர்ட்கிளாஸ் டிக்கெட்டா வாங்கினீர்கள்?

அச்.—ஆம்.

நர.—எனக்கு?

அச்.—உனக்கும் சேர்த்தே வாங்கியிருக்கிறேன்.

நர.—நான் இரண்டாவது வகுப்பு வண்டியிலன்றோ பிரயாணம் செய்ய வேண்டும்?

அச்.—எந்தச் சட்டத்தில் அங்ஙனம் கூறப்பட்டிருக்கிறது?

நர.—இல்லாவிட்டால் நான் வரவில்லை.

அச்.—வராவிட்டால் யாருக்கு நஷ்டம்?

நரசிம்மன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். என்ன செய்வதென்று அவனுக்குத் தோன்றவில்லை. தனக்குள்ளேயே சிறிது நேரம் முணுமுணுத்துக்கொண்டான். இதற்குள் முதல் மணி அடிக்கப்பட்டது. கடைசியில் அச்சுத ஐயர் மூன்றாவது வகுப்பு டிக்கட்டொன்றைச் சேவகனிடம் கொடுத்து அதை மாற்றி இரண்டாவது வகுப்பு டிக்கெட்டொன்று அவசரமாக வாங்கி வரும்படி உத்தரவு செய்தார். நரசிம்மனைத் தவிர மற்றவர்களை மூன்றாவது வகுப்பு வண்டியொன்றில் ஏற்றினார். தமக்கும் ஓர் இடம் பிரத்தியேகப்படுத்திவைக்கும்படி கூறிவிட்டு பிளாட்பாரத்தின் மீது உலாவிக்கொண்டிருந்தார். இதற்குள் இரண்டாவது வகுப்பு டிக்கட்டொன்றை வாங்கிக்கொண்டு சேவகன் ஓடிவந்தான். அதனைப் பெற்றுக்கொண்டு அச்சுத ஐயர் நரசிம்மனிடம் வந்தார். இரண்டாவது வகுப்பு வண்டியொன்றில் ஏறிக்கொள்ளச் சொல்லி டிக்கட்டை அவன் வசம் கொடுத்தார். 'ஜாக்கிரதை. இரவில் தூக்கமயக்கத்தில் டிக்கட்டை எங்கும் விட்டு விடாதே' என்று அரிய மகனுக்குப் புத்திகூறிவிட்டுத் தம் இருப்பிடத்திற்குச் சென்றார்.

ஊருக்கு யாரார் வருகின்றனர் என்பதைப்பற்றியாவது, தகப்பனார் உத்தியோக சாலையிலிருந்து வர எந்நேரமாயிற்று என்பதைப்பற்றி

யாவது, தகப்பனார் தாயார் முதலியோர் எங்கு ஏறிக் கொண்டிருக்கின்றனர் என்பதைப்பற்றியாவது நரசிம்மன் அச்சுத ஐயரை ஒரு வார்த்தையும் கேட்கவில்லை. தன் சௌக்கியத்தையே அவன் பார்த்துக் கொண்டான். இரண்டாவது வகுப்பு வண்டியிலேறிக் கொண்ட நரசிம்மன், தகப்பனார் சென்றதும் ஒரு சிகரெட்டை வாயில் பற்றவைத்துக் கொண்டு யோசனை செய்ய ஆரம்பித்து விட்டான்.

அச்சுத ஐயரோ, உத்தியோக சாலையில் அன்று அதிக வேலையிருந்தபடியால் வீட்டிற்குக் கூட வர முடியாமல் நேரே ஸ்டேஷனுக்கு வந்துவிட்டாராதலின் வயிற்றுக்கு எவ்வித ஆகாரமும் எடுத்துக் கொள்ளவில்லை. நரசிம்மனிடமிருந்து தம்முடைய மூன்றாவது வகுப்பு வண்டியண்டை வந்து நின்றார். மதுராம்பாள் 'வயிற்றுக்கு என்ன செய்தீர்கள்?' என்று கேட்டாள். 'ஒன்றுமில்லை' என்று அச்சுத ஐயர் பதில் கூறலும் 'ஏதாவது பழமாவது வாங்கிக் கொள்ளுங்கள்' என்று மதுராம்பாள் சொன்னாள். அங்ஙனமே ஐயர் சில பழங்கள் வாங்கிக் கொண்டு வண்டியில் ஏறினார். வண்டியும் சரியான மணிக்குப் புறப்பட்டுவிட்டது. தென்னிந்திய இருப்புப்பாதை வண்டியின் வேகத்தைச் சொல்லவும் வேண்டுமோ? மாதம் காத வழி போகும் என்று கூறுவது தென்னிந்திய இருப்புப்பாதையைப் பொறுத்த மட்டில் சிறிது பொருந்தாதாயினும் மணிக்குக் காத வழி என்று கூறுவதேனும் பொருந்தும்.

வண்டியில் ஏறின அச்சுத ஐயர் இரண்டு பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டே நரசிம்மனைத் தாம் அருமையாக வளர்த்ததைப் பற்றியும், அவன் பெற்றோரிடத்தில் எள்ளளவு நன்றியும் காட்டாது பாராமுகமாய் இருப்பதைப் பற்றியும் பலவிதமாக யோசனை செய்து கொண்டே கும்பகர்ணனுக்குச் சீட்டெழுதி விட்டார். வண்டியும் வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது.

II

திருநெல்வேலி முழுவதும் ஏக சக்ராதிபத்தியம் செலுத்திக் கொண்டிருக்கும் ஆபத்சகாய ஐயருடைய மகளுக்கு விவாகம் நடக்கிறபடியால் அந்த ஜில்லாவிலுள்ள கிராம முனிசீப்புகளுக்கும் கணக்குப் பிள்ளைகளுக்கும் போலீஸ் இலாகாவிலுள்ள கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுக்கும் ஓய்வே இல்லை. வத்சலை அம்மாளின் திருமணத்திற்காக கறி காய்கள் சேகரிப்பவரும், பந்தல் போடுவதற்குரிய சாமான்களைத் திரட்டுவோரும், சம்பந்திகளும் வேறு உத்தியோகஸ்தர்களும் தங்குவதற்கென்றுத் தனித்தனியாக விடுதிகள் அமைப்போரும், மாப்பிள்ளைக்குக் கொடுக்க வேண்டிய வெள்ளிச் சாமான்களையும் துணி மணிகளையும் கடைக்குச் சென்று ஆய்ந்தாய்ந்து பார்த்து வாங்குவோரும் இங்ஙனம் பலர் 'தத்தமக்கென்று பிரத்தியேகப் படுத்தப்பட்ட வேலையில் மும்முரமாக இறங்கி உழைத்து வந்தனர். விவாகத்திற்கென்று வந்திருந்த பெண்களில் முக்கியமானவர்கள் ஜான்வாசத்தன்று இரவு என்ன சமையல் செய்யலாமென்பதைப் பற்றியும் முகூர்த்தத்திற்கு முன்னிரவே நிச்சயதார்த்தம் செய்துவிடலாமா அல்லது முகூர்த்தத்தன்று காலையிலேயே நடத்தலாமா'வென்

பதைப்பற்றியும், சம்பந்திகளுக்குச் செய்ய வேண்டிய மரியாதைகளைப் பற்றியும் வாதம் செய்து கொண்டிருந்தார்கள். விவாகம் நான்கு நாட்களிலும் வேளையில் நன்றாக உண்டு விட்டுச் சீட்டாட வந்த சில பெரிய மனிதர் பெண்ணின் பெருமையைப் பற்றியும் பிள்ளையின் சிறுமையைப் பற்றியும் பலவாறு வருணித்துக் கொண்டிருந்தனர். மாப்பிள்ளை பரதேசிகோலம் புறப்படுவதற்கு முன்னர் க்ஷவரம் செய்து கொள்ளும் போது வெள்ளியாலாய அடைப்பம் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றும் அதுவே இப்பொழுது பெரிய இடங்களில் அநுசரிக்கப்படும் முறையென்றும் கூறுவோர் பலர்; அது வழக்கமில்லை யென்று பேசுவோர் வேறு சிலர்; மாப்பிள்ளை நலங்கு முதலிய அநாகரிகங்களுக்கு உட்பட மாட்டானென்றும் அவன் பெரிய 'மிலிடெரி' என்றும் பகர்வார் மற்றொரு சிலர்.

ஆபத் சகாய ஐயர், தமது பெண்ணின் விவாகத்திற்குச் சுமார் பதினைந்து தினங்களுக்கு முன்னர், தம்முடைய தயவுக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அனைவரையும் ஒருங்கு கூட்டி, தம் குமாரத்தியின் விவாகத்திற்கென்று தாம் ஒரு பைசா கூட செலவழிக்கப் போவதில்லை யென்றும் எல்லாச் செலவுகளையும் அவர்களே பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் பகிரங்கமாகவே தெரிவித்துவிட்டார். ஆபத் சகாய ஐயரிடத்தில் எப்பொழுதும் வெளிப்படையாகச் சொல்லும் குணம் உண்டு. அவர் எதையும் ஒளிக்கமாட்டார். லஞ்சம் வாங்கும் உத்தியோகஸ்தரிற் சிலர் தாமே நேரில் வாங்காமல் வீட்டில் பெண்டுகளிடத்தில் கொடுக்கும்படி உத்திரவு செய்வர். ஆபத்சகாய ஐயர் அந்தத் தீய வழக்கத்திற்குப்போகவே மாட்டார். யார் எதைக் கொடுத்த போதிலும் அதைத் தாமே நேரில் வாங்கிக்கொள்வார். தம் நண்பரிடத்தில், தமக்கு இந்த மாதத்தில் இவ்வளவு மேல் வரும்படி வந்ததென்று கூசாமல் கூறுவார். ஆபத்தென்று ஒருவன் வந்தால் அவனுக்கு உடனே எவ்விதத்திலாவது சகாயம் செய்யும் அரிய குணம் ஐயரிடத்தில் அதிகமாக உண்டு. 'தங்களுக்கு ஆபத் சகாய ஐயர் என்று பெயர் வைத்தவர்களைப் போற்றுகிறோம்' என்று யாரேனும் கூறினால் அப்பொழுது ஐயருக்கு உண்டாகும் ஆனந்தத்தை அளவிட முடியாது. இங்ஙனம் தன்னரசு செலுத்தி வந்த ஆபத்சகாய ஐயருடைய புத்திரிக்கு விவாகம் சமீபித்து விட்டதால் அவருடைய ஆணைக்கஞ்சி நடக்கும் பல கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய செலவைச் சுருக்கி அதனால் மிகுந்த பணத்தை ஐயரவர்களுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்தார்கள். விவாகம் நடப்பதற்கு இரண்டுநாள் முன்னுடியே, ஆபத்சகாய ஐயர் எதிர்பார்த்ததைவிட அதிகமான சாமான்களும் பணமும் வந்து சேர்ந்து விட்டன.

தமக்கு இவ்வளவு செல்வாக்கும் பணமும் கௌரவமும் இருந்தபோதிலும் ஆபத்சகாய ஐயருக்கு ஒரு குறை மாத்திரம் இருந்து கொண்டே இருந்தது. ஐயருடைய தருமபத்தினி வத்சலையைப் பெற்ற ஏழாவது நாளில் உயிர் துறந்தாள். அது முதல் ஐயர் மறுவிவாகம் செய்து கொள்ள வில்லை. மேற்பார்வையாகச்,

சில இடங்களில் போக்கு வரத்து வைத்துக்கொண்டிருந்தாரே யன்றி எவரையும் தாலி கட்டி மணம் செய்து கொள்ளவில்லை. வத்சலையைத் தாயில்லாக் குழந்தையென்று மிக்க அன்புடன் வளர்த்து வந்தார். தாயால் வளர்க்கப்படாத குழந்தைகளுக்கு நல்ல குணங்கள் படிவது அருமை. மேலும் வத்சலையின் தகப்பனார் ஆங்கிலேயரைப் போலவே ஏறக்குறைய தம் வாழ்க்கையை நடத்தி வந்தாராதலின் அவருடைய குமாரத்தியும் ஆங்கிலேயப் பெண்ணாகவே பார்வைக்குக் காணப்பட்டாள். அவளுடைய நடை, உடை, பாவனை முதலியன யாவும் ஆங்கில முறைப்படியே இருந்தன. அவளுக்கு இந்திய உணர்ச்சியே இராமலிருந்தது. வத்சலைக்கு இப்பொழுது பதின்மூன்று வதுவயது நடக்கிறது. பார்வைக்குமிக அழகாகக் காணப்பட்டாள். வத்சலை சிவந்த மேனியள்; நீண்ட கூந்தலையுடையவள். அவ்வழகிய கூந்தலை ஐரோப்பிய மாதர்களைப் போல் இரட்டையாகப் பின்னித் தொங்க விட்டுக்கொண்டிருப்பாள். விவாகமாகாத கன்னிகையாதலினால் முழங்காலுக்கு மேல் ஐரோப்பியரைப் போல் பாவாடை கட்டிக்கொண்டிருப்பாள். அவளுடைய மேற் சட்டையும் ஐரோப்பிய மாதிரியாகவே இருக்கும். அவளைத் திடீரென்று யாரேனும் பார்த்தால், ஐரோப்பிய ஸ்திரீ என்றே அவர் நிச்சயித்துக் கொள்வர். இந்த நிலைமையிலிருந்த போதே வத்சலையை நரசிம்மன் தன்னுடைய பெற்றோர்க்குத் தெரியாமல் திருநெல்வேலிக்கு வந்து சந்தித்துப் போனான். வத்சலை, ஐரோப்பிய மாதிரியில் இருந்தமையாலேயே, நரசிம்மன் அவளை விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான். நரசிம்மன் முதன் முதலாக வத்சலையைச் சந்திக்க வந்த போது அவனை, வத்சலையே நேராகக் கைலாகு கொடுத்து வரவேற்று உபசரித்தாள். அதிகமாகப் பழக்கப்பட்டவர்கள் போல் அவனுடன் கலந்து பேசினாள். அவள் ஒன்பதாவது வகுப்பே படித்துக் கொண்டிருந்த போதிலும் ஆங்கில மொழியின் மீதுள்ள ஆர்வத்தினால் அப்பாஷையில் நன்கு பேசினாள். ஆங்கில மொழியையே அவள் தாய்மொழியாகக் கொண்டாள். தமிழில் குளறிக் குளறிப் பேசுவாள். இதை ஒரு கௌரவமென்றே அவள் கருதினாள்.

அச்சுத ஐயரும் மதுராம்பாளும் வத்சலையைப் பார்த்தவரல்லர். தங்களுடைய உறவினரிற் சிலரைத் திருநெல்வேலிக்கு அனுப்பிப் பெண்ணைப் பார்த்து வரும்படி செய்து முகூர்த்தத்தை நிச்சயம் செய்தார்கள். அவ்விருவரும் வத்சலையை நேரே பார்த்திருந்தால் இத் திருமணத்திற்கு இடங்கொடுத்திருக்கவே மாட்டார்கள். மேலும் நரசிம்மன் வத்சலையை விவாகம் செய்துகொள்ளப் போகிறேன் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தான். தான் திருநெல்வேலிக்குச் சென்று வத்சலையைப் போய்ப் பார்த்து வந்ததைப்பற்றித் தன் பெற்றோர்களுக்கு அவன் தெரிவிக்கவே இல்லை. விவாகத்திற்கு முன்னர் இரண்டு நாள் முதல் வத்சலை ஓர் இந்திய ஸ்திரீக்குரிய உடையை உடுத்திக்கொள்ள ஆரம்பித்தாள். அவளுடைய சிறிய தாயார் பால்யத்திலேயே விதவையாகப் போனாள். அவள் அது முதல் தன் தமக்கையின் ஆதரவிலேயே இருந்துவந்தாள். வத்சலை

யின் தாயார் இறந்து போனதும் இந்த விதவையே அவளை ஆபத்சகாய ஐயருடைய ஆதரவிலிருந்து கொண்டு போஷித்து வந்தாள். தன்னுடைய சிறிய தாயாருடைய தொந்தரவுக்குட்பட்டே அவள் விவாகத்திற்கு இரண்டு நாள் முன்னாடி முதல் பிராமண ஸ்திரீயைப்போல் தோன்றினாள். விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் சரியாகச் செய்யப்பட்டிருந்தன. விவாகத்திற்கெனவே தஞ்சாவூரிலிருந்து இரண்டு தங்க நாகசுரக்காரர்கள் வரவழைக்கப் பட்டிருந்தார்கள். சென்னையிலிருந்து கோவிந்தசாமி பாண்டை அனுப்புவதாக முன்னம் ஆபத்சகாய ஐயருடைய உதவியினால் ஒரு கொலை வழக்கினின்று தப்பி வந்த 'கனவான்' ஒருவர் வாக்களித்திருந்தார். பெரிய மனிதருடைய வீட்டில் விவாகம் நடக்கிறதேயென்று அருகாமையிலுள்ள கிராமங்களிலிருந்து பல வைதிகப் பிராமணர்கள் திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தனர். ஆபத்சகாய ஐயருடைய வீட்டில் விவாகம் நடக்கிறபடியால் திருநெல்வேலி முழுவதுமே அல்லோலகல்லோலமாயிருந்தது.

III

மாப்பிள்ளை ஸ்ரீ நரசிம்ம ஐயர் அவர்களையும் அவருடைய பெற்றோர் முதலானவர்களையும் ஏற்றிக்கொண்டுவந்த 'போட்மெயில்' ஜான்வாசத்தன்று மாலை திருநெல்வேலி வாராவதி ஸ்டேஷனண்டை வந்து நின்றது. பெண் வீட்டாரிற் சிலர் ஸ்டேஷனண்டை வந்து சம்பந்திகளை வரவேற்றனர். நரசிம்ம ஐயர் தாம் இறங்கவேண்டிய ஸ்டேஷன்வந்தும் இறங்கவில்லை. தாம் இரண்டாவது வகுப்பு வண்டியிலிருந்து வந்தது பெண்வீட்டாருக்குத் தெரிய வேண்டுமென்றும், தம்மை அவர்கள் வரவேற்க வேண்டுமென்றும் எண்ணித் தம் வண்டியிலேயே அமர்ந்திருந்தார். மூன்றாவது வகுப்பு வண்டியிலிருந்த அனைவரும் இறங்கினர். ஆனால் மாப்பிள்ளையை மட்டும் காணோம். பெண்வீட்டாரில் ஒருவர் 'எங்கே மாப்பிள்ளை?' என்று கேட்டார். 'அங்கே 'சகெண்ட்கிளாஸில்' இருப்பான்' என்று அச்சுத ஐயர் சொன்னார். உடனே ஒருவர் வேகமாகச்சென்று 'மாப்பிள்ளைவாள்! இங்கேதான் இறங்கவேண்டும்' என்று நரசிம்மனை நோக்கிச் சொன்னார். அவன் புன் சிரிப்புடன் இதுதானோ இறங்கவேண்டிய இடம் என்ற கேள்வியைக் கேட்பதற்குப் பதிலாக அக்கேள்வியின் சாராம்சத்தைத் தன் முகக் குறியாலேயே காட்டிக் கொண்டு கீழே இறங்கி, வண்டியினுள்ளிருக்கும் தன்னுடைய உடுப்புப் பெட்டியின்மீது தன் கைத்தடியைத் தட்டினான். அந்தப் பெட்டியையும் கூட எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது அங்ஙனம் தட்டியதன் பொருள். இதனையறிந்த பெண் வீட்டாரில் ஒருவர், ஓர் ஆளை அழைத்து அப்பெட்டியைத் தூக்கிக் கொள்ளும்படி கூறினார். மாப்பிள்ளை கம்பீரமாகநடந்துபிளாட் பாரத்திற்கு வெளியே வந்தார். தம்மை ஏற்றிக் கொண்டு போவதற்கு மோட்டார் வண்டி நிற்கிறதா? கோச்வண்டி நிற்கிறதா? என்று சுற்றிப் பார்த்தார். உடனே வெள்ளைக் குதிரை பூட்டிய ஒரு கோச்வண்டி வந்து அவர் அருகில் நின்றது. நரசிம்ம ஐயர், பக்கத்திலிருந்த சம்பந்தி வர்க்கத்தாருள் ஒருவரைப்பார்த்து 'இந்த ஊரில் மோட்டார் வண்டியில்லையோ' என்று கேட்டார். அண்டையிலிருந்த

வர் 'இல்லை; இந்த வண்டிதான் அகப் பட்டது' என்று அசட்டு சிரிப்பு சிரித்தார். மாப்பிள்ளை மிடுக்காக வண்டியில் ஏறினார். ஆயினும் அவருடைய கூன் முதுகு மாத்திரம் நிமிரவில்லை. அச்சுத ஐயர் முதலாயினோர் மாட்டு வண்டியிலேறிக் கொண்டனர். அனைவரும் பிள்ளை வீட்டாருக்கென்று பிரத்தியேகப் படுத்தி யிருந்த விடுதியில் வந்திறங்கினர். விடுதியில் வந்திறங்கிய பிறகும் பெண்ணின் தகப்பனார் தம்மை வந்து பார்த்து மரியாதை செய்யவில்லையென்று அச்சுத ஐயர் தமக்குள் வருத்தப் பட்டுக் கொண்டார். ஆனால் ஆபத்சகாய ஐயர் விவாக தினமாகிய மறுநாளன்று உத்தியோகஸ்தர்களுக்கென்று ஒரு சோட்டக் கச்சேரி நடத்தி வைக்கத் தீர்மானித்திருந்தாராதலினாலும், அதற்கு ஜில்லா கலெக்டரை வரவழைத் திருந்தாராதலினாலும், கலெக்டர் துரைக்குப் பிடித்த, குறித்த ஒரு சாராயம் எங்கும் அகப்படவில்லையென்று அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார். சம்பந்தி வீட்டார் வந்தனரா யில்லையா என்பதைப் பற்றிக் கூட அவர் கவனிக்கவில்லை. பிள்ளை வந்த பிறகே விவாகம் நடைபெற வேண்டுமென்றும் அவர் எண்ணினாரில்லை. அவருடைய அறிவு, ஊக்கம், உழைப்பு முதலிய யாவும் கலெக்டருக்குத் திருப்தி செய்ய வேண்டுமென்ற ஒன்றிலேயே ஒன்றி நின்றன.

ஜான்வாசம் நடந்தது. அதற்கும் ஆபத்சகாய ஐயர் பிரசன்னமாயிருக்க முடியவில்லை. ஜான்வாசத்தின் போது மாப்பிள்ளை, நிஜார், சொக்காய் முதலிய முழு உடுப்புடனேயே வந்திருந்தார். ஜான்வாசத்தின் போது மாப்பிள்ளைக்கு ஒரு துவிச்சக்கர வண்டி பரிசளிக்கப் பட்டது. ஜான்வாசம் முடிவு பெற்றது. யாவரும் சந்தன தாம்பூலம் பெற்றுக் கொண்டனர். அப்படியே மாப்பிள்ளை முதலானவர்கள் மேள தாளத்துடன் ஊர்வலமாகச் செல்வது வழக்கம். ஆனால் நரசிம்ம ஐயர்—விவாகத்திற் கென்று திருநெல்வேலியில் வந்திறங்கியது முதல் நரசிம்மனை, 'ஐயர்' என்ற அடைமொழி கொடுத்தே மரியாதையாக அழைக்கிறோம். நரசிம்மன் என்று அழைக்க நமக்குப் பயமாயிருக்கிறது—இந்த அநாகரிக ஊர்வலங்கள் முதலியவைகளை விரும்பவில்லை. ஜான்வாசம் நடைபெற்றவுடன் நேரே துவிச்சக்கர வண்டியிலேறிக்கொண்டு தாம் தங்கியிருந்த விடுதிக்குச் சென்று விட்டார். இது அங்குக் குழுமி யிருந்த பலர்க்கு ஆச்சரியத்தையும் அதிருப்தியையும் உண்டாக்கியது. அநேகர் கும்பல் கும்பலாக நின்று கொண்டு மாப்பிள்ளையின் விநோதமான நடவடிக்கையைப் பற்றிச் சிறிய குரலில் பேசிக் கொண்டிருந்தனர். இச்சமயத்தில் மறுநாள் நடைபெற விருந்த விருந்துக்கு வேண்டிய யாவற்றையும் சித்தம் செய்துவிட்டு ஆபத்சகாய ஐயர் அங்கு வந்து சேர்ந்தார். நடைபெற்ற விஷயங்களை அறிந்து கொண்டார். தமக்குத் தகுந்த மாப்பிள்ளை வாய்த்ததைப் பற்றிச் சந்தோஷப் பட்டார். மாப்பிள்ளையின் நடத்தை சரியானதல்லவென்று தெரிவித்துக் கொள்ள உறவினரிற் சிலர் அவரை அணுகினர். இவைகள் சிறிய விஷயங்கள் என்றும் மாப்பிள்ளை படித்தவனாதலின் இந்த ஆபாசமான ஊர்வலம் முதலியவைகளுக்கு இணங்கவில்லையென்றும் இஷ்டப் பட்டவர்

கள் விவாகத்திற்கு இருக்கலாமென்றும் மற்றவர்கள் போகலாமென்றும் ஆபத்சகாய ஐயர் அதிகார தோரணையில் அழகாகத் தெரிவித்து விட்டார். இக்கடு மொழிகளைக் கேட்டதும் விவாகத்திற் கென்று வந்த உறவினரிற் சுமார் இருபத்தைந்து பேர் குடும்ப சகிதமாய் அன்றிரவே தத்தம் ஊருக்குச் சென்று விட்டனர். இவர்கள் சென்றதைக் குறித்து ஆபத்சகாய ஐயர் சிறிதும் கவலைப்படவில்லை. தம்முடைய தயவை நாடிக் கொண்டிருக்கும் சில்லரை உத்தியோகஸ்தர்களும் சேவகர்களும் இருக்கும்போது அவர், பந்துக்கள் சென்றதைக் குறித்து ஏன் வருந்தவேண்டும்?

மறுநாள் விடியற் காலை மாப்பிள்ளை வீட்டில் விரதம் நடைபெற்றது. அச்சுத ஐயர் பழைய மனிதருள் ஒருவராதலின் மந்திரங்களைத் தன் வாயாலேயே சொன்னார். 'வாத்தியாரே! எல்லாவற்றையும் நீரே சொல்லிவிடும். உம்மைத் தொட்டுக்கொண்டு நான் இருக்கிறேன்' என்று சில பெரிய மனிதர்—அத்தகையோருடைய திருவடிகளுக்கு அநேக கோடி நமஸ்காரம்—கூறுவதைப்போல் அச்சுத ஐயர் கூறாமல் மந்திரங்களை வாத்தியாருடன் தாமும் சொல்லிக்கொண்டு வந்தார். மதுராம்பாளோ முன்னிரவு நடைபெற்ற சம்பவத்தினால் அதிக மனம் வருந்தினவளாய்க் கண்ணீர் விட்ட வண்ணமாகவே இருந்தாள். தன் புத்திரனுக்குப் புத்தி கூறவும் அஞ்சினாள். விரதம் முடிவு பெற்றது. பரதேசி கோலம் புறப்பட வேண்டும். ஆனால் மாப்பிள்ளை அதற்கு உடன்படவில்லை. 'காசி யாத்திரை யாவது? மண்ணாவது? இவைகளெல்லாம் என்ன பைத்தியக்கார எண்ணங்கள். நான் ஆபத்சகாய ஐயருடைய பெண்ணை விவாகம் செய்து கொள்ளவே இங்கு வந்திருக்கிறேன் என்பது எல்லாருக்கும் தெரியும். அங்ஙனமிருக்க நான் காசி யாத்திரை போவது போலப் பாசாங்கு செய்ய வேண்டுமாம். அவர்—ஆபத்சகாய ஐயர்—நடுவழியில் என் காலைப் பிடித்துக் கொண்டு தம் பெண்ணை விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்று என்னை கெஞ்ச வேண்டுமாம்! இவைகள் எல்லாம் என்ன 'நான் சென்ஸ்' என்று நரசிம்ம ஐயர் திருவாய் மலர்ந்தருளினார். அச்சுத ஐயர், அங்ஙனம் சொல்லக் கூடாதென்று தம் குமாரனுக்குப் புத்தி கூறலாமென்று பார்த்தார். ஆனால் அச்சம் அல்லது நாணம் அவர் பேச்சைத் தடுத்தது. உடனே மாப்பிள்ளை தம் துவிச்சக்ர வண்டியிலேறிக் கொண்டு பெண் வீட்டுக்குச் சென்று அங்குள்ள வாசல் திண்ணையில் அமர்ந்தார். பிள்ளை வீட்டைச் சேர்ந்த மற்றவர் வேண்டிய வரிசைகளுடன் பின்னால் வந்தனர். பிறகு பெண் வீட்டு வாசலில் ஊஞ்சல் முதலிய சடங்குகள் நடைபெற்றன. மாப்பிள்ளை அம்மான் தோளில் ஏறி மாலை மாற்ற மறுத்து விட்டார். எனவே பிள்ளையும் பெண்ணும் கீழேயே நின்று கொண்டு மாலை மாற்றிக் கொண்டனர். பிறகு பிள்ளையின் தாயார் பெண்ணையும், பெண்ணின் தமயன் மனைவி—பெண்ணுக்குத் தாயார் இல்லையென்பதையும் பெண்ணின் தமயனே அதாவது ஆபத்சகாய ஐயருடைய குமாரனே வத்சலையைக் கன்னிகாதானம் செய்து கொடுக்கிறான் என்பதையும் ஈண்டு நேயர்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்—பிள்ளையையும் கையில்

தாம்பூலத்தை வைத்துப் பிடித்துக் கொண்டு வாத்தியங்களின் கம்பீரமான முழக்கத்திடையே உள்ளே அழைத்துக் கொண்டு போனார்கள். அப்பொழுது உபாத்தியாயர்—புரோகிதர் என்ற பொருளில் இம்மொழி இங்கு வழங்கப்படுகிறது—மாப்பிள்ளையைப் பார்த்து 'வாசற்படியைத் தாண்டும் போது வலது காலை எடுத்து முதலில் வைக்க வேண்டும்' என்று கூறினார். உடனே மாப்பிள்ளை, உபாத்தியாயரை உறுத்துப் பார்த்து 'ஏன்? இடது காலை எடுத்து முதலில் வைத்தால் என்ன வந்துவிடும்?' என்று கூறி இடது காலையே முதலில் எடுத்து வைத்தார். நடை கழியின் நுழைவாயிலண்டை சென்றதும் மாப்பிள்ளையின் தலை, வாசற்படியில் மொட்டென்று இடித்துக்கொண்டது. இவைகள் யாவும் அப சகுனங்கள் என்று ஆங்கிருந்த வைதிகர்கள் எண்ணினார்கள். ஆனால் அவர்களுக்கு இவைகளைப்பற்றி என்ன? பூரி தக்ஷிணை வந்து விட்டால் போதும். அதற்காகவே அவர்கள் வாயை முணுமுணுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய சம்பிரமங்களுடன் மாப்பிள்ளை கல்யாண மேடைமீது அமர்ந்தார். ஓமகுண்டத்தினின்றும் புகைகிளம்ப ஆரம்பித்தது. மாப்பிள்ளைக்கு அதைத் தாங்கமுடியவில்லை. உபாத்தியாயரை அவர் நிமிர்ந்து பார்த்தார். இன்னும் அரைமணி நேரத்திற்குள் எல்லாவற்றையும் முடித்துவிட வேண்டுமென்று கட்டளையிட்டார். 'இதோ முடிந்து விட்டது; பத்து நிமிஷம் பொறுங்கள்' என்று பக்கத்திலிருந்த வைதிகர்கள் கூறினார்கள். சிறிது நேரம் பொறுத்து நரசிம்ம ஐயர் உபாத்தியாயரைப் பார்த்து 'ஐந்து நிமிஷம வெளியே போய்விட்டு வருகிறேன்' என்று கூறினார். அப்படிப் போவது வழக்கமில்லையென்று உபாத்தியாயர் மெது வாய் பயந்த குரலுடன் சொன்னார். உடனே அண்டையிலிருந்த ஒரு வைதிகர் உரத்த குரலில் 'என்ன வாத்தியாரே! உமது அதிகாரம் இங்கு? அவாள் பெரிய மனுஷ்யாள். ஐந்து நிமிஷம் போய் விட்டுத்தான் வரட்டுமே?' யென்று கூறி மாப்பிள்ளைக்கு உத்தரவு கொடுத்தார். உடனே நரசிம்ம ஐயர் எழுந்து தெருப் பக்கமாகச் சென்று ஒரு சிகரெட்டை வாயில் பற்றவைத்துக் கொண்டார். அரைமணிக்கொரு முறையேனும் சிகரெட் பிடியாமலிருந்தால் அவருக்கு மிகவும் கஷ்டமாகப் போய்விடும். ஒரு சிகரெட்டைப் பிடித்து விட்டு மறுபடியும் விவாகப் படியில் வந்து அமர்ந்தார். சடங்குகள் யாவும் சீக்கிரமாகவே நிறைவேறின. மணமகன் வத்சலைக்கு மாங்கல்ய தாரணம் செய்தார். வைதிகர்களிற் சிலர் தவிர மற்றவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தக்ஷிணையைக் கொண்டு திருப்தி யடைந்தார்கள். விவாகம் சீக்கிரமாக முடிவு பெற்றதால் நாழும் சீக்கிரமாகவே முடிக்க வேண்டி யிருக்கிறது. யாவருக்கும் முகூர்த்த தாம்பூலம் வழங்கப் பட்டது. மணப் பந்தலில் பிள்ளையும் பெண்ணும் காதோடு காதிணைத்து நெடுநாள் பழகியவர்போல் இரகசியம் பேசிக் கொண்டதைப் பற்றியாவது, பெண் அப்பொழுது அலங்காரம் செய்துவந்திருந்த மாதிரியைப் பற்றி யாவது இங்கு நாம் ஒன்றுங் குறிப்பிடப் போவதில்லை. பிறகு அனைவரும் போஜனம் செய்தனர். உடனே ஆபத்சகாய ஐயர் மாலையில் ஊஞ்

பெறப் போகும் விருந்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய நல்லுடை உடுத்திச் சென்று விட்டார். சுமார் நான்கு மணிக்கு மேல் ஐரோப்பிய உடையுடன் விருந்து மண்டபத்திற்கு வரும்படி மாப்பிள்ளைக்குக் கட்டளையிட்டுப் போனார். மாப்பிள்ளை விவாக வீட்டில் போஜனம் முடிந்ததும் சிறிது நேரம் இளைப்பாறத் தம் விடுதிக்கு வந்தார். சாதாரணமாக விவாக காலத்தில் எல்லாருக்கும் இருக்க வேண்டிய சந்தோஷமானது நரசிம்ம ஐயருடைய கலியாணத்தில் ஒருவருக்காவது இல்லையென்றே கூறலாம்.

நரசிம்ம ஐயர் தம் விடுதிக்குச் சென்று படுத்துக் கொண்டார். உடனே அவருக்கு மார்வலி ஆரம்பித்து விட்டது. அதனால் அதிக தொந்தரவு பட்டார். பெண் வீட்டாருக்கு இவ்விஷயம் தெரிந்தது. அவர்கள் உடனே ஒரு வைத்தியரை அழைத்து வந்தார்கள். வைத்தியர், நரசிம்ம ஐயரைப் பரிசோதனை செய்து இரவு எட்டு மணிக்கு மேல் தாம் மறுபடியும் வருவதாகவும் அப்பொழுது மருந்து கொடுப்பதாகவும் சொல்லிவிட்டுச் சென்றார். நரசிம்ம ஐயர் அதிகமாக அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார். அச்சுத ஐயரும் மதுராம்பாளும் அவர் பக்கத்திலிருந்து கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்ன செய்வதென்று ஒருவருக்கும் தோன்றவில்லை. மாப்பிள்ளையின் தேக அசௌக்கியத்தைப் பற்றி ஆபத்சகாய ஐயருக்கு ஒரு முறை செய்தி சொல்லி அனுப்பப்பட்டது. வைத்தியரை அழைத்துக் கொண்டு பார்க்கச் சொல்லிவிட்டு தாம் விருந்து முடிந்ததும் வருவதாகக் கூறி அனுப்பினார். நரசிம்ம ஐயருக்கு வலி அதிகமாகிக் கொண்டு வந்தது; துடிக்கிறார். அவரைச் சுற்றி விவாகத்திற்கென்று வந்திருந்த அனைவரும் இருக்கின்றனர். அங்குள்ள எல்லாரும் ஒரே விதமான கலக்கத்தை அடைந்திருந்தனர். சரியாக மாலை ஐந்து மணி அடித்து ஐந்து நிமிஷமாயிற்று. நரசிம்ம ஐயருடைய கண்களின் ஒளி குன்றியது; மூக்கு சில்லிட்டுப் போய் விட்டது. அச்சுத ஐயரும் மதுராம்பாளும் 'அப்பனே' என்று நரசிம்ம ஐயர் மீது விழுந்து கோவென்று கதறினார்கள். உறவினர்கள் கண்ணீர் விட்டுப் பிரலாபித்தார்கள். நரசிம்மன் இறந்த செய்தியைக் கேட்டு வத்சலை 'நான் விவாகம் செய்து கொண்டது கனவோ? நினைவோ?' என்று அலறிக் கொண்டே கீழ் விழுந்தாள்.

'மன்றங் கறங்க மணப்பறையாயின, வன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்—பின்றை, யொலித்தலு முண்டாமென் றுய்த்துபோ மாறே, வலிக்குமா மாண்டார் மனம்.'

ஞானக்களஞ்சியம்

வேதாந்த ரகசியங்கள்

—ரா. ஸ்ரீனிவாசன்

(அன்னூர் மகன் ஸ்ரீ ராமசந்திரன் உதவியது)

உண்மை யுணராமை:—

மட்குடமும் மஞ்சட்காமாலையும்.

மஞ்சள் காமாலையினாற் பீடிக்கப்பட்டிருந்த வொருவனுக்கு அவனைச் சூழ்ந்துள்ள குடம் முதலிய எல்லாப் பொருள்களும் அவற்றி னியற்கையான வுருவங்களுக்கு முற்றிலும் விரோதமாய் —அதாவது அனைத்தும் மஞ்சள் நிறம் வாய்ந்தனவாகவே தோன்றலாயின.

இவ்விரோத மான அனுபவத்தை மாற்றுவதற்காக மேல் குறித்த நோயாளியானவன், குடம் முதலிய பொருள்களின் மேல் 'அஞ்சனம்' 'குளிகை' முதலான மருந்துகளைக் கொஞ்ச மதிகமாகவே உபயோகித்து வந்தான்! ஆயினும், முடிவில் அது வீண் பிரயாசமும்—பயனற்ற முயற்சியும்—ஆகுமெனத் தனக்குத்தானே தெரிந்து கொண்டான். அதன் பின்னர் தன்னுடைய கண்ணிலேயே காமாலை நோயிருப்பதாக வுணர்ந்து கண்ணில் மையெழுதவே காமாலை யொழிந்தது. அதற்குப்பிறகு குடம் முதலிய வஸ்துக்களைப் பார்த்தபொழுது அவை மஞ்சள் நிறமாகத்தோன்றாமல் உள்ளபடியே தோன்றலாயின.

அதுபோல சில அவிவேகிகள் தங்களுடைய அறியாமையின் முதிர்ச்சியே காரணமாகப் பெரியோர்களின் மீதே எல்லாக்குற்றங்களையுஞ் சுமத்துவதும், அவ்விதமான குற்றங்களைப் பற்றிப் பலவாறு நிந்திப்பதும் அவற்றை நீக்கிக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தி யுபதேசிப்பதும் வழக்கமாய் நடந்து வருகின்றது. தனது கண்களில், மருந்தெழுதிப் பதார்த்தங்களுடைய மாறுபாடான வுருவக்காக்ஷியைச் சீர்படுத்திக் கொள்ள முயற்சியாது குடமுதலிய பொருள்களுக்கு மருந்தெழுத முயன்றவனைபோல், சில கற்றறி மோழைகள் தங்களிடத்தில் யானைத்தலையளவு குற்றங்களிருந்தும் அவற்றையறிந்து கொள்வதற்கோ அல்லது அறிந்து கொண்டாலுமவற்றை வேரோடு களைவதற்கோ பிரயத்தனஞ் செய்யாமல்

மஹான்களின்மேற் பற்பல குற்றங்களைக்கற்பித்து அவற்றை மலைபோலும் பிரமாதமாக்கி அவர்களை வீணே தூற்றுகின்றார்கள். தங்களுடைய குற்றங்களை நீக்கிக்கொள்ள வியலாத இக்கற்றறி மோழைகளுக்கு அந்நியர்களின் பேரிலுள்ள குற்றங்களை நீக்குவதற்கெங்ஙனமியலும்? இந்த சூக்ஷ்ம தத்துவத்தை யுணரமுடியாத இவ்வறிவாளிகளை எதற்கு உவமையாகக் கூறலாம்? இதனாலன்றோ பர்த்ருஹரி யென்பாரும் இவ்வறிவீனர்களைப் பற்றி வருணித்து வருமிடத்து, 'அவர்கள் யாரோ யாமறியோம்' என வியந்து கூறினர்?

தீமையின் உருவம் :—

குடியனும் ஓர் வழிப்போக்கனும்

ஒரு புத்திமான் கழுத்து நிறையக் கள்ளைக்குடித்துச் சர்க்கார் ரோட்டுப் பக்கத்தில், இடையில் ஆடையுமின்றிக் கிடந்து புரண்டு பரிதவிப்பதைக் கண்ணுற்று மனமிரங்கியவோர் வழிப்போக்கன் குடியனைப் பார்த்துக் கூறியதாவது:—'உன்னுடைய உயிரினுனக்குண்மையான ஆசையிருந்தால், உன்னுடைய கை விரல்களைத் தொண்டை வரை,யுள்ளேவிட்டுக் கள்ளைப் பூராவும் வெளியே வரும்படிக்கு வாந்தி செய்வாயானால் நீ பிழைத்திருப்பாய்; இல்லையே லுண்மையாய் நீ நமனுலகஞ் செல்வாய். இதிற் சிறிதுஞ் சந்தேகமின்று.'

இதைக்கேட்ட பெருங்குடியன் புகலலுற்றான், 'எனக்கு இம்மகோபதேசம் புரிதற்கு குருநாதன் வந்தானாக வேண்டுமென்பதில்லை. ஒரு விரல் நுழையும்படிக்கான துவாரமாவது இக்கழுத்தின் கீழிருக்கும்படியான பாக்கியமடியேனுக்கிருந்திருக்கும்பக்ஷத்தில் அந்த இடத்திலும் முதல்தரமான லகரிவாய்ந்த புளித்த கள்ளில் ஒரு டிராம் நிறைத்து வைத்திருப்பேனல்லவா? அதற்கிடனில்லாமற் போனதைப்பற்றி விசனிக்க வேண்டியிருக்கின்றதேயன்றி வேறு கதியில்லையே!' என இவ்வண்ணம் பரிதாபமான கழுகழுத்த குரலில் மொழிந்து கொண்டே உயிர் துறந்தான்!

இதுபோலவே சில மனிதர்கள் மிகக் கொடியனவாகிய மஹா பாவங்களைச் செய்வதும், அதனாலவர்கள் தரித்திரம், மஹா வியாதி, மனோவியாகூலம், அற்பாயுள் என்னு மிது போன்ற துர்த்தேவதைகளின் அடிமைகளாய் மிகக்கடினங்களாகிய சங்கடங்களை அனுபவிப்பதும், பிரத்தியக்ஷமாய் நிகழுங் காக்ஷியன்றோ? ஆனால், அத்தகைய துன்பங்களையனுபவிக்கும் போதாவது, இவ்விதமான துக்கங்கள் வருவதற்குக் காரணம் என்னவென்று தாமாகவே அவர்கள் ஆலோசனை செய்து தெரிந்து கொண்டு அதை நீக்குவதற்கு முயற்சி செய்யவோ அல்லது மற்ற மேதாவிகள் தெரிவிக்கின்ற தத்துவத்தைக் கேட்டு நடப்பதாக உடன்படவோ செய்யவில்லை யென்பது மட்டுமின்று. மீண்டும் பன்மடங்கு மஹா பாப கிருத்தியங்களைச் செய்வதற்காக அவர்கள் எப்பொழுதுந் தயாராயிருப்பதுதான் ஆச்சரியத்தினுமாச்சரியம்! ஆகா! இவர்களல்லவோ கர்ம சண்டாளர்கள்?

(கர்ம சண்டாளர்கள்—செய்கையினும், செயற்கையினும் சண்டாளத்தன்மை யடைந்தவர்.)

தொல்லைகளை வெல்லுதல் :—

பன்றியும் வேடர்களும்

பல்லாயிரக்கணக்கான பனைமரங்கள் நிறைந்ததோர் கானகத்தில் சில பன்றிகள் வாசஞ்செய்து கொண்டிருந்தன. ஒரு நாள் சில வேட்டைக்காரர்கள் ஒருங்கே சேர்ந்து கொண்டு அவற்றைப் பிடித்துத் தின்னலாமெனத் தீர்மானித்து அவர்களொரு நாளிரவில் வழக்கம்போலெல்லாத்திக்குகளிலும் மிருகங்களை விரட்டி அவைகளின் வாசஸ்தலங்களிலிருந்தும் வெளியேற்றுவதற்காகக் கையாடி வருகின்ற தந்திர முறைகளை யனுஷ்டித்தார்கள். (அதாவது பனை மட்டைகளைக் கோல் கொண்டடித்துத் தடதட வென்று சத்தமிட்டார்கள்) பொழுது விடியும் வரையிற் பனை மட்டை வாத்தியங் கோஷித்தும் ஒரு பன்றியாவது வெளியே வந்து எட்டிப் பார்த்து என்ன சங்கதி யென்று கேட்கவில்லை! இவர்கள் மட்டும் இவ்வாறு அநேக மிரவுகளைக் கழித்து வந்தார்களேயல்லாது இவர்கள் அபிப்பிராயப்படி ஒரு வராஹத்தையாவது வெளியே வரச் செய்து பிடிக்கமுடியவில்லை. அம்மட்டோ? மாதக் கணக்காகச் சிவராத்திரி விரத மனுஷ்டித்தும் கஷ்டப்பட்டும் யாதொரு பயனையும் பெறாது வீணே பல்லிளித்துப் போக வேண்டியவர்களாயினர். ஏனென்றால் பிறந்தது முதல் அன்று வரை அளவற்ற பனைமட்டை வாத்தியங்களைக்கேட்டு மகிழ்ந்துகொண்டு அத்தோப்பிலேயே வாழ்ந்து வந்த அப்பன்றியினங்கள், இரண்டொரு பனை மட்டை வாத்தியங்களைக் கேட்டா பயந்து ஓடிவிடும்?

இதுபோல, மஹாத்துமாக்களாகிய பெரியோர், தாண்ட முடியாத பிறவியாம் பெருங்கடலைத் தாண்டிச் செல்லுங்கால் வழி நடுவில் தங்களோடு எதிர்த்துப் போராடுவதற்காக வருகின்ற அளவற்ற பிரதி பந்தங்களாகிய சத்துருக்களை, காய்ந்த புல்லை போலு மற்பமெனக்கருதி அவற்றை யநாயாசமாக அழித்துத் தங்களுடைய உத்தேசமாகிய 'மோக்ஷமெ'னும் அக்கரையை அக்கரையாயடைந்து சுவாநுபூதியிலாழ்ந்து மகிழ்கின்றார்கள். அத்தகைய மஹான்கள் தான் லோகோபகாரத்தின் பொருட்டுத் தமது கடமைகளைச்செய்து வருகின்றவர்களாவர். ஆனாலிப் பெரியாரின் செயல்களைக் கண்ணுற்றுச் சகியாது அசூயை யெனும் மலைப்பாம்பினால் விழுங்கப் பட்டவர்களாகிய சிலர் அத்தபோதனர் களுக்குப் பூச்சாண்டிகளைக் காண்பித்துப் பயமுறுத்தித் தம் நாட்டை விட்டுக் கடத்திவிடப் பார்க்கின்றனர். இப்பூச்சாண்டிகளுக்காகப் பயந்து அம்மேதாவிகள் தமது கடமைகளை விட்டொழித்து ஓடிப்போய் விடுவார்களென்பது முன் பிரஸ்தாபிக்கப் பட்ட சுருங்கிய சுபாவத்தினரின் கருத்து. பனங்காட்டிற் கிடந்த பன்றிகளை மிரட்டுவதற்காகப் பனையோலை வாத்தியங்களை யுபயோகித்த வேட்டைக்காரர்க்குக் கிடைத்த பயனே இத்தகையார்க்குங் கிடைக்குமென அறியத்தக்கதாம். சிற்றறிவுடைய மூடர்களின் மனக்கற்பனைச் சித்தாந்தங்கள், பெரியாராகிய பருவத்தை யசைக்குந் திறனுடையனவாகா.

நம்பிக்கை யின்மை :—

பழைய ஹிரணியனும்,
புதிய ஹிரணியனும்

சில காலத்திற்குமுன் மொட்டை

யூரில் 'ஹிரணியன்' எனும் பெயர் பூண்ட ஒரு சீர்திருத்தம்பெற்ற நாகரிக நாஸ்திகன் வாழ்ந்து வந்தான். ஆனாலிவன் புராணப் பிரசித்தனாகிய ஸாக்ஷாத் ஹிரணியனல்ல; இவனுடைய அசுரத் தொழில்களைக் கண்டு களித்த உலகமே இவ்வுசிதமான நாமதேயத்தை இவனுக்குச் சம்மானித்ததாம். பழைய ஹிரணியன் விஷ்ணுத்துவேஷியா யிருந்தவனாயினும் அவன் தபோதனனாயும் புஜபல பராக்கிரமம் வாய்ந்தவனாயும் அஸஹாய சூரனாயுமிருந்தான். நமது புதிய ஹிரணியனோவெனில் அவனைப் போல் விஷ்ணுத்துவேஷத்தால் மட்டும் திருப்தியடைந்தவனல்ல. பழைய ஹிரணியனைக் காட்டிலும் இப்புதிய ஹிரணியனிடம் நூற்றுக் கணக்கான குணாதிசயங்கள் காணப் பட்டமையால் இவனுக்குப் பலவாறான கௌரவப் பட்டங்களும் — உயர்ந்த பிருதுகளும் சம்மானித்தல் தகும்.

இப்புதிய ஹிரணியனானவன், 'சிவன், விஷ்ணு சக்தி, கணேசன், சுப்ரமண்யன், சூரியன், விருதம், ஜபதபம், மந்திரம், யாகம், தானம், தீர்த்தம், சௌசம் (பரிசுத்தம்) ஸ்தோத்திரம், தர்மம், தயை, விக்கிரகம், கோயில், பிராஹ்மணன், பிரஹ்ம நிஷ்டை, சத்தியம், சந்நியாசி, பரமேசுவரன், (கடவுள்) சிராத்தம், பிதிருக்கள், ருத்திராக்ஷம், மோக்ஷம், துளசி, பிராதஸ்நானம், வேதம், தர்ம சாஸ்திரம், புராணம், வேதாந்தம், தர்க்கம், வியாகரணம், மாந்திரிகம், ஜோஸ்யம்' என்னுமிவை போன்ற பரிசுத்தமான சப்தங்கள், காதிற்கூட விழக்கூடாதென்று தீர்மானஞ்செய்து கொண்டிருக்கிற மஹா சித்தாந்தி (பிடிவாதக் காரன்) யாவன். பழைய ஹிரணியனைக் குறித்து இவன் சௌரியாதி விஷயங்களில் பேர் பெற்றவனல்ல; எனினும் இவ்விரணியனுக்கு வசைமொழிகளைப் பொழிவதற்குப் பரம சாதனமாக விருந்தது, நாவொன்றுதான்! பண்டைக் காலத்திய இரணியனைக் கொல்வதற்கு மிகச் சிரமமுற்று ஓர் அவதாரஞ் செய்ய வேண்டி வந்தது. இப்புதிய இரணியனோ தனக்குத்தானே காலனாயினமையால் வேறோர் அவதாரமோ எமனோ வேண்டப்படவில்லை.

அதென்ன தங்ஙனமெனில், மஹா புண்ணியாத்துமாக்களாகிய பக்தர்களிடத்தி லிருந்து புறப்படுகின்ற சிவன், விஷ்ணு, வேதம், பிரஹ்மம், பிராஹ்மணன், பிரஹ்ம நிஷ்டை, முதலான சப்தங்களை நமது ஹிரணியன் செவியுறச்சகியாது அல்லும் பகலுமதே நோயாகி வருந்திக் கடைசியில் ஹைதராபாதத்திற்குப் போய் ஒரு பெரிய யுக்தியைக் கண்டு பிடித்தான். முற்புகன்ற பரிசுத்தமான சில சப்தங்களை யுபயோகிப்பதற்குக் காரணமாகிய வேத சிவாலய, பிரஹ்ம, ப்ராஹ்மணாதிகளை யடியோடு அழிப்பதற்குத் தனக்குச் சாமர்த்தியமில்லையாயினும் அவ்வகைத்தான சப்தங்களைத் தனது காதிற்படாமற் செய்தாலாவது போதுமென நிச்சயித்து அவ்வண்ணமேயுள்ள சித்தாந்தத்தை யுடையவர்களாகிய சில பிராண சிநேகிதர்களைச் சகாய புருஷர்களாக்கி அவர்களிடமிருந்து ஒரு தொகையை வசூல்செய்து அப்பொருளினைக்கொண்டு நவீனநாகரிகமுறைப்படி வார்க்கப்பட்டதோர் கழுத்துமணியை அமெரிக்காவிலிருந்து, தருவித்து அதனைக் கழுத்தில் அணிந்து கொள்ளலாயினான். இவ்விபரத்தைப்

விஜய நகரத்தின் வளமை

—"சரித்திரக்காரன்"

[கி. பி. 1336ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்ட விஜயநகர ராஜ்யம், சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகள் சீரும் சிறப்பும் பெற்று நிலவிய வரலாறு சரித்திரமாணவர்கள் அறிந்ததே. விஜய நகர இராஜ்யத்தை ஆட்சி புரிந்த மன்னர்களில் ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் ஒரு திலகம் போன்றவர். இவருடைய ஆட்சிக் காலத்தில் விஜய நகர ராஜ்யம் உச்ச நிலையை யடைந்தது என்று திண்ணமாகக் கூறலாம். இம் மன்னர் குணாதிசயங்களைப் பற்றியும், இவர் காலத்தில் விஜய நகரம் இருந்த வளமையைப் பற்றியும் 'டாமிங்கோ பெயிஸ்' என்ற ஒரு போர்த்துகல் தேசத்துப் பிரயாணி சில குறிப்புகள் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறான். அவைகளிலிருந்து சிலவற்றை ஈண்டுத் தருகிறோம்.]

ஸ்ரீ கிருஷ்ண தேவராயருடைய ஆட்சி காலம் கி. பி. 1509ம் வருஷ முதல் 1530ம் வருஷம் வரைக்குமாகும். இவர் அதிக உயரமும் 'அதிக' குள்ளமும் இல்லாதவர். சிறிதுபருமனை தேகத்தை யுடையவர்; முகத்தில் அம்மை வடுக்கள் உண்டு. இவரைப் போல் சிறந்த அரசரைக் காண்பதரிது. இனிய முகத்தினர்; புன்சிரிப்பினர். வெளி நாடுகளிலிருந்து வந்தவர்களை மரியாதையோடு வரவேற்று உபசரிக்கிறார். விருந்தினரின் அந்தஸ்து எவ்வளவு தாழ்வானதாயிருந்த போதிலும் அவர்களுடன் இனிய மொழிகள் புகன்று வழியனுப்புகிறார். நெறி தவறாத சிறந்த அரசர் என்று இவரைச் சொல்ல வேண்டும். ஆனால் சில சமயங்களில் திடீரென்று கோபம் வந்துவிடுகிறது.

* * *

பக்தர்களறிந்த பொழுது முன்னிலும் பன்மடங்கு வேத சப்தங்களை யுச்சரிக்க ஆரம்பிக்கவே அதைக்கேட்ட நமது இரணியன், வெகு கோபவேசங்கொண்டு மிதிபட்ட நாகம் போலும் சீறியெழுந்து பற்களை நெறித்துச் சிவந்த கண்களுடன் மீசைகள் துடித்துப் படபடவென்றடிக்கத் தலையை இங்குமங்குமாக வெகு விரைவில் ஆட்டி மணியோசையைப் பெருக்கத் தொடங்கினான். அப்பா லிவ்விதமிடைவிடாமற் செய்து வந்ததன் பயனாக முடிவில் கழுத்து வீங்கி நமது புதிய இரணியன் பழைய ஹிரணியனுடன் இரண்டடிக்கலந்து நரகவாசத்தை நிரந்தரமாகக் கைக்கொண்டான்.

படிப்போர்களே! இவனைப் போன்ற நாஸ்திகர் பலருடையவுமநுபவ மிங்ஙனமாக இருக்கின்றமையின் நீங்களியாவரும் பரம ஆஸ்திகர்களாக விருந்து சுகமே நீடுழிகாலம் 'வாழ வேண்டியது அத்தியாவசியமாம்!

ஸ்ரீ கிருஷ்ண தேவராயருக்குப் பன்னிரண்டு மனைவிகள் உண்டு. இவர்களில் மூன்று பேர் பட்ட மஹிஷிகள். இம் மூவரில் ஒருத்திக்குப் பிறக்கும் பிள்ளைக்கே பட்ட உரிமை உண்டு. இம் மூவரும் வசிப்பதற்குத் தனித் தனி அரண்மனைகளும், சேடிகளும், காவலாளிகளும் உண்டு. இவர்களை ஆண் பிள்ளைகள் எவரும் பார்க்க விடுவதில்லை. ஆனால் அரசருடைய அநுமதியின் பேரில் வயது முதிர்ந்தவனும், சமஸ்தானத்தில் மிகுந்த மரியாதை பெற்றவனுமான யாராவது ஒருவன் இவர்களைப் பேட்டி காணலாம். இந்த ராஜ ஸ்திரீகள் வெளியே எங்கேயாவது செல்ல விரும்பினால் பல்லக்குகளில் தூக்கிச் செல்லப்படுகிறார்கள். இங்ஙனம் பல்லக்கில் செல்லும்போது இவர்களுடன் முந்நூறு அல்லது நானூறு பேடிகள் காவலாகச் செல்லுகிறார்கள். இந்த ஒவ்வொரு பட்ட மஹிஷிக்கும் ஏராளமான நகைகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு பட்ட மஹிஷிக்கும் அறுபது தாதியர் இருக்கின்றனர். இந்தத் தாதியரில் ஒவ்வொருவரும் இரத்தினங்களாலும், வைரங்களாலும், பச்சைகளாலும், இழைக்கப் பட்ட விலையுயர்ந்த ஆபரணங்களைத் தரித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தத் தாதிகளிற் சிலரை நான் பார்த்தேன். எனக்கு பிரமை உண்டாகிவிட்டது. ராஜ மஹிஷிகளின் அந்தப்புரங்களில் மாத்திரம் மொத்தம் பன்னிரண்டாயிரம் பெண் பணியாளர் இருக்கின்றனர். கத்தி, கேடயம் முதலிய ஆயுதங்கள் தாங்கிப் போர்புரியுந்திறமை வாய்ந்தவரும், மல்யுத்தம் செய்வதில் திறமை யுள்ளவரும், வாத்தியங்கள் வாசிப்பவரும், மேற் கூறப்பட்ட பெண் பணியாளர்களில் பலர் இருக்கின்றனர். அரசருக்கு இருக்கும் எல்லாச் சௌகரியங்களும், இந்த ஒவ்வொரு பட்ட மஹிஷிக்கும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட் டிருக்கின்றன.

ஸ்ரீ கிருஷ்ண தேவராயர், தினந்தோறும் விடியற்காலையில் ஓர் ஆழாக்கு நல்லெண்ணெயை(?)க்குடித்து விடுவது மன்றி உடம்பெல்லாம் பூசியும் கொள்கிறார். பிறகு, ஒரு லங்கோட்டாவுடன் தேகாப்பியாசம், கத்தி சுழற்றல் முதலிய விளையாட்டுகள் செய்கிறார். இங்ஙனம் செய்வதன் மூலம், இவர் குடித்த எண்ணெய் பூராவும் வியர்வை மூலமாக வெளியே வந்து விடுகிறது. பிறகு, சமஸ்தானத்து மல்யுத்த வீரர் ஒருவருடன் யுத்தம் செய்கிறார். பிறகு, ஒரு குதிரைமீது ஆரோகணித்துக் கொண்டு உதயமாகும் வரை சவாரி செய்கிறார். அப்புறம், ஸ்நானம், நித்திய கர்மானுஷ்டானம் முதலியவைகளைச் செய்து கொண்டு, இராஜ காரியங்களைக் கவனிக்கத் தொடங்குகிறார். இச்சமத்தில், முக்கிய மந்திரிமார்களை வரவழைத்து இராஜ்ய நிருவாக சம்பந்தமான காரியங்களைப் பற்றிச் சம்பாஷணை செய்வார். மந்திரிகளுடன் இராஜ்ய விவகாரங்களைத் தீர்த்துக்கொண்ட பிறகு பிரபுக்கள், சேனாதிபதிகள் முதலியவர்களை வரவழைத்துப் பேசுகிறார். இவர்கள் தினந்தோறும் அரசரைச் சென்று வணங்கி வருவது வழக்கமாயிருக்கிறது.

ஊருக்குள் செல்வதற்குமுன், மதிற் சுவர்களைக் கடந்தேயாக வேண்டும். சுவர்களைச் சுற்றி அகழ் இருக்கிறது. இச்சுவர்கள் கருங்கற்களால் மிக உறுதியாகக் கட்டப்பட் டிருக்கின்றன. முதலில் இரண்டு நுழை வாயில்கள்

இருக்கின்றன. இவ்விரண்டின் மீதும் கோபுரங்கள் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கின்றன. உள்ளே சென்றதும், இரண்டு கோயில்கள் இருக்கின்றன. இதற்கடுத்தாற்போல் மற்றொரு நுழை வாயில், மதிற் சுவர் முதலியன இருக்கின்றன. இரண்டாவது நுழை வாயிலையும் கடந்து சென்றால், அரண்மனைக்குப்பல வீதிகள் செல்வதைப் பார்க்கலாம். இந்த வீதிகளில் அழகான வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. சமஸ்தான உத்தியோகஸ்தர்கள், பிரபுக்கள் முதலியவர்கள் இந்த வீதிகளிலேயே வசிக்கிறார்கள். இந்த வீதிகள் யாவும் ஒரு பெரிய நுழை வாயிலண்டை போய்ச் சேருகின்றன. அதுவே அரண்மனை மைதானத்தின் ஆரம்பம். இந்த நுழை வாயிலுக்கு எதிர்ப்புறத்தில் மற்றொரு பெரிய வீதி இருக்கிறது. இது நகரத்தின் மற்றொரு பாகத்திற்குச் செல்கிறது. இந்த நுழை வாயில் வழியாகச் செல்லும் பொது ரஸ்தா, நகரத்திற்கு மத்திய பாகத்தில் இருப்பதால் சாமான் வண்டிகள் முதலிய யாவும் இவ்வழியாகவே செல்கின்றன.

* * *

இதை யடுத்தாற்போல் மற்றொரு பெரிய வீதி இருக்கிறது. இங்கே பணக்கார வியாபாரிகள் பெரும்பாலோராக வசிக்கிறார்கள். இங்கே வைரம், இரத்தினம், மரகதம், பவழம் முதலிய நவரத்தின வகைகளும், துணிகளும், ஒரு மனிதன் எவை எவைகளை விரும்புகிறானோ அவைகள் யாவும் விற்கப்படுகின்றன. மாலை நேரங்களில் இங்கே நல்ல வியாபாரம் நடக்கிறது. ஆரஞ்சு, திராட்சை முதலிய கனி வர்க்கங்களும் கறி காய் தினுசுகளும் இங்கே கிடைக்கின்றன. இதற்கு அடுத்த மற்றொரு வீதியில் தொழிலாளிகள் எல்லாரும் வசிக்கிறார்கள். இவர்களால் செய்யப்பட்ட எல்லாச் சாமான்களும் இவ்வீதியில் கிடைக்கின்றன. விஜய நகரத்திலுள்ள எல்லா வீதிகளிலும் பல கோயில்கள் இருக்கின்றன. வெள்ளிக்கிழமை தோறும் இங்கே சந்தை கூடுகிறது. அப்பொழுது சுற்றிலுமுள்ள நாட்டுப் புறங்களிலிருந்து கொண்டுவரப்படும் சாமான்கள் விலையாகின்றன. விஜய நகரத்தில், உலகத்திலுள்ள எல்லா ஜாதியினரும் வசித்து வருகின்றனர். இங்கே வைரங்கள் அதிகமாக வியாபாரம் செய்யப்படுகின்றன.

* * *

விஜய நகரத்தில் உள்ள ஜனங்களின் எண்ணிக்கை சொல்ல முடியாது. ஒரு காலாட் படையோ அல்லது ஒரு குதிரைப் படையோ, ஒரு தெரு வழியாகத் தாராளமாகச் செல்ல முடியாதபடி அவ்வளவு ஜன நெருக்கம் இந்த ஊரில் இருக்கிறது. இந்த ஊரில் அரிசி கோதுமைமுதலிய எல்லாப் பொருள்களும் நயமாகக் கிடைக்கின்றன. கடை வீதிகளில் சாமான்கள் நிறைந்த வண்டிகளே நிரம்பி யிருக்கும். தவிர, சுற்றுப்புற கிராமங்களிலிருந்து எலுமிச்சம் பழங்களும் ஆரஞ்சுப் பழங்களும் மற்றக் கறி காய் தினுசுகளும் ஏராளமாக வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. ஒரு பணத்துக்கு மூன்று குலை திராட்சைப்பழமும், ஒரு பணத்துக்கு பத்து மாதுளம் பழங்களும் விற்கப்படு கின்றன. தவிர, நெய், பால், தயிர் முதலியன ஏராளமாகக் கிடைக்கின்றன. இவ்வளவு வளமையுள்ள நகரம் உலகத்தின் வேறெந்தப் பாகத்திலும் கிடையாதென்று கூறலாம்.

வார்தா கல்வித் திட்டம்

—க. அருணாசலம் B. A.

தற்காலத்தில் இந்தியாவில் நடைமுறையிலிருந்து வரும் கல்விமுறை சீர்கேடானது என்பதைப் பற்றி ஆள்வோரும் ஆளப்பெறுவோரும் ஏகோபித்த அபிப்பிராய முடையவராக இருக்கின்றனர். பல தேசியத் தலைவர்கள் இம்முறையின் ஊழல்களை எடுத்துக் காட்டியதுடன் நில்லாது தத்தமக்குத் தோன்றியவளவில் தேசியக் கல்வி முறைக்கு அடிகோலியுள்ளார்கள். இவர்களில் சுவாமி சிரத்தானந்தர், லாலா லஜபதிராய், பண்டித மதன் மோஹன் மாளவியா, அன்னை வசந்தை (Annie Besant) திலகர், கோகலே, ரவீந்திரநாத் தாகூர் முக்கியமானவர்கள்.

சுவாமி சிரத்தானந்தர், குருகுலங்களில் இயற்கை அன்னையின் மடியில் ஈரேழு வருடங்கள் மாணவர்கள் தத்தமது குருவின் ஆதரவின் கீழ் பயிற்சி பெறுதலே நம் நாட்டிற்கு உகந்தது என நினைத்து இமய மலைச் சாரலில் குருகுலம் ஒன்றை நிறுவிப் போயிருக்கின்றனர். லாலா லஜபதிராய் நம் நாட்டுக் கலைகளை மேல்நாட்டு முறைப்படி கொடுக்க வேண்டுமென்று கருதி தயானந்தர் ஆங்கிலோ வேதிக் காலேஜை லாகூரிலே ஆரம்பித்து நடத்தினார். அம்மாதிரியே நடைமுறைக் கல்வியில் வெறுப்புக் கொண்ட திலகரும், கோகலேயும் தக்ஷிண இந்தியக் கல்விச் சங்கம் கண்டு அதன் ஆதரவின் கீழ் பெர்கூஸன் கல்லூரியையும் நூதன வித்யாலயங்களையும் ஆரம்பித்தார்கள். மேல் நாட்டைச் சேர்ந்தவராயினும் பாரத நாட்டையே தாய் நாடெனக் கொண்டொழுகிய அன்னை வசந்தையும் தற்காலக் கல்வியில் வெறுப்புற்றவராய் அடையாற்றில் தேசியக் கல்வி புகட்டுவதற்காக ஓர் உயர்தரப் பாடசாலையும் கல்லூரியும் கண்டார்.

அநேக பாடசாலைகளும், கல்லூரிகளும் மேல் நாட்டுச் சிற்பமுறைப்படி கட்டப்பட்டுள்ளன. நம் நாட்டு மக்கள் கல்வி பயிலுமிடங்கள் நமது தேசிய சிற்ப முறைப்படி கட்டப்பெற்றனவாயிருக்க வேண்டுமென நினைத்து பண்டித மாளவியா, காசியில் ஹிந்து பல் கலைக் கழகம் நிறுவி அதிலுள்ள கட்டிடங்களெல்லாம் இந்திய சிற்பிகளைக் கொண்டு இந்திய முறையில் கட்டியிருக்கின்றார்.

கவி ரவீந்திரரும் இந்நாளைய ஏட்டுக்கல்வியில் வெறுப்புற்றவராய் இந்திய இளைஞர்களைச் சிருஷ்டி விற்பன்னர்களாக்குதற் பொருட்டு வங்காளத்தில் போல்பூருக்கருகில் சாந்திநிகே

தனத்தை நடத்தி வருகின்றார். ஏழை இந்தியா புறக்கருவிகளுக்காக பணம் செலவிடமுடியாது. அதிலும் பெரிய கட்டிடங்களைக் கட்டி அதனுள் இந்திய மக்கள் படிப்பதென்பது பொருந்தாது. ஆதலால் மர நிழல்களிலிருந்து இயற்கை வாழ்வு வாழ்ந்து கல்வி பெற வேண்டுமென்று செய்திருக்கின்றார்.

இந்தியாவில் கிழக்கிந்தியக்கம் பெனியாரால் ஆரம்பிக்கப்பட்டு ஆங்கில அரசாங்கத்தாரால் வளர்க்கப் பட்டு வரும் கல்வி முறை, குமாஸ்தாக்களை உண்டு பண்ணுவதற்கென ஏற்படுத்தப்பட்டது. இது நாள் வரை அந்த வேலையைச் செய்து வந்துள்ளது. கல்வி, மனித தத்துவத்தை வளர்ப்பதற்கு உபயோகப்பட வேண்டுமானால் அது கொடுக்கப்படும் முறையும் மாறுபாடடைய வேண்டும். மேல் நாட்டு முறைகளையும் பழக்கங்களையும் கையாண்டு கீழ்நாட்டு மனிதனை உண்டுபண்ணுதல் அசம்பாவிதமான காரியம். கிழக்கத்திய நாகரிகம் வளர வேண்டுமானால் கிழக்கத்திய எதிர்காலக் குடிகள் கீழ்நாட்டுப்பண்புகளில் பழக்குவிக்கப் பெறல் வேண்டும். இப்பண்புகள் பல பத்தாண்டு களுக்கு முன்னரே சுவாமி விவேகானந்தர் பறையறை வித்துள்ளார். அவரது சிஷ்யையும் தேவகவி சுப்பிரமணிய பாரதியின் ஞான குருவுமான சகோதரி நிவேதிதை, இந்தியாவில் கல்வி, தற் சார் புடையதாகவும் தானே இலங்கக் கூடியதாயும் இருக்க வேண்டுமென்று நினைத்து இந்தியப்பெண்களின் கல்வியை வளர்த்தற்பொருட்டு கல்கத்தாவில் பெண்களுக்கென ஒரு பாடசாலை ஆரம்பித்து வைத்தார். இதில் மனித தத்துவத்தை வளர்க்கக் கூடிய இந்தியமுறையில் கல்வி புகட்டப்பட்டு வருகிறது.

மகாத்மாகாந்தி யடிகளும், மற்ற தேசியத் தலைவர்களைப்போலவே இந்நாளையக்கல்வி முறையில் வெறுப்புக் கொண்டார். இம்முறை அசத்தியமும் ஹிம்சையும் நிறைந்ததெனக் கண்டார். 1921ம் வருடம் ஒத்துழையாமை ஆரம்பித்தபொழுது பல இதர விஷயங்களோடு கல்விச்சாலைகளுடன் மாணவர்கள் ஒத்துழைக்கக் கூடாது என்பதும் ஒன்றாகக் கருதினர். ஆயிரக்கணக்கான மாணவர்கள் காந்தியடிகளின் கட்டளைக்கிணங்கித் தமது கலாசாலைகளி லிருந்தும் பாடசாலைகளிலிருந்தும் வெளியே வந்தனர். இதேசமயத்தில் பல தேசியப்பாடசாலைகள் ஆங்காங்கு ஆரம்பிக்கப்பட்டன. அவைகளுள் சபர்மதியில் ஆரம்பிக்கப்பட்ட குஜராத் வித்யாபீடமும் ஒன்று. இது மகாத்மாவின் நேர் பார்வையின் கீழ் நடந்து வருகிறது.

இப்படி ஆரம்பிக்கப் பட்டுள்ள தேசிய வித்தியா பீடங்கள் சுதேசப் பற்றையும் தியாக உணர்ச்சியையும் வளர்த்து வந்தனவேயாயினும் இவைகள் பெரும்பாலும் மற்றைய கல்லூரிகளின் நகல்களாகவே யிருந்தன. இந்த நிலைமை மாறவேண்டியது அவசியமாயிருந்தது. இதே சமயத்தில் இந்தியா தனது விடுதலைப் போராட்டத்தில் பல படிகளைத்தாண்டி சுதந்திர திசையில் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. மாகாண சுயாட்சியால் காங்கிரஸ் பிரதிநிதிகள் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள். இவர்களும் பழைய நடைமுறைக் கல்விக்குத் தான் ஆதரவு கொடுத்து வளர்த்து குமஸ்தாக்களை உண்டு பண்ணப்

போகின்றார்களா? சர்வ சாதாரண மக்களுக்கு எப்படி இலவசக்கல்வி கொடுக்கப் போகிறார்கள்? காங்கிரஸ் படைக்கு இதுகாறும் சுக்கான்பிடித்து வந்த மஹாத்மா இப்பொழுது என்ன யோசனை சொல்லப் போகிறார் என்று தேசம் முழுதும் எதிர் நோக்கி இருந்தது.

இச் சமயத்தில்தான் மகாத்மா தனது கல்வித் திட்டத்தை வெளியிட்டார். இத்திட்டப்படி ஒவ்வொரு இந்தியக் குழந்தைக்கும் ஏழு வருடம் கட்டாய இலவசக் கல்வி கொடுக்கப்படும். இதன் மூலம் தற்காலம் கல்வியுலகிலுள்ள தேக்கமும் சேதாரமும் அறவே ஒழிந்து போகும். இவ் வேழு வருஷக் கல்வி ஏதாவது ஒரு கிராமக் கைத் தொழிலை நடு நாயகமாகக் கொண்டுள்ளதாக இருக்க வேண்டும். கைத் தொழில் மூலமாகவே குழந்தையின் சகல சக்திகளையும் வளர்க்க வேண்டும். இப்படிச் செய்வதின் மூலம் குழந்தையின் சிருஷ்டி சக்தி பெருகுகிறது. பிறர் சார்பிலனக் பிற்காலத்தில் வாழ்க்கை நடத்த முடியும். அத்துடன் கல்வி கற்கும் பொழுது தனக்காக ஏற்படும் செலவுகளையும், ஒருவாறு தான் செய்யும் தொழிலின் மூலம் ஈடு செய்கிறான். இச்சுதந்திர உணர்ச்சி, குழந்தை, உண்மை மனிதனாக வளர்தற்குப் பெரிதும் உதவியாக இருக்கிறது.

இத்திட்டம் நமது தேசிய லக்ஷியங்களான அஹிம்சை, சத்தியம் இவைகளை அடிப்படைகளாகக் கொண்டுள்ளது. தியாகமும் தொண்டும் அஹிம்சை சத்தியத்தின் வழிப் பிறந்த பண்புகள். இவைகள் நமது முன்னோர்கள் வகுத்த திட்டங்களிலெல்லாம் பரிணமித்தலை பழைய சரித்திரம் படிப்பவர்கள் காணலாம். பிரம்மச்சர்ய வாழ்வு ஞானத்தைத் தேடிசமூகசேவை செய்வதற்காகவும், இல்லறம் விருந்தோம்பி வேளாண்மை செய்வதற்காகவும், சந்நியாசம் லோக க்ஷேமத்திற்காகவும் வகுக்கப்பட்டன. அக்காலத்திலுள்ள கிராம அமைப்பும் ஆட்சி முறையும் அதிதிகளும் சமூகத்திலுள்ள அசக்தர்களும் சௌகரியமாக வாழ்க்கை நடத்துவதற்காகவே வகுக்கப்பட்டன. பணம் படைத்தவர்கள் குளங்கள் வெட்டி கோயில் கட்டி சமூகத்தினரை இன்புறச் செய்தலே தங்களின் வாழ்க்கையில் பயன் என எண்ணினர்.

ஆனால் தற்காலப் பயனற்ற கல்வி முறையின் பரிணாமம், போட்டியிலும் சுயநலப் பேராசையிலும் கொண்டு போய் விட்டுள்ளது. போக வாழ்வே லக்ஷிய மெனக் கருதப்படுகிறது. இந்நிலைமை மாற வேண்டுமானால் காந்தியடிகள் சொல்லுகிற மாதிரி தொழிலின் மூலம் கல்வி கற்க வேண்டும். அப்பொழுது உழைப்பவன் இழிகுலத்தான் என்கிற எண்ணம் தேய்ந்து உழைப்பின் உயர்வை எண்ணிப் போற்றும் காலம் வரும். தியாகமும் தொண்டும் மறுபடியும் நமது தேசிய வாழ்வில் முதன்மை பெறும்.

நல்ல புத்தி

(சரத் சந்திர சட்டர்ஜி)

வங்காளி மூலத்திலிருந்து மொழி பெயர்த்தவர்

—எஸ். கிருஷ்ணன்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

திகம்பரி மறைவாய் நின்றுகொண்டு மாப்பிள்ளையிடம் சொன்னாள்—ஒரு முறை நாராயணியிடம் நீ சொல்லு. இல்லாவிட்டால் அவள் சாப்பிடமாட்டாள். இன்று முழுதும் பட்டினி தான்.

சாமலால் கேட்டார்—ஏன் பட்டினி கிடக்கிறார்கள்?

திகம்பரிக்கு அழுகை வராததால் தொண்டை இடறச் செய்து கொண்டு சொன்னாள்—தவறு என்னுடையது. என்னை மன்னிக்கவேண்டும். பிராமண போஜனத்திற்காகக் குளத்திலிருந்து ஒரு மீனைப் பிடித்தால் இப்படி பாரதப் போர் நிகழும் என்று அறியவில்லை.

சாமலாலுக்கு விஷயம் நன்றாகப் புலப்பட வில்லை. அவன் வேலைக்காரியைக் கூப்பிட்டுக் கேட்டான்—நித்தோ, என்ன நேர்ந்தது?

வேலைக்காரி எதிரே வராமல் நின்ற இடத்தில் நின்றுகொண்டே பதிலளித்தாள்—அது சின்ன ஐயாவுடைய கணேசன்.

சாமலால் திடுக்கிட்டுப் போனார்—அது ராமனுடைய கார்த்திகை கணேசனில் ஒன்று?

வேலைக்காரி சொன்னாள்—ஆமாம்.

இனி அதிகம் சொல்ல வேண்டாம். சாமலால் எல்லாம் அறிந்து கொண்டார். கேட்டார்—ராமனும் சாப்பிடவில்லைபோலிருக்கிறது?

தாசி சொன்னாள்—சாப்பிடவில்லை.

சாமலால் சொன்னார்—பின்சொல்லிப் பிரயோஜனமில்லை. அவன் சாப்பிடாவிட்டால் அவள் ஏன் சாப்பிடுகிறாள்?

திகம்பரி பேச ஆரம்பித்தாள்—இந்தத்தகராறு ஏற்படும் என்று உணர்ந்திருந்தால் பிராமண போஜனத்துக்கு ஏற்பாடு செய்திருக்க மாட்டேன். அவள்தானே மீனைப் பிடித்துக்கொண்டு வரச்சொன்னாள். ஆனால் இப்பொழுது இப்படி செய்வதின் காரணம் யாது என்று அவளே அறிவாள். நான் பேசாமல்தான் இருந்தேன். ஆயினும் குற்றம் என் மீதே.இப்படியே இருக்குமானால் எங்களை எங்கேனும் அனுப்பிவிடு. இங்கே இருக்க முடியாது.

கொஞ்சநேரம் மௌனம் சாதித்த பின் அழுகுரலில் தொடர்ந்து பேசினுள்—என் தலைவிதி இப்படி இராவிட்டால் அண்ணன் இறப்பானேன்? இங்கே துடைப்பக்கட்டை அடி வாங்குவானேன்? குழந்தாய், நாங்கள் பிச்சைக்காரர்கள். ஆனதினாலேயே எங்களைக் காப்பாற்ற ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கெஞ்சுகிறேன்.

சாமலால் வெருண்டு போனார். ஆனால் 'ஆகட்டும்; முடியாது' என்று அவரால் கூற முடியவில்லை.

நாராயணி மறைவிலிருந்து எல்லாம் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தாள். அம்மாளுடைய வெட்கக்கேடான வார்த்தைகளால் தலை குனிந்து போய் விட்டாள். அவள் நேராக ராமனுடைய அறைக் கதவைத் தட்டிக் கொண்டே சொன்னுள்—என் கண்ணேல்லியோ மதனி சொல்வதைக்கேள். கதவைத்திற.

ராமன் விழித்துக் கொண்டுதான் இருந்தான். ஆனால் மறுமொழி தரவில்லை.

நாராயணி மறு முறையும் கூப்பிட்டாள்—எழுந்திருந்து கதவைத் திறந்தால் போதும். கண்ணே இல்லையோ?

இம்முறை அலறினுன்—முடியாது. திறக்க மாட்டேன். நீங்கள் எல்லாரும் என் துரோகிகள்.

'அப்படியே இருக்கட்டும். கதவைத்திற.'

'முடியாது. முடியாது. திறக்க முடியாது.'

உண்மையாய் அவன் அன்றைக்குக் கதவைத் திறக்கவே இல்லை.

சாமலால் தன் அறையிலிருந்து கொண்டு இந்தப்பேச்சை கவனித்துக் கொண்டுதான் இருந்தார். நாராயணி உள்ளே வந்ததும் சொன்னுர்—ஏதாவது வழிகாட்டு. இல்லாவிட்டால் எல்லாவற்றையும் விட்டு விட்டு மனம் போன போக்குக்குப் போய்விடுவேன். இவ்வளவு தொந்தரவு பொறுக்க முடியாது.

நாராயணி பதில் சொல்லாமல் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகும் ராமனுடைய கோபம் தணியவில்லை. நாராயணி மனம் துடித்தது.

அவள் எல்லாவற்றையும் வெறுத்தாள். அந்தி வேளையாகியும் ராமன் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வராது போகவே அவள் பொறுமையின் எல்லையைத் தாண்டி கோபமடைந்தாள். இதற்குள் திகம்பரி ஆற்றில் நீராடி உலக விஷயம் ஒன்று விடாமல் விசாரித்து ராமனுக்குக் கெடுதி ஏற்படுவதற்காகக் கடவுளை வேண்டியபின் நாராயணியுடைய உலகோடு ஒவ்வாத வழக்கத்தின் காரணமாய் நேரப்போகும் தீய முடிவை உலகுக்கு எடுத்துரைத்து விட்டு துயரத்தால் அகாலத்தில் நரை ஏற்படுவதன் காரணங்களை விளக்கிக் கூறி நாராயணியுடைய வயதைத் தன்வயதென்று கூறிவிட்டு தன் அண்ணன் வீட்டில் முடி சூடா மன்னனைப்போல் இருந்த பிரபாவத்தைப் பறை சாற்றிவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தாள். வழியில் ஒரு செய்தி கிடைக்கவே விரைவாய் வீட்டை அடைந்தாள். முற்றத்தில் அடி யெடுத்து வைக்கு முன், உன் அருமை மச்சினனுடைய

கதையைக் கேட்டாயோ? நாராயணி!

பயத்தாலும் சந்தேகத்தாலும் நாராயணி முகம்துவண்டு போயிற்று. அவள் கேட்டாள்—என்ன விஷயம்?

திகம்பரி சொன்னாள்—அவர்கள் போலீசு ஸ்டேஷனுக்குப் போயிருக்கிறார்கள். போகாமல் என்ன செய்வார்கள்? இப்படி பாழாய்ப்போனபயலை ஏழு ஜன்மத்திலும் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. இனி சிறைக்குப் போக வேண்டியதுதான்.

அவள் முகத்தில் உள்ளத்தில் எழுந்த களிப்பின் நிழல் நன்குதெரிந்தது. நாராயணி அதற்கு ஒன்றும் சொல்லாமல் வேலைக்காரியைக் கூப்பிட்டுச்சொன்னாள்—ராமன் இன்னும் ஏன் வரவில்லை? போலாவை அனுப்பு. அவன் போய் தேடிவிட்டு வரட்டும்.

திகம்பரி சொன்னாள்—நான் எல்லாம் தெரிந்து கொண்டுதான் வந்திருக்கிறேன்.

நித்தியகாளி, ஆகட்டும் என்று சொல்லிவிட்டு திகம்பரி சொல்வதைக் கேட்க ஆர்வத்துடன் நின்றாள். நாராயணி வெடுக்கென்று சொன்னாள்—இங்கேயே நிற்கிறாயா? ஏன் போகவில்லை? சொல்கிறது காதில்விழவில்லை?

வேலைக்காரி பயந்துபோய் அவ்விடத்தை விட்டகன்றாள். திகம்பரி ஆத்திரத்துடன் கூவினாள்—என்ன நடந்தது என்று கேட்கமாட்டாய்?

'முதலில்போய் புடவையைகட்டிக் கொள். அப்புறம் சொல்லலாம்' என்றுசொல்லிக் கொண்டு நாராயணி அங்கிருந்து விலகிச்சென்றாள். திகம்பரி திகைத்துப் போனாள்—மனதில் சொல்லிக் கொண்டாள்—'பெண்ணுடைய கோபத்தைப்பாரு? இந்த மாதிரி காண்டத்தை வர்ணிக்காமல் அவள் மனம் வெடித்துவிடும் போலிருந்தது.

ராமன் செய்தகாரியம் இதுவே:—கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் ஜமீந்தாருடைய மகன் ஒருவன் படித்துக் கொண்டிருந்தான். இன்று மத்தியானம் சிற்றுண்டிவேளையில் ராமனுக்கும் அவனுக்கும் தர்க்கம் ஏற்பட்டது. விஷயம் கொஞ்சம் சிக்கலானது. ஆகவே, பேச்சிலிருந்து கைகலக்க நேர்ந்துவிட்டது. ஜமீந்தாருடைய மகன் சொன்னான்—சுடலைமாரி ரக்ஷா காளியைவிட விழிப்புடையவள் என்று சாத்திரம் கூறுகிறது.

ஏனென்றால் அவளுடைய நாக்குப் பெரியது.

ராமன் மறுத்தான்—'ஒருக்காலுமில்லை. சுடலைகாளியின் நாக்கு கொஞ்சம் அகலமானபோதிலும் அவ்வளவு பெரிதல்ல. அவ்வளவு சிவந்ததுமல்ல. கொஞ்ச நாட்களுக்கு முன்தான் கிராமத்தில் காளி பூசை நடந்தது. ராமனுக்கு அதுநன்றாக நினைவு இருந்தது. ராமன் சொல்லியவார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாமல் ஜமீந்தார் மகன் தன் உள்ளங்கையை காட்டிச்சொன்னான்—ரக்ஷாகாளியுடைய நாக்கு இதைப் போல்தான்.

ராமனுக்குக்கோபம் வந்துவிட்டது. சொன்னான்—இல்லவே இல்லை. இவ்வளவு சின்னதா? கிடையவே கிடையாது. அது இவ்வளவு பெரிது. இத்தனை சின்னதாயிருந்தால் உலகை எப்படிக் காக்கமுடியும்? உலகைக் காக்

கிறதால்தானே ரக்ஷாகாளி என்று பெயர்?

இதற்குமேல் இரண்டு மூன்று வார்த்தைகள் — பின் கைகலந்தனர். ஜமீந்தாருடைய பையனுக்கு பலம் குறைவு. ஆகவே அதிகமாக அடி கிடைத்தது. அவனுடைய மூக்கிலிருந்து இரண்டு மூன்று துளி இரத்தம் சொட்டிற்று. இந்தப்பள்ளிக் கூடத்தின் சிறுவயதில் இதுவரை இப்படி ஒரு நிகழ்ச்சி உண்டாகவில்லை. எந்த ஜமீந்தாருடைய பள்ளிக் கூடமோ அதே ஜமீந்தாருடைய மூக்கிலிருந்து இரத்தம் சொட்டுவதா? மேல் என்ன செய்வது. தலைமை உபாத்தியாயர் பள்ளியை மூடிவிட்டு பையன்களுடன் தர்பாரை அணுகினார். ராமன் முன்னாலேயே மாயமாய் மறைந்து விட்டான் என்று எடுத்துச் சொல்லத் தேவையில்லை.

போலா வந்து சொன்னான் — அண்ணாவைக் காணவில்லை.

கொஞ்ச நேரத்தில் சாமலால் வாடிய முகத்துடன் வீட்டிற்கு வந்தார். முற்றத்தி விருந்தே சொன்னார்—கேட்டாயா சங்கதியை? இனி கிராமத்திலேயே இருக்க முடியாது போல் தோன்றுகிறது. வேலை செய்து நாலு காசு சம்பாதிப்பதும் ஒழிந்தது. தெரிந்து கொள்.

நாராயணி சமையல் அறையிலிருந்து வெளியே வந்து கதவு நிலையில் சாய்ந்து கொண்டு கோபக் குரலில் கேட்டாள்.

போலீசுக்கு அறிவித்து விட்டார்களா?

சாமலால் சொன்னார்—பெரிய பாபு தேவாம்சம். ஆகையினால் தான் மன்னித்தார். இன்னும் நாலு பேர் இருக்கிறவர்களையும் கஷ்டப் படுத்திக் கொண்டுதான் வருகிறான். இப்படி இருக்கையில் எப்படி கிராமத்தில் இருந்து பிழைப்பது? சொல்லு. ராமன் எங்கே?

நாராயணி சொன்னாள்—இன்னும் வீட்டுக்கு வரவில்லை. பயந்துபோய் ஓடித் திரிகிறானோ என்னமோ?

சாமலால் உறுதியுடன் சொன்னார்—திரியட்டும். திரியாமல் போகட்டும். இனி அவனுக்கும் நமக்கும் ஒரு விதசம்பந்தமும் கிடையாது. நாலு பேர் நாலு விதமாய் சொல்வார்களென்று பயந்து இவ்வளவுநாள் பொறுத்திருந்தாயிற்று. இனி ஒரு நிமிஷமும் பொறுக்க முடியாது. நம் உயிரையும் காப்பாற்ற வேண்டாமா?

திகம்பரி சமையல் அறை வாசலில் நின்றபடியே சொன்னாள்—தன் குழந்தையையும் கவனிக்க வேண்டுமல்லவா?

சாமலால் ஆவேசத்துடன் சொன்னார்—ஆம். பார்க்க வேண்டாமா? கட்டாயம் கவனிக்க வேண்டியதுதான். உன்னிடம் சொல்லி வைக்கிறேன். இனி அவனை அடிக்கவோ கோபித்துக் கொள்ளவோ வேண்டாம். வேண்டாம். அவன் என்ன நினைத்திருக்கிறானோ செய்யட்டும். அவன் ஏதோ நினைத்துக்கொண்டு ஜமீந்தார் மகனை அடித்தான்.

திகம்பரி உள்ளக்களிப் பெய்தினள். மொழிந்தாள்—நாராயணி என்னத்துக்காக அவனை அடிக்கணும்? போதும். மனம் திகிலடைகிறது. முரட்டுப்பயல் என்னையே அவமதிக்கையில் நாராயணியை

விட்டு விடுவானா? அவனவன் மானத் தைக்காப்பாற்றிக் கொள்ள வேண்டு மல்லவா? ராமனுடைய குழப்பத்தில் சிக்கிக்கொள்ளாதே.

சாமலால் மாமியாருடைய இந்த உபதேசத்துக்கு சம்மதி அளிக்க வில்லை. ஒரு வேளை மனைவியைப் பார்த்தாற் போலிருக்கிறது. சொன் னார்—சரி என்னவானாலும் அவனை அடிக்கவேண்டாம்.

நாராயணி கல்லாய் சமைந்து நின் றாள். மறுமொழி கூறவில்லை. மெள்ள மெள்ள அவ்விடத்தை விட்டு அகன் றாள்.

சுமார் ஒரு மணி நேரம் சென்ற பின் வேலைக்காரி வந்து சொன்னாள்— அம்மா சின்ன ஐயா வந்துவிட்டார்.

நாராயணி பேசாமல் ராமனுடைய அறைக்குள் நுழைந்து உள்புறம் கதவைத் தாளிட்டாள். ராமன் கட் டிலில் உட்கார்ந்தபடியே என்ன எண் ணிக்கொண் டிருந்தானோ தெரிய வில்லை. தாழ்ப்பாள் சத்தம் கேட்டுத் திரும்பிப்பார்த்தான். அவன் மூலை யில் வைத்திருந்த பிரம்பை மதினி எடுத்துக் கொண்டிருந்தாள்.

அவன் எழுந்து கட்டிலுக்கு பின் புறம் போய் நின்று கொண்டான். நாராயணி அழைத்தாள்—இங்கேவா.

ராமன் கை குவித்துக் கெஞ்சிக் கேட்டான்.—‘ இனி அடிக்கமாட் டேன். மதனி இந்தத்தடவை ஒன்றும் பண்ணாதே.

நாராயணி கடுகடுத்தாள். சொன் னாள்—வந்தாயோ கொஞ்சமாய் அடிப்பேன். இல்லாதபோனால் உன்னை அடித்து இந்தப் பிரம்பை ஒடித்து விடுவேன்.

ராமன் அசையவில்லை. அதே இடத்தில் நின்று கொண்டு ஐயோ என்று கத்தத் தொடங்கினான்—உன் காலில் விழுகிறேன். இனிமேல் அடிக்க மாட்டேன். தோப்புக்கர ணம் போடுகிறேன் மதனி!

நாராயணி குனிந்து அவனுடைய முதுகில் ஒருஅறை வைத்தாள். அப் புறம் படபட வென்று அடிவிழுந்தது. முதலில் கதவைத்திறந்து ஓடப்பார்த் தான். பிறகு அறைமுழுவதும் ஓடிப் பார்த்தான். கடைசியில் காலில் விழுந்து அழ ஆரம்பித்தான். நிர்த் திய காளி பின்புற முள்ள ஜன்னல் வழியாய்ப் பார்த்துக் கொண்டு நின் றாள். அவள் அழுதுகொண்டே சொன்னாள்—அம்மா இனி நிறுத்தி விடுங்கள். உங்கள் காலில் விழுகிறேன்.

திகம்பரி முகத்தைத் தூக்கிக் கொண்டு சொன்னாள்—அவள் காரி யத்தில் நீ ஏன் அனாவசியமாய்த் தலை யிடுகிறாய்?

சாமலால் அறைக்கு வெளியி லிருந்து கூப்பிட்டுச் சொன்னார்— இரவு முழுதும் அடித்துக் கொண்டே தான் இருக்கப் போகிறாயா?

நாராயணி பிரம்பை வீசி எறிந்து விட்டுச் சொன்னாள்—நினை விருக் கட்டும்.

ராமன் ரொட்டி சாப்பிட ஆரம் பித்தான். திகம்பரி கதவுக்குப் பின்னா லிருந்து சொன்னாள்—இவ்வளவு பெரிய பையனை யாராவது அடிப்பார் களா? அவனுடைய பெரியண்ணாவே கை தூக்காமல் இருக்கையில்—’

நிர்த்தியகாளி சொன்னாள்-நீங்களும் குறைந்தவர்களா என்ன? கூட்டிக் கொடுத்து மூட்டி விடுவது உங்கள் வேலைதானே.

இரவு நடந்தது அவளுக்குப் பிடிக்கவேயில்லை. ராமன் கண்ணைச் சுழற்றிக் கொண்டே சொன்னான்—இந்தக் கிழப்பேய் எங்களைக் கொன்று தின்ன வந்திருக்கு.

திகம்பரி கத்தினாள்—நாராயணி நீயே கேள் உன் மச்சினன் வார்த்தையை.

நாராயணி குளிக்கப் போய்க் கொண்டிருந்தவள் திரும்பிவந்தாள். சோர்வுற்று அவள் சொன்னாள்—இனி கேட்கத் திறனுமில்லை; சக்தியுமில்லை. அம்மா நித்தோ! நிஜமாய்த் தான் சொல்கிறேன். உயிரை விட்டால்தான் அமைதி ஏற்படும். பொறுக்கமுடியவில்லை. அடே குரங்கே! உன்முதுகுத் தழும்பு கூடமறையவில்லையே. அதற்குள் மறந்துவிட்டாயா?

ராமன் மறுபடி சொல்லவில்லை. ரொட்டியை மென்றுகொண்டேயிருந்தான். நாராயணி ஒன்றும் பேசாமல் குளிக்கப் போய்விட்டாள். முற்றத்தில் ஒரு மூலையில் ஒரு கொய்யா மரம் இருந்தது. ராமன் அதன்மேல் ஏறி உட்கார்ந்தான். அலக்ஷியமாய் கொய்யாக்காய் மென்று கொண்டிருந்தான். சிலவற்றைத்தின்றான். இன்னுஞ் சிலவற்றைக் கடித் தெறிந்தான். பிஞ்சுக் காய்களைப் பறித்து எறிந்து கொண்டேயிருந்தான். இதைப்பார்க்கப் பார்க்க திகம்பரியுடைய மனம் பொருமிக்கொண்டிருந்தது. நாராயணி வீட்டிலில்லை. தன்னால் அடக்கமுடியாமல் போகவே சொன்னாள்—உன்னாலே ஒரு கொய்யாப்பழங்கூட கிடைக்கவில்லை. பிஞ்சுக் கொய்யாக்காயைப் பறித்து என்ன செய்கிறாய் குழந்தாய்?

ராமன், நல்லகாலத்திலேயே அவள் சொல் தாங்கமாட்டான். அந்த லட்சணத்தில் அடிவாங்கக் கிழவி தான் காரணம் என்று நித்திய காளி வாயிலிருந்து கேட்ட பின்புமா பொறுப்பான். மரத்திலிருந்து கத்தினான்—அப்படித்தான் செய்வேன் கிழவி.

இந்த உரிச்சொல் திகம்பரிக்குப் பிடிக்கவே பிடிக்காது. சொன்னாள்—கிழவியா! அவள் வரட்டும். நாயைத் தெரிந்துதான் உதைக்க வேண்டும். இப்படி வெட்கங்கெட்ட பையனும் உண்டா?—அடிபட்டு அடிபட்டு முதுகுத்தோல் கழன்றுபோன பின்பும் வெட்கமில்லை.

ராமன் மரத்திலிருந்த படியே சொன்னான்—கிழட்டுப்பிசாசே!

'வயதுக்கடுத்த வார்த்தையா பேசுகிறாய் நீ? போக்கிரி எங்கே கிடந்த சனியனோ. அப்பா. இறங்கி வா, சொல்கிறேன்.'

ராமன் பதிலளித்தான்—இறங்கவா வேண்டும்? உங்கப்பன் வீட்டு மரமா இது?

திகம்பரி வெறி பிடித்தவள் போல் அலறினாள்—ஆஹா! அப்பாவைக் கூடச் சொல்ல ஆரம்பித்து விட்டாயா? ஊஹூம்!

சரியாக இதே சமயத்தில் நாராயணி குளித்து விட்டு வந்தாள். மரத்தைப் பார்த்துச் சொன்னாள்—அடே சாப்பிட்டு விட்டு பள்ளிக்கூடம் போகவில்லையா? அங்கே ஏன் உட்கார்ந்திருக்கிறாய்?

மதனி தூரத்தில் வரும் போதே பார்த்து விட்டு ஓடிப்போய் விடலாம் என்று ராமன் நினைத்திருந்தான். ஆனால் சண்டைக் கிடையில் மறந்து போய் விட்டான். மதனி முற்றத்தில் வந்து நிற்கிறாள்! அவன் பயந்து போய்ச் சொன்னான்—கொய்யாக்காய் தின்று கொண்டிருந்தேன்.

'தின்று கொண்டிருந்தது தெரிகிறது. ஏன் பள்ளிக்கூடம் போகவில்லை?'

(தொடரும்)

நவாப் சையத் முகம்மது பஹதூர்

ஜனனம் 1869

மரணம் 1919

"ஒரு காங்கிரஸ்வாதி"

இருபத் தெட்டாவது இந்திய தேசீய காங்கிரஸ் சிந்து மாகாணத்திலுள்ள கராச்சியில் 1913ம் வருஷம் டிசம்பர் மாதம் 26, 27, 28ந் தேதிகளில் கூடியது. இதற்கு 550 பிரதிநிதிகள் ஆஜரா யிருந்தார்கள். அக்காலத்தில் காங்கிரஸின் ஜீவநாடிகள் போலிருந்த கோகலே, மேத்தா, சுரேந்திரநாத் பானர்ஜி, பண்டித மாளவியா முதலியோர் இந்தக் காங்கிரஸுக்கு விஜயஞ் செய்யவில்லை. இது பெருங்குறையாகவே எல்லாருக்கும் தோன்றியது. இந்தக் காங்கிரஸுக்கு, உபசரணைக் கூட்டத் தலைவராயிருந்தவர் ஸ்ரீ ஹரிச்சந்திர விஷ்ணு தாஸ் என்ற சிறந்த தேசபக்தர். காங்கிரஸின் தலைவரா யிருந்தவர் நவாப் சையத் முகம்மது பஹதூர் அவர்கள். இவருடைய ஜீவிய சரிதத்தைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

நவாப் சையத் முகம்மது, 1869ம் வருஷம், சென்னைக் கருகாமையிலுள்ள சைதாப்பேட்டையில் ஜனித்தார். இவருடைய மூதாதையர் புராதனப் புகழ்பெற்ற வமிசத்தில் பிறந்தவர்கள். இவருடைய பாட்டனான நவாப் மீர் அஸதுல்லாகான் பகதூர், சேத்பூர் ஜாகீர்தாரா யிருந்ததோடு, ஆறு காடு நவாப்பின் திவானாகவுமிருந்தார். மற்றும், மைசூர் நவாப்பா யிருந்த ஹைதர் அலிகானுடன் சம்பந்தப்பட் டிருந்தார்.

நவாப் சையத் முகம்மதின் தகப்பனான மீர் ஹுமாயூன் ஜா பஹதூர் சி.ஐ.இ. சென்னை நகர சபையிலும்

சென்னைச் சட்ட சபையிலும் அங்கத்தினரா யிருந்தார்.

நவாப் சையத் முகம்மது, வீட்டிலேயே கல்வி கற்றார். இவருக்கு ஆங்கில பாஷையில் அதிகவிற்பத்தியும் அதை விருத்தி செய்து கொள்ள வேண்டுமென்ற சிரத்தையும் ஏற்பட்டது. பின்னர் பொது விஷயங்களில் கலந்து கொண்டு, தமது திறமைக்குத் தகுந்தவாறு உழைத்தார். 1896ம் வருஷம் இவர் சென்னை ஷெரீப்பாக நியமிக்கப் பட்டார். 1897ம் வருஷம் 'நவாப்', 'கான் பகதூர்' முதலிய பட்டங்களை இவருக்கு அரசாங்கத்தார் வழங்கினர். 1900ம் வருஷத்திலும் 1902ம்வருஷத்திலும் இவர் சென்னைச் சட்டசபையில் அங்கத்தினராக நியமிக்கப்பட்டு அதில் திறம்பட உழைத்தார். பிறகு, மிண்டோ—மார்லி சீர்திருத்தத்திற்கு முன்னரும் பின்னரும் இரண்டு முறை, ராஜப்பிரதிநிதி சட்டசபையில் அங்கத்தினரா யிருந்தார். அப்பொழுது அரசாங்கத்தாரால் கொண்டு வரப்பட்ட மசோதாக்கள் மீது இவர் பேசிய பேச்சுகள், இவருடைய அபூர்வ ஞானத்தையும் அரசியல் விஷயங்களில் இவருக்குள்ள ஆர்வத்தையும் நன்கு காட்டும். 1917ம் வருஷத்தில் இவர் மேற்படி சபையினின்று விலகிக் கொண்டார்.

1894ம் வருஷம், சையத் முகம்மது அவர்கள், காங்கிரஸில் முதன் முதலாக ஆஜரானார். முதலில் ஓர் இந்தியர்; பின்னரே முஸல்மான் என்ற எண்ணமே இவருக்கு இருந்தது. 1898ம் வருஷத்துக் காங்கிரஸில், லார்ட் கர்ஸனை ராஜப் பிரதிநிதியாக வரவேற்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப்பற்றி மிக் அழகாகப் பேசினார். 1903ம் வருஷம் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸில், உபசாரணைக் கூட்டத்தலைவரா யிருந்தார். 'இந்தியாவைத் தாய் நாடாகக் கொண்ட ஹிந்துக்களும் முஸல்மான்களும் அரசியல் பாதையில் ஒன்று சேர்ந்து செல்லாத வரையில் இந்தியாவுக்கு விமோசனமே கிடையாது' என்று இவர் அப்பொழுது கூறினார். 1904ம் வருஷத்திலும் 1906ம் வருஷத்திலும் இவர், காங்கிரஸ் ஸ்டாண்டிங் கமிட்டி அங்கத்தினரா யிருந்தார். 1906ம் வருஷத்துக் காங்கிரஸில், இவர் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில், முஸல்மான்கள் பெரும்பான்மையோராகக் காங்கிரஸில் சேரவேண்டுமென்று அதிக உருக்கத்துடன் பேசினார். 1913ம் வருஷம் கராச்சி காங்கிரஸில் இவர் தலைமை வகித்துப் பேசிய பேச்சு, ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமைக்கு ஓர் இலக்கணம் போலிருந்தது. 1916ம் வருடம் லட்சுமணபுரி காங்கிரசில் ஏற்பட்ட ஹிந்து—முஸ்லீம் ஒப்பந்தத்திற்கு இவர் முக்கிய காரணமாயிருந்தார்.

காங்கிரஸைத்தவிர இன்னும் பல ஸ்தானங்களிலும் இவர் அங்கத்தினராயிருந்தார். சென்னை மஹாஜனசபையில் இவர் அநேக வருஷ காலம் டிரஸ்டியாகவும் தலைவராகவும் இருந்தார். இதே மாதிரி இன்னும் பல சங்கங்களிலும் கலந்துழைத்து வந்தார்.

இவருக்குப் பிற்காலத்தில் பணமுடை ஏற்பட்டு அதனால் மனமுடைந்து போனார். கடைசியில் 1916ம் வருஷம் பிப்ரவரி மாதம் 12ந் தேதி காலமடைந்தார்.

நாடும்—நகரமும்

—"நாட்டான்"

இயற்கையின் இன்பத்தை நுகராது செயற்கைச் சேற்றில் மயங்கி நிற்கும் இக்காலத்தில் நகர வாழ்வைவிட நாட்டு வாழ்வே சிறந்ததென்று கூறுவோமானால் அதனைப் பலர் எள்ளி நகையாடுவர் என்பதில் ஐயமில்லை. ஆயினும் நமது நிலையைக் குறித்துப் பிறர் பரிதாபமடையக் கூடிய தன்மையில் நாம் இப்பொழுது இருக்கிறோம். இதனை நாம் அறிந்து கொள்ளவில்லை. இதனால் பிற்காலத்தில் நமது சமூகத்திற்கு எவ்வளவு தீமைகள் உண்டாகுமென்பதை நாம் சிறிது சிந்தித்துப் பார்ப்போமானால் எவருக்கும் மனம் உருகாமலிராது.

மேனாட்டு நாகரீக வெள்ளம் இப்பொழுது இந்தியாவின் மூலை முடுக்குகளிலும் பாய்ந்து வருகிறது. இச்சமயத்தில் அதனை எதிர்கொண்டழைத்துப் போற்றுவதே கௌரவமாக எண்ணப்படுகிறது. இந்த வெள்ளச்சுழலில் அகப்பட்டுத் தத்தளிப்போர் பலர்; இதனுடைய வேகத்திலும் ஆரவாரத்திலும் முதலில் ஈடுபட்டு அதனோடு சென்று பிறகு தெய்வாதீனத்தாலோ தன் முயற்சியினாலோ கரையேறியவர் பலர். நாத்திகம், டம்பம், உலகத்தின் உண்மை நிலையறியாமை, பொருளாசை, சுயநலம் முதலிய பல பொருள்களைத் தன்னோடு கூட்டிக்கொண்டுவரும் இவ்வெள்ளத்தில் பலருக்கு மோகம் ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில், நமது புறத்தையும் அகத்தையும் தூய்மைப்படுத்தி நமக்கு எல்லா நலன்களையும் கொடுக்கக்கூடிய தூய ஊற்று நீர் இருக்கிறதென்று கூறினால் அதன் திண்மையை எவரும் சந்தேகிக்காதிருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நமது மூதாதைகளுக்கிருந்த தேகபலம் நமக்கு இருக்கிறதா? அவர்களுடைய மனோஉறுதி நமக்கு உண்டோ? அவர்களுடைய அஞ்சாமை முதலிய நறுங்குணங்கள் நம்மிடம் காணப்படுகின்றனவோ? அவர்களுடைய ஞாபக சக்தியில், அறிவு விளக்கத்தில், ஒழுக்கத்தில், நாம் இன்னும் எவ்வளவு பங்கை வைத்துக் கொண்டிருக்கிறோம்? இவைகளுக்கு, எவரும் உண்டு என்று பதிலிறுக்கமுடியாது. அங்ஙனமாயின், நூற்றில் எத்தனை பேர் நமது தாழ்வுக்குக் காரணம் என்ன என்பதை விசாரித்தனர்?

தேகபலத்தை எடுத்துக் கொள்வோம். ஒவ்வொரு தலைமுறையிலும் தேகபலம்குறைந்து கொண்டு வருவதை ஒவ்வொரு குடும்பத்திலும் காணலாம். பாட்டனார் இரு நூறு பவுண்டு நிறையுள்ளவராயிருந்தால், அவர் குமாரன் நூற்றைம்பதோடு

நின்று விடுகிறான்; அவன் மகன் நூறுபவுண்டுக்கும் குறைந்து விடுகிறான். இவனுக்குத் தோன்றும் சந்ததிகள் எத்தகைய திண்மையைப் பெற்றிருக்கும் என்பதை நாம் கூற வேண்டுமோ? இந்தியாவில் ஒருவருடைய சராசரிவயது இருபத்து மூன்று என்பது அனைவருக்கும்தெரிந்தொன்றே. நமது மூதாதையர் எண்பதுவயதாயினும் தலைநரையின்றி பல்விழ்ச்சியுறாமல், பார்வைக் குறைவின்றி, நரம்புகள் தளர்ச்சியுறாமல் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து வந்தார்கள். மூதாதையர்கள் எனின்,சரித்திரங்கடந்த பழைய காலத்து மனிதர்களைப் பற்றிக் கூறவில்லை. சென்ற நூற்றாண்டிலிருந்த மனிதர்களை எடுத்துக்கொண்டாலும் இந்தக்கூற்று பொருந்தும். ஒவ்வோர் ஆண்டும் மேற்கூறப்பட்ட அமிசங்கள் குறைந்து வருவதை எவரும் காணலாம். தற்காலத்திலோ, இருபத்தைந்து வயதிலேயே நரையும் மூப்பும் அதற்குரிய பிறவும் தோன்றி விடுகின்றன. முப்பது வயதில் ஊன்றுகோலையும் மூக்குக்கண்ணாடியையும் உதவியாக நாடுகிறார்கள். தேக பலமின்மையால் மனோ பலம் குறைந்து விடுகிறது. இதனால் பின்னர் உண்டாகும் விளைவுகளைப் பற்றி நாம்அதிகமாக விரித்துக்கூற வேண்டுவதில்லை. இது நிற்க. இப்பொழுது நாட்டில் நூல்கள் பெருகி விட்டமையால், ஞாபக சக்தியும் குறைந்து வருகிறதென்று கூறவேண்டும். இவைதவிர, நமது நாட்டின் வறுமை பெருகிக்கொண்டு வருவது அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

மேற்கூறப்பட்ட குறைகளுக் கெல்லாம் காரணம் என்ன என்பதைச் சிறிது ஆலோசிக்க வேண்டும். இது காலை, ஜனங்களுக்கு நகர வாழ்க்கையில் அதிக மோகம் விழுந்திருக்கிறதென்பதை எவரும் மறுக்க முடியாது. இதுவே, மேற்கூறப் பட்ட குறைகளுக் கெல்லாம் மூலகாரணம் என்று பொதுவாகக் கூறலாம். கிராமங்களில் ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்துவது இழிவு என்றும் நகரங்களில் துர்நாற்றங்களைச் சகித்துக்கொண்டு, காற்றில்லாத வெளிச்சமில்லாத இடங்களில் வருவாய்க்கு அதிகமான குடிக்கூலிகொடுத்து வாழ்வதே நாகரீகமென்றும் நாம் நினைத்து விட்டோம். அந்தோ! இஃதென்ன கொடுமை! பிழைக்கவழியில்லாதவன் பிழைக்க வழியுள்ளவன், பூஸ்திதியுள்ளவன், பூஸ்திதி இல்லாதான் ஆகிய அனைவரும் நகரங்களுக்குச் சென்றால் கௌரவமாகவும் நாணயமாகவும், வாழ்க்கையை நடத்தலாம் என்று நினைத்து விடுகின்றனர். இதனால் பல வித கஷ்டங்கள் உண்டாகின்றன. முதலில் விவசாயத் தொழிலை நெடுங்காலமாக அநுசரித்து வந்தவர், இப்பொழுது அத்தொழிலை விடுத்துவருவதால் நாட்டின் விளைபொருள் அளவு குறைந்து விடுகிறது. விளைவு குறைவாயிருக்க வாங்குவோர் மட்டும் அதிகமாயிருந்தால், விளை பொருள்களின் விலை அதிகமாவதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? நமது நாட்டின் விளை பொருள் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதென்றும் அதைக் குறைத்தால், விளை பொருள்களின் விலையும் குறையும் என்றும் சிலர் கூறலாம். அஃதுண்மை. அதற்கும் முயற்சி செய்யவேண்டியதே. ஆனால் அதற்காக, விவசாயத் தொழிலை விருத்தி செய்யக் கூடாதென்று எங்கே சொல்லப் பட்டிருக்கிறது? நாட்டுவாசத்தை இழிவாகக் கருத

வேண்டுமென்று எங்கே கூறப் பட்டிருக்கிறது?

நாட்டு வாசத்தினால் உண்டாகும் நன்மைகளைப் பலர் கவனிப்பதில்லை. மனிதனுடைய சுக வாழ்க்கைக்கு இன்றியமையாத வேண்டற்பாலது சுத்தமான காற்று. அக்காற்று நகரங்களில்—உதாரணமாகச் சென்னையில்-கிடைக்கிறதோ? நல்ல காற்று ஒன்றனை உத்தேசித்துக் கிராமங்களில் சென்று இருப்பதோ என்று சிலர் கேட்கலாம். தூய நீரும் சுத்த காற்றும் ஒருவனுடைய நல் வாழ்க்கைக்குரிய சாதனங்களாம். நகரங்களில் இவ்விரண்டுக்கும் ஜனங்கள் எவ்வளவு கஷ்டப் படுகிறார்கள்? குப்பைமேடுகளிலும் சாக்கடை யோரங்களிலும் வீதிக் கோடிகளிலும் பல துன்பங்களிடையே அடிமை ஊழியஞ் செய்தேனும், பிறருடைய திட்டு, அடி இவைகளைப் பொறுத்துக் கொண்டேனும் நகரங்களில் வசிக்க தற்காலத்தில் பலர் விரும்புகின்றனர். அதிக பணச்செலவில்லாமல், எளிய வாழ்க்கையை கிராமங்களில் நடத்த விரும்புகிறாரில்லை. கிராமங்களில் நாம் வேண்டிய மட்டும் காற்றையும் வெளிச் சத்தையும் அநுபவிக்கலாம். இவைகளுக்கு நாம் பணஞ் செலுத்த வேண்டுவதில்லை. மற்றும் கிராமங்களில் ஆசைக்கு அடிமையாகி சுயநலப் பிரியர்களாவதற்கு வழியில்லை. ஏனெனில் நகரங்களில்—முக்கியமாகச் சென்னையில்—வீதிகளில் டிராம்வண்டிகள் ஓடுகின்றன. ஆங்காங்கு காப்பிஹோட்டல்கள் இருக்கின்றன. நகரவாசி ஒருவன் சிறிதுதூரம் செல்லவேண்டுமென்றாலும் ஓர் ஊர்தியின் உதவியையே நாடுகிறான். அதனோடு நில்லாமல், காப்பிஹோட்டல்களைப் பார்த்த வுடனேயே அதனுள் நுழையும்படி இவனது மனது இவனைத் தூண்டுகிறது. உடனே உள்ளே சென்று நான்கணுவுக்குக் குறையாமல் தின்றுவிடுகிறான். ஹோட்டல் களுக்குச் செல்லாதிருப்பதும், வீதிகளில் நடந்து செல்வதும் மிகுந்த அகௌரவமென்று நகரங்களில் கருதப் படும்போது, இவன் அவைகளை எங்ஙனம் நிராகரித்திருக்கக்கூடும்? இவைகளினால் இவனுக்குப் பணம் அதிகமாகச் செலவழிகிறது. எனவே, பணத்தைச் சம்பாதிக்கப் பல வழிகளிலும் முயல்கிறான். மானம், ஒழுக்கம் முதலியனவற்றைப் பறக்க விடுகிறான். பொருள் சம்பாதிப்பதிலேயே இவனுடைய உழைப்பனைத்தும் செலவாகிறது. இதே நோக்கம் பலருக்கிருப்பதால் போட்டி ஏற்படுகிறது. எனவே ஒவ்வொருவனும் சுயநலப் பிரியனாகி விடுகிறான். தன் தேகம், தன்வீடு, தன் பொருள் என்ற எண்ணமே மேல் நின்று எழ, இவன் அவ்வெண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ள எல்லா முறைகளையும் கையாளுகிறான். மனித தேகம் எடுத்தது உண்பதற்கும் உறங்குவதற்குமே என்ற முடிவுக்கு வந்து விடுகிறான். இவைகளைவிட மேலான நோக்கங்கள் அல்லது வேலைகள் மனிதனுக்கு இருக்கின்றன என்பது இவனுக்குத் தெரிவதேயில்லை. இதனால் இவன் பிறந்த தேசத்திற்கும் தோன்றிய மதத்திற்கும் என்ன நன்மை? இவன் இருந்தும் ஒன்றே; இறந்தும் ஒன்றே.

* * *

எளிய ஆடம்பரமற்ற வாழ்க்கையிலேயே இன்பமிருக்கிறது. இவ்வாழ்க்கையிலேயே மனிதனுக்கு மனநிம்மதி உண்டாகும். கிராமங்களி

லேயே இத்தகைய வாழ்வை நடத்த முடியும். இயற்கை தேவியின் அருளாட்சிக்குட்பட்டு இயற்கைமயமாய் இலங்கும் இறைவனை அடையலாம். இங்ஙனம் கூறுவதால் மூக்கைப் பிடித்துக் கொண்டு மரத்தடியில் உட்காரவேண்டு மென்று கூறப்படுவதாக எவரும் நினையற்க. கிராமத்தில் வசிப்பது ஒருவன் பிறந்த நாட்டிற்கும் மதத்திற்கும் உபகாரமாய் இருத்தல் வேண்டும். சுதந்திர ஆவல் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் உண்டாவதற்குக் கிராம வாசமே சிறந்த வழியென்பது இக்கட்டுரை வரைவோருடைய அபிப்பிராயம். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாந் தொழுதுண்டு பின் செல்பவர்' என்ற மூதுரை ஈண்டு கவனிக்கற்பாற்று. உத்தியோகம் செய்வதே கௌரவமென்று நினைப்பதைப்போன்ற அறியாமை வேறொன்றில்லை. மாதம் இருபது ரூபாய்க்கும் முப்பது ரூபாய்க்கும் தன் தேகத்தையும் அறிவையும் உழைப்பையும் அடகு வைத்திருப்பது போல வன்றோ உத்தியோகம் செய்வது? இஃதென்ன கௌரவம்? கிராமத்தில் இவன் சுதந்திர வாழ்க்கையை இனிதாக நடத்தலாம்.

* * *

இவைகளெல்லாம் அநுபவத்தில் முடியாது என்று சிலர் கூறக்கூடும். இக்கூற்று ஏற்றுக் கொள்ளக்கூடியதன்று. காலமழை இல்லாமையால் சரியான சாகுபடி செய்ய முடிவதில்லை யென்றும், இதனால் மகசூல் குறைந்து போகிற தென்றும், எனவே, வயிறு பிழைக்க ஜனங்கள் நகரங்களுக்கு வந்து விடுகிறார்களென்றும்சிலர் கூறக்கூடும். காலமழை சரியாக இல்லையென்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். அதனால் ஓரளவு மகசூல் குறைந்திருக்கலாம். ஆனால் இஃதொன்றே முக்கியமான காரணமா என்பதே கேள்வி. நிலங்களை விருத்தி செய்யும் வழியில் தற்காலத்தவர் அதிக உழைப்பு எடுத்துக் கொள்வதில்லை. நிலங்களுக்கு நேராகச் சென்று கவனிப்பதும், விதை விதைக்குங் காலத்தும், அறுப்பறுக்குங் காலத்தும், கூட இருந்து பார்வையிடுவதும் அகௌரவமென்று கிராம வாசிகளே நினைக்கிறார்கள். இதனால் விளைவு குறைகிறது. மற்றும் விவசாயத்தை நூதன முறைகளில் அபிவிருத்தி செய்ய நம்மவர்கள் விரும்புவதில்லை. முதலிற் சிறிது பணஞ் செலவழிக்க மயங்கிக் கொண்டு அதனால் எப்பொழுதுமே தங்கள் வருவாயைக் குறைத்துக் கொள்கிறார்கள்.

* * *

கிராம வாசத்தை இழிவாக எண்ணினதன் பயனாகக் குடிசைத் தொழில்களிற் பல நாசமாகி விட்டன. இதனால் சாதாரணமான சாமான்களுக்கும் அந்நிய நாடுகளை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. முற்காலத்தில் அவசியமாக வேண்டப்படுகிற குடும்ப சாமான்களில் சாதாரணமானவையனைத்தையும் கிராம வாசிகளே செய்து கொண்டு வந்தார்கள். உடுக்க உடைக்கும் மற்றச் சில்லரை வசதிகளுக்கும் இப்பொழுது நாம் அந்நிய நாட்டின் தயவை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. கிராம வாழ்க்கையில் வெறுப்பும் நகர வாசத்தில் விருப்பும் நமக்கு ஏற்பட்டது மேனாட்டு நாகரீகத்தின் பயனேயாம். இதனால் வறுமையும் நோயும் அதிகமாயின. ஆதலின் இவைகளை ஒழித்து, இன்ப

ஏகாதிபத்தியம் என்றால் என்ன?

ஏகாதிபத்தியம் என்ற சொல்லானது இப்பொழுது செல்வாக்கிழந்து நிற்கிறது. அதோடுமட்டுமல்லாமல், அந்தப் பெயரைச்சொன்னாலே, அதனோடு ஏதோ ஒரு வகைத்தீமை கலந்திருப்பதாக நாம் எண்ணி விடுகிறோம். ஏகாதிபத்தியம் என்றால் என்ன என்ற கேள்வியை யாரையாவது கேட்டுப்பாருங்கள். போர் தொடுத்து நாடுகளைக் கைப் பற்றிக் கொள்வது; அந்த நாடுகளின் விஸ்தீரணத்தை அதிகப் படுத்திக் கொண்டு போவது; சுயேச்சாதிகாரம், அதன் கீழ் அடங்கி வாழும் அடிமைப்பிரஜைகள் ஆகிய

வாழ்க்கையை நடத்த வேண்டுமானால் கிராம வாழ்க்கையை நாடுதலே நலம்.

* * *

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் செல்வாக்குப்பெற்றிருந்த கிராமங்கள் இப்பொழுது சீர் கெட்டிருக்கின்றன. வீடுகள் பாழாகக் கிடக்கின்றன. ஒருவர் இருவர் இருந்தாலும் அவர்கள் மூடர்களாய் அறியாமைச் சேற்றைப் பூசிக்கொண்டிருக்கிறார்கள். உத்தியோகம் செய்ய வேண்டுமென்ற ஆசையுடன் படிப்பிற்காக வீட்டையும் வாசலையும் தோற்றுப் பரதவிப்போர் எத்தனை பேர்? நகரத்தில் ஒரு வீடு அல்லது பங்களா குடிக்கூலிக்கு எடுத்துக் கொண்டு கிராமத்திலிருந்து வரும் வருவாயை வைத்துக்கொண்டு இருக்கலாம் என்ற எண்ணத்துடன் வந்து பிறகு தங்களுடைய ஆடம்பரமான வாழ்க்கையினால் சொத்து அனைத்தையும் தோற்றுத் தவிப்போர் எத்தனைபேர்?

ஆதலின் செல்வாக்குள்ளவர், படித்தவர், எளிய டம்பமற்ற வாழ்க்கையில் விருப்பமுள்ளவர் கிராமங்களிற் சென்று வாசஞ் செய்யவேண்டும். அதனுடன் நில்லாமல் அங்குள்ளவர்களைச் சீர்திருத்தி, நாட்டுக்கு உபயோகமாகும்படி நடந்து கொள்ளுமாறு அவர்களைத் தூண்ட வேண்டும். இதற்காகப் பிரசாரவேலைகள் செய்யப்படவேண்டும். ஒவ்வொரு கிராமமும் தனது தேவைகளைத்தானே பூர்த்தி செய்து கொண்டதானால் அதைவிட வேறென்ன சுயராஜ்யம் நமக்கு வேண்டும்? இந்த நோக்கத்தையே, பிரசாரகரும் கிராமவாசஞ் செய்யப் புகுவோரும் கொண்டு உழைப்பாரானால் நம் நாடு விரைவில் சீரடையும் என்பதில் என்ன ஐயம் இருக்கிறது?

இவ்வளவையும் சேர்த்து ஏகாதிபத்தியம் என்ற ஒருசொல்லில் கூறிவிடலாம் என்றபதில்தான் உங்களுக்குக்கிடைக்கும். இப்படிப் பொதுப்படையாகத்தான் நம்மவர்கள் இந்த ஏகாதிபத்தியம் என்ற சொல்லைப்பற்றி அறிந்து கொண்டிருக்கிறார்களே தவிர, ஏகாதிபத்தியத்தின் தத்துவம் என்ன, அது தோன்றியதெப்படி முதலிய விஷயங்களைப்பற்றி எத்தனைபேர் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது சந்தேகந்தான். இதனாலேயே, எம்பையர், இம்பீரியல், இம்பீரியலிஸ்ட், இம்பீரியலிஸம் முதலிய சொற்றொடர்களைக் கேட்டவுடனேயே, பலர்க்கும் ஒருவித வெறுப்பு அல்லது அதிருப்தி ஏற்படுகிறது. 'எம்பைர்' (Empire) என்பதைத்தான் தமிழில் ஏகாதிபத்தியம் என்றும், ஏகாதிபத்திய தத்துவத்தை 'இம்பீரியலிஸம்' (Imperialism) என்றும் கூறலாம். 'எம்பைர்' என்ற இந்த வார்த்தையானது, 'இம்பெரேரே' (Imperare) என்ற லத்தீனியச் சொல்லிலிருந்து பிறந்தது. அதாவது உத்திரவுசெய்ய, கட்டளையிட, அதிகாரம் செய்ய என்று அர்த்தம். போர் ஸெல்லெனி என்ற ஓர் அறிஞன் 'இம்பீரியம்' என்ற சொல்லுக்கு வியாக்கியானஞ் செய்கிறபோது, அடிமையின் மீது ஆண்டை செலுத்துகிற, மனைவி மீது புருஷன் செலுத்துகிற அதிகாரம் என்று கூறுகிறான். இந்த வியாக்கியானத்தில் பழமைவாசனை நிரம்பியிருக்கிறதென்று தற்காலத்து அறிஞர்கள் எழுதுகிறார்கள். ரோமராஜ்யத்தில், ஒரு மாஜிஸ்ட்ரேட், தன் உத்திரவுகளுக்குக் கீழ்ப்படியச் செய்ய உபயோகிக்கும் அதிகாரத்திற்கு 'இம்பீரியம்' என்று சொல்லப்பட்டு வந்தது. பின்னர் இந்த அதிகாரமானது, அரசர்கள், அரசப்பிரதிநிதிகள் முதலியோருக்கும் அளிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது சிவில் அதிகாரங்களைக் குறிப்பிட்டதேயாயினும், நாளாவட்டத்தில், ராணுவசம்பந்தமான அதிகாரங்களை மட்டும் குறிப்பதாக வந்துவிட்டது. போர்வீரர்கள் யுத்தகளத்தில் ஒன்று சேர்ந்து விடுவார்களானால் அவர்கள், தங்கள் தலைவனை 'இம்பரேடார்' என்று சொல்லிக்கொண்டு வணக்கஞ் செய்வார்கள். அதே போர்வீரர்கள், யுத்தத்தில் வெற்றிபெற்றுத் திரும்பியதும், நாட்டுக்குத்தான் வணக்கஞ் செய்வார்களே தவிர, தனிப்பட்ட மனிதர் யாருக்கும் வணக்கஞ் செய்ய மாட்டார்கள். ரோமராஜ்யத்தில் இது சர்வ சாதாரண வழக்கமாயிருந்தது.

ஜூலியஸ் சீஸர் என்ற பிரபல ரோம அரசன், தன் ஆட்சியின் கடைசி பதினான்குவருஷகாலமும் 'இம்பரேடார்' என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டிருந்தான். அகஸ்டஸ் என்ற மன்னனோ; தனது சொந்தப் பெயருக்குப் பின்னால் இதனைச் சேர்த்துக்கொண்டுவிட்டான். இவனுக்குப்பிற்பாடு வந்த மன்னர்கள் இந்த முறையையே அநுஷ்டித்து வந்தார்கள். நாளாவட்டத்தில் சர்வாதிகாரங்களையும் குறிக்கிற ஒரு சொல்லாக இது வந்துவிட்டது.

அமெரிக்காவின் யந்திர நாகரிகம்

—வர்க்கீஸ்

ஏராள உற்பத்தி (Mass Production) என்ற பேரில் இக் காலங்களில் பிரசாரம் செய்து வருவதை அனுசரித்து உற்பத்தி செய்யும் முறையை அமெரிக்காவைப் போல் வேறு எந்த தேசத்திலும் பார்க்க முடியாது. மற்றெல்லா விஷயங்களிலும் முன்னேறி யுள்ள இங்கிலாந்தும் இந்த விஷயத்தில் அமெரிக்காவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஐம்பது வருடங்களுக்கு பின்னடைந்திருக்கிற தென்பது புலப்படும். இயந்திரங்களை ஆதாரமாகக்கொண்ட ஒரு சுவர்க்க லோகமே அமெரிக்க ஐக்கிய நாடு. இரும்பு, நிலக்கரி முதலிய மூலப்பொருள்கள் ஏராளமாய் கிடைப்பதால் அத்தேசத்தின் கடலோரங்கள் கைத் தொழில்களுக்கும், புது மண்ணின் உரத்தினால் மத்தியப் பிரதேசங்களிலும் மேற்றிசையிலும் கோதுமை, சோளம் முதலிய பயிர்களுக்கும் பொருத்தமா யிருக்கிறது. இரும்புத் தொழிலுக்கு இணை சொல்ல முடியாத பிட்டர்ஸ்பர்க்கும், கோதுமைப் பயிருக்குக் கோவிலாய் விளங்கும் சிக்காகோவும் இவைகளுக்கு உத்தம உதாரணங்களாகும்.

'ரஸ்தா ராஜா'வென்றோ, மோட்டார் மன்னனென்றோ கியாதிபெற்ற 'போர்டு' மோட்டாரின் உற்பத்தி சாலை, மிஷிகன் தடாகத்தின் தீரத்திலுள்ள டெட்ராயிட் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட் டிருந்தாலும் அதன் கிளை ஸ்தாபனம் ஒன்று நியூயார்க்குக் கெதிரில் ஹட்ஸன் நதியின் மறுகரையிலுள்ள நியூ ஜெர்ஸி என்னும் நகரத்திலிருந்து வருகிறது. இதனைப் பார்வையிடும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. டெட்ராயிட்டில் செய்யப்படும் மோட்டாரின் பாகங்கள் போர்டின் சொந்தக் கப்பலில் கொண்டு வரப்பட்டு இங்கு மோட்டார் வண்டியாக இணைக்கப் படுகின்றன. ஆதலால் இதனை இணைக்கும் சாலையென்று சொல்லலாம்.

இணைக்கும் விதம்

இந்த ஆலையில்வேலைசெய்வோருக்கு ஏற்படும் ஆபத்துக்கோ, இடையூறுகளுக்கோ இதர கஷ்டங்களுக்கோ கம்பெனி ஜவாப்தாரியாகா தென்று அச்சடித்த பாரங்களில் கையெழுத்திட்டபின்னரே வேலையாட்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்கிறார்கள். இவ்வித முன்னேற்பாடுட னிருந்து வருவதினால், இவ்விதமான அநேக சந்தர்ப்பங்களில் முன்னர் இவர் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாரென்று நினைக்க வேண்டி யிருக்கிறது. இரண்டு

டடுக்குள்ள ஆலையின் மேல்மாடியில் இதன் ஆரம்ப வேலைகளெல்லாம் நடக்கின்றன. சதா சுற்றிக் கொண்டே இருக்கும் ஒரு பெல்டின் மூலம் வந்து கொண்டிருக்கும் இரும்புத் துண்டுகளை ஒன்று சேர்த்து முதல் முதலாக அடித்தட்டு செய்யப் படுகிறது. பின் இது தண்டவாளத்திலேற்றப் பட்டு அங்கிருந்து அது யாத்திரையை ஆரம்பிக்கிறது. மத்தியில் ஆங்காங்கு நிற்கும் ஒவ்வொருவரும் அது போய்க்கொண்டிருக்கும் போதே ஆணி, நட், போல்டு போன்ற அவயவங்கள் அமைக்கிறார்கள். இவ்விதமாக அதி சீக்கிரத்தில் ஒரு மோட்டார் வண்டி உற்பத்தியாகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு டிரைவர் அதில் தாவிக் குதித்து வண்டியை ஓட்டி வேறொரு நிலயத்தில் கொண்டு போய்ச் சேர்க்கிறான்.

கூலி விகிதங்கள்

வேலை யாட்கள் ஒரே தொழிலி லீடுபடுவது, அவர்களுக்கு அத்தொழிலில் பாண்டித்திய மேற்படு மென்பது போர்டின் அபிப்பிராயம். ஆனால் மற்ற முதலாளிகளின் அபிப்பிராயம் நேர் விரோதமானதே. ஒரேவிதமான தொழிலைச் செய்து வருவதால் அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு வேலையில் அசிரத்தை ஏற்படுமென்றும் அதனால் வண்டியின் தரம் குறைந்து போகுமென்றும் அவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். ஆனால் இவ்விருவகைக் காரர்களுடைய முயற்சிகள் தொழிலாளிகளுடைய சுகத்தையும் சந்தோஷத்தையும் விருத்தி செய்வதற்கல்ல. ஆனால் எந்த வகையைக் கைக்கொண்டால், தொழிலாளிகளிட மிருந்து அதிகமான வேலை வாங்கலா மென்பதுதான். தொழிலாளிகளுடைய ஜீவியத்தின் ஒளியை நசுக்கக் கூடியதாயிருந்தாலும் பலனைக் கவனிக்கும் பொழுது போர்டின் தத்துவம் பொருத்தமாகத் தோன்றும். தொழிலாளிக்கு தினப்பிரதி இருபது ரூபாய் வரை கொடுக்கப்படுகிற தென்பது இந்தக் கஷ்டங்களுக் கெல்லாம் ஒரு சாந்தியாகிற தல்லவா? போர்டு அளவுக்கு மிஞ்சி லாபம் தேட வேணுமென்று மட்டும் நினைக்கும் ஒரு முதலாளியல்ல வென்று சொல்லவேண்டி யிருக்கிறது. நல்ல வேலைக்காரனுக்கு நல்லசம்பளம் கொடுப்பார், நல்லசம்பளம் கொடுத்து நன்றாக வேலைவாங்குவார். ஐக்கிய நாடு சம்பந்தப்பட்டவரை இந்தக் கொள்கை மிகப் பொருத்தமானதே. காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை வேலைசெய்யும் கல்கொத்தனுக்கு நாளொன்றுக்கு முப்பது ரூபாய் சம்பளம் உண்டு. காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை வேலை செய்யும் யூனியனில் சேர்ந்த (Trade Union) வர்ணமிடும் ஒருவனுக்கு நாளொன்றுக்கு 24 ரூபாயும், யூனியனில் சேராதவனுக்கு 12 ரூபாயும் சம்பளம். ஈயம் சம்பந்தப்பட்ட வர்ணவேலை ஆபத்தானதால் வேலை நேரம் குறைவாயும்கூலிவிகிதம் அதிகமாகவுமிருக்கிறது. இதர சாதாரண முரட்டு வேலைகளுக்கு மணிக்கு ¼ வீதம் வாரம் ஒன்றுக்கு 75 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இவ்வித சுகஜீவிகளான அமெரிக்கத் தொழிலாளிகள் தொழிற்சாலைகளுக்கு தங்கள் சொந்த மோட்டார்களில் வந்து போவதிலும் அவர்களது வீடுகளில் ரேடியோ போன்ற நவீன இயந்திரங்கள் வைத்து அனுபவிப்பதிலும் ஆச்சரியப்பட இடமில்லை? வேலை முடிந்தால்

முதலாளியும் தொழிலாளியும் ஒன்று தான். கீழ்நாட்டில் ஒரு ஜமீன்தாராய் பிறப்பதைக் காட்டிலும் மேனாட்டில் ஒரு தொழிலாளியாய்ப் பிறப்பது மேலான தாகும்.

லாகிரி வஸ்துக்கள் கூடாது என்று போர்டின் தொழிலாளிகளுக்கு ஒரு நிபந்தனையுண்டு. அவர்கள் மதுபானம், புகையிலை முதலிய லாகிரிவஸ்துக்களை உபயோகித்தல் கூடாது. வெளியிலுள்ள தொழிலாளி சங்கங்களில் அங்கம் வகிக்கக் கூடாது. ராக்பெல்லர், ஹிட்லர், முசோலினி ஆகிய மகான்களைப்போல் போர்டும், லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பது கிடையாது. ஐக்கியநாட்டில் மதுவிலக்கு ஏற்படுவதற்குமுதலாளிகளின்முயற்சி அதிகமெனச் சொல்லப்படுகிறது. ஏனென்றால் சனிக்கிழமை தோறும் கிடைக்கும் சம்பளங்களைக் கொண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் குடித்து கூத்தாடித்திரிந்த தொழிலாளிகள் திங்கட்கிழமைகளில் வேலைக்கு வராது தொழிற்சாலை வேலைகள் நடப்பது கஷ்டமாயிற்று. இந்த ஏகாதசி திங்கட்கிழமைகளை (Blue Mondays) ஒழித்து தொழிற்சாலைகளில் ஒழுங்காய்வேலை நடத்தி லாபம் தேட எடுத்த முயற்சியால் ஐக்கியநாட்டில் மதுவிலக்கு ஜனித்தது. இந்த உத்தியோகத்திலும் போர்டு முக்கிய ஸ்தானம் பெற்று வந்தார். குடியை வெறுக்கும் நம் நாட்டாரோடு சிறப்பாக மகம்மதியரோடு அவருக்கு அதிகப்பிரிய மென்பதையும் அதனால் ஒரு காலத்தில் அவர்களுக்கு தன் கம்பெனியில் அதிகமாக வேலை கொடுத்து வந்தாரென்பதையும் நானறிவேன்.

பந்துவா ? சத்துருவா ?

போர்டை, தொழிலாளிகள் தெய்வமாகக் கருதி வந்தார்களெனினும் அவர்களே இப்பொழுது அவரை வெறுக்கிறார்கள். யுத்தத்திற்குப் பின், செலவு நடை அதிகமானதால் சம்பளங்களில் வெட்டு ஏற்படுத்தினர். அவர்கள் வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்த போது அவர்களை நேரே சுட ஏற்பாடு செய்ததாகவும் கேள்வி. சம்பளக் குறைவு ஏற்படுத்தாமற் போனால் தொழிற்சாலைகளை மூடும்படி நேரிடுமென்றும் அதன் மூலம் தனக்கும் தன் வேலையாட்களுக்கும் மிகுந்த கஷ்டங்களேற்படு மென்றும் தன் பேரில் புகார் சொல்லுவோருக்குப் பதிலளிப்பார். இவ்விதமாக தன்னுடன் போட்டி யிட்ட இதர மோட்டார் தொழிலாளிகள் தன்னைத் தோல்வியடையச் செய்த முயற்சிகளைக் கவிழ்த்து விட்டார்.

சாஸ்திரப்பற்று

மற்ற கோடீஸ்வரர்களைப் போல் போர்டு, பணத்தை தர்மவிஷயங்களில் வியர்த்தம் செய்கிறதில்லை. தர்மம் செய்வதில் அவருக்கு நம்பிக்கையில்லையாம். அதற்குப் பதிலாக பிழைக்கும் வழியை எளிதில் கற்றுக் கொள்ளக்கூடியதான பாடசாலைகளை அவ்வூரில் நிறுவியுள்ளார். கேவலம் அக்ஷர ஞானம் மட்டும் பெற்றுள்ள அவருக்கு தொழிற் கல்வியில் அதிகப் பற்றிருந்து வந்தது. சாகித்தியக் காரர்களைக் கண்டால் அவருக்குப் பிடிக்காதென்றே சொல்லலாம். மத்தியில் ஸோயா பீன் (Soya Bean) முதலிய புதுப்பயிரில் அதிகக் கவனம் செலுத்தி வந்ததுடன் அதுபற்றிய பிரசார வேலைகளிலும் ஈடுபடலானர்.

ரப்பர் தொழில்

போர்டும் எடிசனும் அத்தியந்த சிநேகிதர்கள். தன் தொழிலுக்கு மிக

வும் அத்தியாவசியமான ரப்பர் விலை திடீரென ஏறியதும் 'கோல்டன் ராட்' (Golden Rod) என்னும் ஒரு விதக்காட்டுப் புல்லிலிருந்து செயற்கை ரப்பர் உற்பத்தி செய்வதற்கு எடிசனைத்தூண்டி அவருக்கு வேண்டிய ஊக்கமும் கொடுத்து வந்தார். அது சமயந்தான் அந்த இயந்திர மந்திரவாதி காலஞ்சென்றது. ரப்பர் முதலாளிகளைக்கவிழ்ப்பதற்கு போர்டு, பிரேஸில் தேசத்தில் ரப்பர் தோட்டங்கள் ஏற்படுத்தினு ரென்றாலும் போக்குவரவு சௌகர்யக் குறைவினுலும் மலைக்காய்ச்சல் காரணத்தினுலும் கூலிக்காரர் கிடைப்பது அரிதாயிற்று. தோல்வியை ஏற்றுக்கொள்ளாதஅவர், தொழிலாளிகளை விமானங்களிலேற்றிச்செல்ல முயற்சித்தாலும் அதுவும் பிரயோசனப் படவில்லை. இதனுலேயே ரப்பருக்கு இப்போதிருக்கும் விலையாவது இருந்துவருகிறது.

முதலாளியை முதலாளி விழுங்கும் தேசம்

மூன்று ரூபாய்மட்டும் விலையிருந்த போர்டுகம்பெனியின் ஷேர், ஆறுபிரம் ரூபாயாகஉயர்ந்ததும்அதன் பெருத்த லாபத்தில் பங்குபெற சில பேங்குக்காரர் விரும்பினுர்கள். அதிசீக்கிரத்தில் அவர்களுக்கு இதற்கொருசந்தர்ப்பமும் கிடைத்தது. தொழிற்சாலையைப் புதுப்பிக்க ஏராளமான பணத்தேவை ஏற்பட்டகாலத்தில் பேங்குக்காரர்கள் உதவிக்கு ஓடிச்சென்றனர். ஆனுல் போர்டின் சகல சொத்துக்களையும் ஈடாய்க் கொடுக்க வேணுமென்ற அவர்களின் நிபந்தனை நிராகரிக்கப் பெற்றதினுல் இந்த ஏற்பாடு ஈடேறவில்லை. வேறு விதத்தில் பணத்திற்கு ஏற்பாடு செய்து யாதொரு தொழில்காரனும் வியாபாரியும் பேங்குகளுக்குக் கடன் பட்டவராயிருக்கக் கூடாதென்ற தன்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்தினுர். கடன் பட்டால் மூழ்க வேண்டியதுதான். அமெரிக்கா, முதலாளியை முதலாளி விழுங்கும் தேசம். முதலாளித்துவத்தையும் முதலாளிகளின் ரகசியங்களையும், தந்திரங்களையும் நல்ல விதத்தில் தெரிந்து கொள்ளுவதற்காக போர்டை ஒரு உதாரணமாய் எடுத்துக் கொண்டு இவ்வளவும் சொல்ல நேர்ந்தது.

பயம் வேண்டாம்

இயந்திர நாகரிகம் பெருத்து அதிகமாக உபயோகப்பட்டு வருவதினுல் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கு மென்று சமதர்மக் கொள்கைக்காரர் அபிப்பிராயப் படுகிறுர்கள். செயற்கைப்பட்டு செய்யும் ஒரு பெரிய தொழிற்சாலைக்கு ஆறு வேலையாட்கள் போதுமாம். பாக்கி ஆறுயிரம் பேர் செய்ய வேண்டிய வேலைகள் சில பொத்தான்களை அமுக்கிய மாத்திரத்தில் செய்யப்பட்டு வருகின்றன. இருந்தாலும் இயந்திர அபிவிருத்தியால் ஏற்படும் வேலையில்லாமை, ஜனங்களை அவ்வளவு கஷ்டத்திலாழ்த்தி விடுமென்று பயப்படுவதற்கில்லை. மாட்டு வண்டி போய், மோட்டார் வந்த காலத்தும், படகுகள் போய் ஸ்டீம் லாஞ்சுகள் வந்த காலத்தும் வண்டிக் காரர்களுக்கும் படகோட்டிகளுக்கும் வேலையில்லாதாகிறது. ஆனுல் புதுப் புதுத் தொழில்கள் ஆரம்பமாகும். இக் காலங்களில் பழைய தொழில்களை விட்டு புதுத் தொழிலாளிகளாய் மாற்றமடைகிறுர்கள்.

குடிசைத் தொழிலும் இயந்திரத் தொழிலும்

இவ்விதமிருக்க ஒருநாள் திருவனந்தபுரத்திலிருந்து கொண்டு போன தந்தத்திலும் மரத்திலும் செய்யப்பட்ட யானைகளை நியூயார்க்கில் விளையாட்டுச் சாமான்கள் விற்கும் ஒரு கம்பெனிக்கு விற்பனைக்காக எடுத்துச் சென்றேன். இம்மாதிரி சாமான்களில் அதிகமும் விருப்பமுள்ள மிஸ் ப்ரௌனிடம் கீழ்க்கண்ட சம்பாஷணை ஏற்பட்டது:—

'இந்தியாவிலிருந்து ஒரு டஜன் யானைகளை இங்கு விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கிறேன்.'

அவர் நாலாபக்கத்திலும் ஆச்சரியத்துடன் சுற்றிப்பார்த்தார்.

'உயிருள்ள யானைகளல்ல; மரத்திலும் தந்தத்திலும் செய்யப்பட்ட விளையாட்டு யானைகள்தான்' என்று சொல்லி அவைகளை மேசை மேல் வைத்தேன். பின்னர் விலைபேசப்பெற்றது.

'இதொன்றுக்கு மூன்று கேட்பதின் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை' என்று அந்த யூதஸ்திரீ என்னிடம் சொன்னாள். கூடினால் ஒன்றரை ரூபாய் தருகிறேன். அதோடு கூட ஒரு டஜன் யானையெல்லாம் எங்களுக்குப் போதாது. ஒன்றரை ரூபாய் விலைவைத்து ஐம்பதினாயிரம் யானைகளை மூன்று மாதங்களில் தருவதாய் ஒப்பந்தம் செய்து தர முடியுமா?'

'உங்கள் நாட்டில் தினந்தோறும் ஆயிரம் இரண்டாயிரம் கணக்கில் இயந்திரத்தில் செய்வது போலல்ல எங்கள் தேசத்தில் யானைகள் செய்வது. இது கைவேலை. வெகுநேரம் சிரமப்பட்டு கண் கடுக்கச்செய்த சிற்பவேலை. இதோ பாருங்கள் சிற்பத் திறமையை. ஒரு யானை மற்றொரு யானையைப் போலிருப்பதில்லை.'

அவர் புன்முறுவல் பூத்த முகத்துடன் கீழ்க்கண்டவாறு சொன்னார்:— எவ்வளவு கால நஷ்டம்.? இம்மாதிரி யானைகளை இயந்திரத்தின் உதவியால் மணிக்கு நூறோ இருநூறோ செய்யலாம். ஆனால் அவையெல்லாம் ஒரே அளவிலும் ரூபத்திலுமிருக்கக் கூடும். அதனாலென்ன ?பலபேர்தானே வாங்குகிறார்கள். இயந்திரத்தின் உதவியால்தான், மோட்டார், ரேடியோ, பௌண்டன்பேனா முதலிய சாமான்களை ஏழைகளாலும் வாங்கமுடிகிறது. கையால் செய்யப்பெறும் சாமான்கள் கண்காட்சி சாலைகளில் வைக்க உதவுமேயல்லாது சாதாரணமாய் மனிதர்களுக்கு உபயோக கரமானவையாகமாட்டா.

சோற்பவிலை உடைகள்

அத்தேசத்தில் எனக்கு விசேஷமாய்த் தோன்றிய மற்றொரு விஷயம் 'ஸூட்டுகள்' தைக்கும் முறை. அளவு கொடுத்து வேண்டியதுபோல் தைக்கும் ஒரு ஸூட்டுக்குத் தையற் கூலி மட்டும் ரூ 75. கேட்கும்போது தயார்செய்யப்பட்ட ஒரு ஸூட்டுக்கு அதேவிலைபெற்றுக் கொள்வதின் ரகசியத்தை விசாரித்தேன். ஸூட்டும் ஆயிரக் கணக்கில் இயந்திரங்களில் வெட்டவும் தைக்கவும் செய்கிறார்கள்.

இந்தத் தொழிற்சாலையையும் பார்வையிட்டேன். சுமார் 100 அடி நீளமுள்ள ஒரு மேஜையில் பல நிறத்

திலுள்ள பலரகம் துணிகள் ஒன்றின் மேலொன்றாய் விரித்திட்டுள்ளதில் எல்லாவற்றிற்கும் மேலுள்ளதில் கொஞ்சமும் துணி நஷ்டப்படாத விதத்தில் சாக்பீஸினால் பல அளவுகளுள்ள கோட், வேஸ்ட் கோட், டிரௌஸர்கள் வரையப்படுகின்றது. இதற்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் மின்சாரக் கத்தரியை இந்த வரைகளில் ஓட்டுவதினால் பல அளவுள்ள ஸூட்டுகள் ஒரேயடியாய் வெட்டப்படுகின்றன. இவை வேறொரு மின்சார இயந்திரத்தில் தைக்கவும் பெறுகின்றன.

இந்நாட்டில் விவசாயத்திலும் இந்நூதன முறை கையாளப் பெறுகிறது. ஒரேயடியாய் கிடக்கும் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களில் விமானங்களிலிருந்து விதை விதைத்து இயந்திரங்களினால் அறுவடை செய்து வருகிறார்களென்று சொன்னால் போதுமல்லவா?

செயற்கை உற்பத்தி

நாட்டுப் புறங்களில் பதினாயிரக் கணக்கான பசுக்களிருந்து வரும் 'ராஞ்ச்'களிலிருந்து ரயில் மார்க்கமாய் கொண்டு வரும் பால்தான் நகர வாசிகளுக்கு உபயோகப்படுகிறது. ஆனால் இந்த ராஞ்சுகளில் காளைகளில்லை யென்றே சொல்லலாம். பீஜத்தை செயற்கை முறையில் அதாவது பிச்சாங் குழலின் உதவியைக் கொண்டு உட்செலுத்தி காரியங்கள் நடைபெற்று வருகின்றன. மனித வர்க்கத்திற்கும் இது சாத்தியமான தென்பதை ரூபிப்பதற்கு சில அமெரிக்க யுவதிகள் இவ்வித பரீட்சைக்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்களாம். இவ்வித சந்ததிகள் தான் 'டெஸ்ட் ட்யூப்' குழந்தைகளென்று சிலர் தவறாக அபிப்பிராயப் படுகின்றனர். பத்து மாதங்கள் பூர்ணமாய் பிரசவிக்கும் காலத்தில் ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்கும் நோக்கத்துடன் ஐந்தாறு மாதங்களில் ஆயுதப் பிரயோகத்தினால் வெளியாக்கிக் கண்ணாடிக் கூட்டிலிட்டு வளர்த்தி பத்தாவது மாதத்தில் வெளியாகும் குழந்தைகளே, 'டெஸ்ட் ட்யூப்' குழந்தைகள். ஸினிமா நடிகைகளிடையில் பரவிவரும் ஒரு நாகரீக மிது. ஒரு கண் காட்சி சாலையில் இவ்விதம் கண்ணாடிக் கூட்டில் வளர்ந்து வரும் ஐம்பது குழந்தைகளைப் பார்த்தேன்.

மாமிச வியாபாரம்

சிக்காகோவில் லக்ஷக் கணக்காய் பன்றிகளையறுப்பதும், ரோமங்களை அகற்றுவதும், தோல்களை அடுக்கிக் கட்டுவதும் எல்லாம் இயந்திரத்தின் உதவியால்தான். ருசியை அதிகப் படுத்துவதற்காய் ரொட்டியும் பாலும் கொடுத்து வளர்த்து வரும் பன்றிகளுடையவும் வாத்துகளுடையவும் கதியும் இதுதான்.

ஜீவனை உற்பத்தி செய்வது தவிர்த்து இதர எல்லா வேலைகளும் இயந்திரத்தினாலேயே நடத்தப்பட்டு வருகின்றன. அதனையும் பூர்த்தி செய்யாமல் மேல் நாட்டு சாஸ்திர ஆராய்ச்சி முடிவடையுமா என்பது சந்தேகாஸ்பதமானதாகும்.

(மாத்ரு பூமி)

தமயனின் கடிதம்—4

"தேவி தாஸன்"

(விபத்தைக் குறித்து இன்சூரன்ஸ் கம்பெனியார் வழங்கிய பொருளைக் கொண்டு, தமயனின் மணத்தை முடித்துக் கொள்ளுமாறு தம்பி விடுத்த கடிதத்திற்கு தமயனின் பதில் கடிதம்.)

இன்சூரன்ஸ் கம்பெனியார்—தம்பியுனக்
கீந்த பொருள் வளத்தால்
என்மணச் சீரினையே—அடாதம்பி!
இயற்றத் துணிவு கொண்டாய்.

உன்மனச் சீரினையே—கண்டுநானும்
உவகையுங் கொண்டேனடா.
பின்னோர் வருத்தமடா—மனத்துள்ளே
பிறக்கக் கண்டேனடா. 1

போற்றித் தினந் துதித்தும்—அன்னைபணி
பொலிவற் றிலங்கை யிலே
நாற்ற உடல் வாழ்வை—தம்பிநீயும்
நம்பி யதன் வளத்தைச்

சாற்றினாய் உயர்த்திடவே—இதுமிகச்
சரியும் இல்லை யடா.
ஆற்றுவோம் பண்டையோர்கள் கண்டதாயின்
அறப்பணி சீர் சிறக்க. 2

சின்னஞ் சிறுவயதில்—தந்தைநம்மைச்
சீரற்ற நிலையினிலே
தன்னந் தனியாகத்—தவிக்கவிட்டுத்
தாயின் அடி புகுந்தார்.

என்னநாம் செய்வதென்று—நெஞ்சம்மிக
ஏங்கித் தளர்ந்த மடா.
அன்னை பணியளித்தாள்—நாமுமதை
ஆற்றித் துணிவு கொண்டோம். 3

கொண்ட பணிப்பயன்கள்—பண்டையோர்கள்
குறித்த நெறிகளுக்கே
கண்டிட வில்லையென்றும்--அவர்மிகக்
காத்தசெந் நெற் புலன்கள்

கொண்டற் றுறைவதனால்—பயன்மிகக்
கொடுக்க வில்லை யென்றும்
கண்டன்னை யீந்த பொருள்—இன்றுநீ
கண்ட பொரு ளடாவோ! 4

சன்ம வினைப் பயனால்—அன்னை பொருள்
சாதித்தா ளிவ்வகையில்
தன்ம நெறி படைத்த—தலத்தி லின்று
தம்பி நாம் வந்தோ மடா.

இன்னறுஞ் சன்மத் தேனும்—நாமு மடா
இயன்ற அறஞ் சமைப்போம்.
தன்மம் தலைகாக்கும்—என்னுமொழி
தங்க மொழி யலவோ! 5

எண்ணம் உயர்த்திடுவாய்—தம்பியினி
யேனும்நம் அன்னைபணி
பண்ணத் துணிவுகொள்வாய்—உடலிந்தப்
பாரி லிலங்கு மட்டும்

கண்ணிமைப் போதுமடா—தேவிபுகழ்
கடவாது கருத் தொளிரின்
மண்ணிலே விண்ணகத்தை—அவள்நமக்கு
மலரச் செய்வாளடா! 6

புராதன எகிப்து

(காப்பிரைட்)

—"துரோணன்"

1. முதல் வம்சர்வளிக்கு முன்னர்

ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்னர், உலகத்தில் எத்தனையோ நாடுகள் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்து வந்தன. அவைகளிற் பெரும் பாலன இப்பொழுது மண்ணோடு மண்ணாகிக் கலந்து விட்டன. அவற்றின் பூர்விகப் பெருமையை, பூமியைக் குடைந்து தான் நாம் இப்பொழுது பார்க்க வேண்டியிருக்கிறது. இந்தக்கால வரம்புக்கு உட்படாது இன்னும், இனி எப்பொழுதும், ஜீவியதசையில் இருக்கக் கூடியது நமது தாய் நாடான புனித பாரதந்தான்.

எகிப்தியர்களும், அஸ்ஸிரியர்களும், பாபிலோனியர்களும், கார்த்தஜீனியர்களும் ஒரு காலத்தில் இப்படித்தான் வாழ்ந்திருக்க வேண்டும் என்று இப்பொழுது நாம் ஊகிக்கவே முடிகிறது. ஆனல் நமது பாரத ஜாதியின் முந்தைய வம்சத்தினர் எப்படி எப்படி வாழ்ந்து வந்தார்கள் என்பதை நாம் தாராளமாக அறிந்திட்டுக் கூறலாம். இந்த ஒரு விஷயத்திற் காவது நாம் பெருமை கொள்ள வேண்டாமா? ஆனல் இந்தப்பெருமையிலே நம்மை நாம் மறந்து விடாமல் எச்சரிக்கையா யிருப்பது நமது கடமை.

புராதன நாகரிகப் பெருமை நிறைந்த நாடுகளில் தலைசிறந்தது எகிப்து தேசம். இதன் பூர்விகத்தைப் பதினையிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னரிருந்தே அளந்து கொண்டு போகலாம்.

பூகோள சாஸ்திரிகளும், சரித்திரக்காரரும், எகிப்தை, மேல் எகிப்து (Upper Egypt) கீழ் எகிப்த (Lower Egypt) என்று இரண்டு கூறுகப் பிரிப்பர். மேல் எகிப்து என்பது, தற்போதைய கெய்ரோ நகரத்திலிருந்து தெற்கிலுள்ள அஸ்வான் நகரம் வரையில் சுமார் 547 மைல் நீளமுள்ள கணவாய்ப் பிரதேசம். இந்தப் பிரதேசத்தின் இருமருங்கிலும்—அதாவது கிழக்கிலும் மேற்கிலும்—சுண்ணும்புக் கற்கள் நிறைந்த மலைகள் இருக்கின்றன. ஒரு காலத்தில், பூமி யானது வெடித்துப்போய் ஒரு பெரிய பள்ளத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டு மென்றும், அதுவே பிற்காலத்தில் நைல் நதியாகப் பரிணமித்திருக்கிற தென்றும், இந்த நைல் நதிதான் நாளா வட்டத்தில் இந்தக்

கணவாய்ப் பிரதேசத்தை அகலப் படுத்தியிருக்க வேண்டுமென்றும் பூமி சாஸ்திர நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

நைல் நதியானது, எகிப்தின் வடக்குப்பாகத்தில் பல கிளைகளாகப் பிரிந்து மத்தியதரைக்கடலில் போய் சங்கமமாகிறதல்லவா? முக்கோண வடிவமாயுள்ள இந்தப் பாகம் சமதரையாயுள்ளது. எனவே, ஆதிகாலத்திலிருந்தே இந்த இரண்டு பிரதேசங்களில்—அதாவது மேல் எகிப்து கீழ் எகிப்து—வசிக்கும் ஜனங்கள் வெவ்வேறு சுபாவமுடையவர்களாக இருந்தார்கள் என்று சொல்லவேண்டும். ஆனால் பூர்விகக்குடிகளிற் பெரும்பாலோர் மேல் எகிப்து என்கிற கணவாய்ப்பிரதேசத்தில் தான் வசித்திருந்தார்களென்றும், எகிப்திய நாகரிகம் இந்த இடத்திலிருந்துதான் உற்பத்தியாயிற்றென்றும் சரித்திரக்காரர்கள் துணிகிறார்கள். இங்கே வசித்திருந்த பூர்விக எகிப்தியன், தனக்குக்கிழக்கிலும் மேற்கிலும் மலைகளைத்தான் பார்த்தான். எனவே, உலகமெல்லாம் இதற்குள்ளேயே அடங்கிவிட்டதாக இவன் நினைத்தான். பூமியிலேகூட இரண்டு வகைதான் உண்டென்றும், ஒன்று, தான் வசித்துக்கொண்டிருக்கிற கரிசல்பூமி; மற்றொன்று செம்மணல் நிறைந்த பாலைவனம் என்றும் இவன் கருதியிருந்தான். எகிப்து என்ற சொல்லுக்கே, கரிசல் பூமி என்றுதான் அர்த்தம். இதனால்தான், தனது நாட்டிற்கும் எகிப்து என்று பெயர் கொடுத்தான். இவனுக்கு எல்லைப்புறமென்பதோ, அந்நியநாடுகள் என்பதோ தெரியாது. ஏனென்றால் அவைகளை இவன் பார்த்தேயறிய மாட்டான். தவிர, நைல் நதியில்லாமல் வேறெந்த நாடும் உலகத்திலே இருக்க முடியாதென்பது இவன் எண்ணம்.

இங்ஙனமே கீழ் எகிப்து என்கிற 'டெல்டா' பிரதேசத்தில் வசித்துக்கொண்டிருந்த ஜனங்கள், தங்கள் கண்ணுக்கெட்டிய தூரம் வரை சமதரையைப்பார்த்துக்கொண்டிருந்தார்களாதலால், இவர்களுக்கு ஒருவித விசால மனப்பான்மை ஏற்பட்டது. வாழ்க்கையின் எந்தத் துறையிலும் ஒருவித சுதந்திர உணர்ச்சியோடு இருக்கத் தலைப்பட்டார்கள். தன்னுடைய சூழலுக்குத் தகுந்தாற் போல் மனிதனுடைய தன்மைகள் அமைகின்றன வென்ற உண்மைக்கு, மேல் எகிப்திலும் கீழ் எகிப்திலும் முறையே வசித்துக் கொண்டுவந்த பூர்விகக்குடிகளின் சுபாவமாறுதலே சிறந்த உதாரணமாயிருக்கிறது. தவிர, ஒரு தேசத்தின் பூகோள அமைப்பானது, அந்தத்தேசத்து மக்களின் பழக்க வழக்கங்களையும், அந்த நாட்டின் சமுதாயவளர்ச்சியையும் பாதிக்கிறதல்லவா? இஃது, எகிப்துக்கு முற்றிலும் பொருத்தமாயிருக்கிறது.

ஆசியா, ஐரோப்பா கண்டங்களினின்று எவ்வித படையெடுப்பும் வரவொட்டாமல் ஆப்பிரிக்கா கண்டத்தைப்பாதுகாக்கும் வாயில் காப்போன் மாதிரி எகிப்து அமைந்திருக்கிறது. எகிப்தின் கிழக்குப் புறமாயுள்ள சிரியா, அரேபியா முதலிய பிரதேசங்களில், பூர்விக காலந்தொட்டே அநேகவிதமான குழப்பங்களும் போராட்டங்களும் ஏற்பட்டு வந்தன. இந்தமாதிரியான சந்தர்ப்பங்களில், இந்தப் பிரதேசங்களில் வசித்த ஜனங்கள், எகிப்தின் 'டெல்டா' பிரதே

சத்தில் வந்து குடியேறலானார்கள். இவர்களை எகிப்தியர்கள் எதிர்த்தார்கள். இதே மாதிரியே, கீழ் எகிப்தின் மேற்குப் பக்கத்திலுள்ள லிபியா பிரதேசத்திலிருந்த முரட்டு ஜாதியார், அடிக்கடி 'டெல்டா' பிரதேசத்தின் மீது படை யெடுத்து வந்தார்கள்.

இந்தமாதிரியான குடியேற்றங்களும் எதிர்ப்புகளும், எகிப்திய சரித்திரத்தில் பலமுறை காணப்படுகின்றன. இவைகளினால் எகிப்திய சமுதாய வாழ்க்கையும் அடிக்கடி பாதிக்கப்பட்டு வந்திருக்கிறது. எகிப்திய சரித்திரத்தில் அடிக்கடி காணப்படும் ஏற்றத் தாழ்வுகளுக்கு இவைகளே காரணமென்பர் அறிஞர்.

மேல் எகிப்தாகிய கணவாய்ப் பிரதேசத்தில் வசித்துக் கொண்டிருந்த ஜனங்களுக்கு இந்தப்படையெடுப்பு பயமே இல்லாமலிருந்தது. இதனால் இவர்களால் ஸ்திரப் பட்டதொரு வாழ்க்கையை நடத்த முடிந்தது. ஆனாலும், 'டெல்டா' பிரதேசத்தில் ஏதேனும் போராட்டம் நிகழ்ந்தால், அதனுடைய அதிர்ச்சியின் எதிரொலி இந்த மேல் எகிப்தில் கேட்காமல் இல்லை.

ஒரு புராணத்தை, அல்லது காவியத்தை காண்டமாகவோ, சருக்கமாகவோ, படலமாகவோ பிரிப்பது போல், ஒரு தேசத்தின் சரித்திரத்தையும், ஒரு சில நூற்றாண்டுகளில் தொடர்ச்சியாக ஒரு சம்பவம் நடைபெற்றிருக்குமானால் அந்தச் சம்பவத்தை யொட்டியோ, அல்லது ஓர் எண்ணம், அல்லது லட்சியம் பரவியிருக்குமானால் அந்த எண்ணம் அல்லது லட்சியத்தின் பெயராலேயோ, அல்லது ஓர் அரச பரம்பரையானது தொடர்ந்தாற் போல் ஆட்சி புரிந்திருக்குமானால், அந்த அரச வம்சாவளியை முன்னிட்டோ பல பகுதிகளாகப் பிரிப்பர் அறிஞர். உதாரணமாக இந்திய சரித்திரத்தை, புத்தமதம் செழித்தோங்கி யிருந்த காலத்தை பௌத்த காலம் என்றும், மொகலாய மன்னர்பரம்பரை ஆண்ட காலத்தை மொகலாயர் காலம் என்றும் பல பகுதிகளாகப் பிரிக்கிறோமல்லவா? இங்ஙனமே எகிப்திய சரித்திரத்தையும் அந்தந்தக் காலத்தில் ஆண்ட அரசவம்சாவளிகளின் பெயரால் முதல் வம்சாவளி என்றும் இரண்டாவது வம்சாவளி என்றும் இப்படியே கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் 4500 வருஷங்களுக்கு முன்னிருந்து கி. மு. 320ம் வருஷம் வரை—மஹா அலெக்ஸாந்தர் காலம் வரை—முப்பது வம்சாவளிகளாகப் பிரித்திருக்கிறார்கள். இதற்குப் பின்னர் யாரார் ஆதிக்கம் செலுத்தி வந்தார்களோ அவர்களுடைய பெயரால்—உதாரணமாக அராபியர் ஆதிக்கம், மாமலூக்கர்கள் ஆதிக்கம், துருக்கியர் ஆதிக்கம் என்கிறவகையாகப்—பிரித்துச் சம்பவங்களைப் பார்க்கிறார்கள்.

இங்கே ஒரு சந்தேகம் உண்டாகலாம். இந்த அரச வம்சாவளிகளுக்கு முன்னர், எகிப்தில் மனித சஞ்சாரமே யில்லையா? அப்படியிருந்திருக்குமானால் அவர்கள் எப்படி இருந்தார்கள்? அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் என்ன? இவைகளைப் பற்றிக் கொஞ்சம் தெரிவிக்கக்கூடாதா வென்று கேட்கலாமல்லவா? வாஸ்தவம். வம்சாவளிகளாகப் பிரித்து வைத்ததெல்லாம் சரித்திராசிரியர்களுடைய கற்பனை தானே. முதல் வம்சாவளி

காலத்திற்கு முன்னர், எகிப்திலே எங்கு, மாதிரியான வாழ்க்கை நடைபெற்று வந்ததென்பதைச் சுருக்கமாகக்கூறுவோம்.

முதல் வம்சாவளி காலத்திற்கு முன்னர்—அதாவது கி. மு. 4500 வருஷங்களுக்கு முன்னர்—மேல் எகிப்தும், அதற்குத்தெற்கே யிருந்த நூபியா (Nubia) என்ற பிரதேசமும் ஒரே ஜாதியாருடைய ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. இவர்கள் அநுஷ்டித்து வந்த நாகரிகமும் ஒரே தன்மைத்தாக இருந்தது. இற்றைக்குச் சுமார் பதினாயிரம் வருஷங்களுக்கு முன்னரிருந்தே இந்த நாகரிகம் இருந்து வந்ததென்று கூறலாம். இந்த ஜாதியாருடைய சமுதாய வாழ்க்கை, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆதி மனிதனுடைய வாழ்க்கையின் முக்கிய அம்சங்களா யிருந்தன, வேட்டையாடுதல், கால் நடைகளை மேய்த்தல், விவசாயம் என்ற மூன்றுமாம். இவற்றில், வேட்டையாடுதலை பூர்விக எகிப்தியர்கள் அனைவரும் தங்களுடைய ஜீவனோபாயமாகக் கொள்ளவில்லை. எகிப்திய கணவாய்ப் பிரதேசத்திற்கு மேற்கிலும் கிழக்கிலும் முற்காலத்தில் ஏராளமான வன விலங்குகள் வசித்து வந்தன. இவைகளை வேட்டையாடிக் கொல்வது, ஒரு சில பெரிய மனிதர்களின் பொழுது போக்காக இருந்தது. தவிர, அவர்களுடைய வீரத்தின் அறிகுறியாகவும் இருந்தது. வேட்டைக்காக இவர்கள் உபயோகித்த ஆயுதம் வெறும் வில்லும் அம்புந்தான். சமுதாயத்தில் உயர்தர அந்தஸ்து வகித்தவர்கள்தான், இந்த வேட்டை யாடுவதில் காலத்தைக் கழித்தார்களே தவிர, சாதாரண ஜனங்களுக்கு விவசாயம், கால் நடைகளை மேய்த்தல் ஆகிய இரண்டுமே முக்கிய ஜீவனோபாயங்களாக இருந்தன. இவர்கள் தங்கள் ஆகாரத்திற்கு பட்சிகள், மீன்கள் முதலியவற்றைப் பிடித்து உபயோகித்து வந்தார்கள்.

எகிப்தியர்கள், பசு, ஆடு, 'ஸ்லூகி' என்ற ஒரு வகை வேட்டை நாய், கழுதை, பூனை, பன்றி முதலிய ஜந்துக்களை வீடுகளிலேயே வைத்து வளர்த்து வந்தார்கள். பசுக்கள், பால் கொடுத்தும், சில பணக்காரர்களுக்கு ஆகாரமாகியும் வந்தன. நிலத்தை உழுவதற்கும், சாமான்களை ஓரிடத்தி லிருந்து மற்றோர் இடத்திற்கு ஏற்றிச் செல்வதற்கும் எருதுகள் உபயோகிக்கப்பட்டன. கழுதைகள், நிலத்தி லிருந்து அறுவடையான கதிர்களை ஓரிடத்தில் கொண்டு வந்து சேர்ப்பதற்கும், அவைகளைக் களத்தில் பிரிப்பதற்கும் உபயோகிக்கப்பட்டன. ஆடுகளிலிருந்துஉரோமம் எடுக்கப்பட்டு கம்பளியாகநெய்து உபயோகிக்கப்பட்டது. நிலத்தில் விதை விதைத்தவுடன், அவை நிலத்தில் பதியுமாறு செய்வதற்குப் பன்றிகளை அந்த நிலத்தின் மீது ஓட்டி நன்றாக மிதிக்கச் செய்வார்கள்.

எகிப்தியர்கள் விவசாய விஷயத்தில் அதிகமான கவனஞ் செலுத்தி வந்தார்கள். அப்படிக் கவனஞ் செலுத்த வேண்டிய அவசியமும் இவர்களுக்கு இருந்தது. ஏனென்றால் நைல் நதியானது, ஒருவிதத்தில் சாதகஞ் செய்திருந்த போதிலும், மற்றொருவிதத்தில் பாதகமாகவே இருந்தது. எப்படியெனில், வருஷத்திற் கொருமுறை, இந்த நதியில்

வெள்ளப்பெருக்கு ஏற்படும். பின்னர், வடிவின் போது, கரையின் இரு பக்கங்களிலும் வண்டல் படிந்திருக்கும். விவசாயிகள், எவ்வித சிரமமும் படாமல் இந்த வண்டல்களையே, தங்கள் நிலங்களுக்கு எருவாக உபயோகித்து வந்தார்கள். இதுபெருத்த சாதகம். நைல் நதி தவிர, வேறுவிதமான பாசன வசதிகள் எகிப்தில் இல்லாமலிருந்தது. மற்றும், மழை பெய்வது மிக அபூர்வம். எனவே, விவசாயிகள், இந்த நைல் நதியிலிருந்தே வாய்க்கால்கள் வெட்டிக் கொண்டும், இவைகளில் ஏற்றங்கள் போட்டு இறைத்தும் தங்கள் நிலங்களுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டு வந்தார்கள். சாதாரணமாக நமது இந்தியக் கிராமங்களில் விவசாயிகள் உபயோகிக்கிற ஏற்றங்கள் மாதிரியே இவர்களும் உபயோகித்து வந்தார்கள்.

பார்லி, கோதுமை, சணல் முதலியவைகளே முக்கிய விளைபொருள்கள். நைல் நதியில் வெள்ளம் வடிந்தவுடன், நிலத்தை எருதுகள் பூட்டிய ஏர் கொண்டு உழுவார்கள். அல்லது சிறிது கெட்டியான பூமியாயிருந்தால், மண் வெட்டி கொண்டு நிலத்தைப் பண்படுத்துவார்கள். பின்னர், விதைகளைக் கையால் வாரித் தெளிப்பார்கள். உடனே ஆடுகளையோ பன்றிகளையோ ஓட்டி நிலத்தை மிதிக்கச் செய்வார்கள். அப்பொழுதுதான், விதைகள் நிலத்தில் நன்றாக ஊன்றிக் கொள்ளும் என்பது இவர்கள் கருத்து. பிறகு, தினந்தோறும் ஏற்றம் இறைத்துத் தண்ணீர் பாய்ச்சவேண்டும். இந்த ஏற்றத்திற்கு எகிப்திய பாஷையில் 'ஷாதுப்' என்று பெயர்.

அறுவடை செய்கிறபோது, கதிர்களை மட்டும் அறுத்துக் கொண்டு, வைக்கோலை அப்படியே நிலத்தில் விட்டு விடுவார்கள். கதிர்களை, களம் அடிக்கிற இடத்திற்குக் கழுதைகள் சுமந்து கொண்டுவரும். கழுதைகளையோ, எருதுகளையோ பிணையல் பிணையலாகப் பிணைத்து, கதிர்களின் மீது மிதிக்கச் செய்வார்கள். பிறகு, முறங் கொண்டு தூற்றி, தானியத்தைத் தனியாகப் பிரிப்பார்கள். பின்னர், இந்தத் தானியங்களைக் கோணி மூட்டைகளில் கட்டி வீடுகளுக்கு எடுத்துச் செல்வார்கள். ஒவ்வொரு வீட்டிலும் தானியங்கள் கொட்டி வைப்பதற்கென்று களஞ்சியங்கள் இருக்கும். இவை, பச்சைச் செங்கல்லினால் வட்ட வடிவமாகக் கட்டப் பட்டு மேலே மூடி போடப் பட்டிருக்கும். கோணிகளில் கொண்டு வரப்படுகிற தானியங்களை உறைகளில் (களஞ்சியங்களில்) மேல்வழியாகக் கொட்டுவார்கள். வேண்டும் போது எடுத்துக் கொள்வதற்குச் சௌகரியமாக, களஞ்சியத்தின் கீழ்ப்பாகத்தில் துவாரம் இருக்கும்.

எகிப்தியர்கள், கோதுமை பார்லி ஆகிய இந்தத் தானியங்களைக் கொண்டு ரொட்டி தட்டித் தின்பார்கள்; அல்லது சாராயங் காய்ச்சிக் குடிப்பார்கள். இந்தத் தானியங்கள் தவிர, அநேக விதமான கறிகாய்களும் பழவினுசுகளும் பயிரிட்டு வந்தார்கள். சிறப்பாக வெங்காயம் அதிகமாகப் பயிரிடப் பட்டது. இப்பொழுது கூட, எகிப்தியர்களின் ஆகாரத்தில் முக்கிய பொருளாக உபயோகிக்கப் படுவது வெங்காயமே. தவிர, பேரீச்ச மரம், திராட்சைக் கொடி, அத்தி மரம் முதலியவைகள்

பயிரிடப் பெற்று இவற்றின் பழங்கள் ஆகாரத்தின்போது அதிகமாக உபயோகிக்கப்பட்டன. பேரீச்சம் பழத்திலிருந்து ஒரு வகைச்சாராயம் காய்ச்சப்பட்டு உபயோகிக்கப் பட்டு வந்தது.

பூர்விக எகிப்தியன் குள்ளமாகவும், கருத்த மயிர் அடர்த்தியாக வுள்ளவனாகவும், சிறிது ஒல்லியாகவும் இருந்தான். ஆதி காலத்தில் இவன் தாடி மீசை வளர்த்துக் கொண்டிருந்தான். ஆனால், முதல் வம்சாவளி காலத்திலிருந்து, க்ஷவரம் செய்து கொள்வது மிகவும் நாகரிகமாகக் கருதப்பட்டது. அரசர்களும் தேவர்களுந்தான் தாடி மீசை வைத்துக் கொள்ளுதற்குத் தகுதியுடையவர்கள் என்ற எண்ணம் பரவி விட்டது.

பூர்விக எகிப்தியனுடைய தேவைகள் மிகக் குறைவாகவே இருந்தன. இவன் மூங்கில் தழைகளினாலும் தோல் வகைகளினாலும் வேயப்பட்ட குடிசைகளில் வசித்து வந்தான். சிக்கி முக்கிக் கல்லினால் செய்யப்பட்ட ஆயுதங்களையே உபயோகித்தான். உலோகப் பொருள்களில், இவன் தாமிரமொன்றிற்கே அதிக மதிப்பளித்தான். ஸ்திரீகள், பூமியினின்று தோண்டியெடுக்கப்பட்ட சில ரத்தின வகைகளை, அவைகளின் மதிப்பைத் தெரியாமலே உபயோகித்து வந்தார்கள். தந்தத்தினால் செய்யப்பட்ட கொண்டை ஊசிகளை தலையில் அணிந்தும் ஒரு வகைப் பச்சிலைக் கொழுந்தை அரைத்துக் கண்களில் மையாகப் பூசியும் தங்களை அழகுபடுத்திக் கொண்டார்கள். இறந்து போனவர்கள், ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் குழி தோண்டிப் புதைக்கப் பட்டார்கள். சவக் குழிகளில், இறந்து போனவர்களுக்கு எவை எவை பிரியமான வஸ்துக்களோ அவற்றைச் சேர்த்துப் புதைத்து விடுவார்கள்.

பூர்விக எகிப்தியன், இரண்டுவித மான கைத்தொழில்களில் திறமை பெற்றிருந்தான். ஒன்று மட்பாண்டத்தொழில்; இன்னொன்று மெருகிடும் தொழில். மட்பாண்டங்களைக் கையினாலேயே, சக்ரத்தின் உதவியில்லாமலேயே செய்யக்கூடிய ஆற்றல் இவனுக்கு இருந்தது. இந்த மட்பாண்டங்கள், இப்பொழுதும் பூமியின் கீழ் அகப்படுகின்றன. இவைகளைப் பார்க்கிறபோது, மட்பாண்டங்களின் உருவ அமைப்பும், மேலுள்ள மெருகின் பளபளப்பும் நம்மை உண்மையிலேயே பிரமிக்கச் செய்கின்றன. பாண்டங்களைச் செய்வதோடு பூர்விக எகிப்தியன் நிற்கவில்லை. களிமண்ணினால், பொம்மைகள் பல செய்து அவைகளுக்கு வர்ணங்கொடுத்தான். இங்ஙனம் செய்து செய்து, இந்தச்சித்திரத்தொழிலில் இவன்பெரிதும் முன்னேற்றமடைந்திருப்பதை, பூர்விகச் சின்னங்களிலிருந்து நாம் நன்றாக அறிகிறோம்.

இங்கனமே பூர்விக எகிப்தியன் நல்ல கருங்கற்களைக் குடைந்து பலவினுசான பாத்திரங்களாகச் செய்தான். சிக்கிமுக்கிக் கற்களைக்கொண்டு கூர்மையான கத்திகளும் இவைகளுக்குத் தந்தப்பிடிகளும் அமைத்தான்.

இறந்து போனவர்களுக்குச் சவக் குழிகள் கட்டுவதில்தான் பூர்விக எகிப்தியன் தன் சிற்பத் திறமையையும், தொழில் வன்மையையும் காட்டினான். சித்திரக்கலையில் இவன் காட்டிய ஆர்வமெல்லாம், இந்தச்சவக் குழிகளிலிருந்தே பிறந்தன வென்று சொல்லவேண்டும்.

சர்வ தேசப் பொதுவுடமைக் கட்சியின் வேலைத் திட்டம்

சர்வதேசப் பொதுவுடமைக் கட்சியின் வேலைத் திட்டம், 1928ம் வருஷம் கூடிய மேற்படி கட்சியின் ஆருவது காங்கிரஸில் அங்கீகரிக்கப் பட்டது. இந்தத் திட்டமானது, 1848ம் வருஷம் வெளியிடப்பெற்ற பொதுவுடமை அறிக்கை (The Communist Manifesto) யைத் தழுவியதாகவே இருக்கிறது. இந்தத் திட்டமானது ஆறு பாகங்களைக் கொண்டது. இதிலிருந்து, ஒரு பொதுவுடமைக் கட்சி அரசாங்கமானது—அதாவது ஏழை ஜனங்களுடைய சுகவாழ்விற்கு ஏற்றதாய் அமைகிற அரசாங்கமானது—என்னென்ன காரியங்களைச் செய்யும் என்பதைப் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ள விவரம் மட்டும் கீழே தரப் பட்டிருக்கிறது.

1 கைத்தொழில், போக்குவரவு முதலியன.

(அ) தனிப்பட்ட முதலாளிகளின் ஸ்தாபனங்களை (தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மின்சார பவர் ஸ்டேஷன்கள் முதலியன) பறிமுதல் செய்து அவற்றைத் தேசிய மயமாக்குதல்; அரசாங்கத் தொழில் ஸ்தாபனங்களையும், முனிசிபல் தொழில் ஸ்தாபனங்களையும் 'சோவியத்து'* களுக்கு மாற்றி விடுதல்.

(ஆ) தனிப்பட்ட முதலாளிகளின் ஸ்தாபனங்களான ரெயில்வேக்கள், கால்வாய்கள், மோட்டார், ஆகாய விமானம் முதலிய போக்குவரவு ஸ்தாபனங்கள் (வியாபாரத்திற்காகவும், பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு செல்வதற்காகவும் நடை பெறுகிற ஆகாயவிமான ஸ்தாபனங்கள் உள்பட) முதலியவற்றைப் பறிமுதல் செய்து தேசிய மயமாக்குதல்; அரசாங்கத்தினுடையவும், முனிசிபல் சபைகளினுடையவும் போக்குவரவு சாதனங்களை 'சோவியத்து'களுக்கு மாற்றி விடுதல்.

(இ) தனிப்பட்ட முதலாளிகளினுடைய சமாசார ஸ்தாபனங்களை (தந்தி, டெலிபோன், ரேடியோ முதலியவைகளை)ப் பறிமுதல் செய்து, அவற்றைத் தேசிய மயமாக்குதல்; அரசாங்கத்தினுடையவும், முனிசிபாலிடிகளினுடையவும் சமாசார ஸ்தாபனங்களை 'சோவியத்து' களுக்கு மாற்றி விடுதல்.

(ஈ) கைத்தொழில்களை, தொழிலாளர்களைக் கொண்டே நிருவாகம் செய்யுமாறு ஏற்பாடு செய்தல். கைத்தொழில் ஸ்தாபனங்களை நிருவாகஞ் செய்ய அரசாங்க ஸ்தாபனங்களை

* விவசாயிகள், தொழிலாளர்கள், சோல்ஜர்களின் பிரதிநிதிகள் முதலியோர் அடங்கிய சபைகளுக்கு சோவியத்துகள் என்று பெயர்.

ஏற்படுத்தி, அந்த நிருவாகத்தில் தொழிலாளர் சங்கங்களை அதிகமாகக் கலந்து கொள்ளுமாறு செய்தல். தொழிலாளர் கவுன்சில்களுக்கு இன்னின்ன வேலைகள் என்று வகுத்துக் கொடுத்தல்.

(உ) உழைத்துப் பிழைக்கிற பொது ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிற வழியிலேயே, தொழில்கள் நடைபெறுமாறு செய்தல். ஆளுஞ் சாதியாருடைய தேவைகளை இது காறும் பூர்த்தி செய்து வந்த தொழில் ஸ்தாபனங்களைத் திருத்தியமைத்தல். விவசாய அபிவிருத்திக்காகவும், இயந்திரத் தொழிலுக்கும் விவசாயத்திற்கும் நெருங்கிய உறவு ஏற்படுத்துவதற்காகவும், அரசாங்க விவசாயப் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காகவும், பொதுவாக, தேசியப் பொருளாதார அபிவிருத்திக்காகவும் ஏற்பட்டுள்ள எல்லாத் தொழில் ஸ்தாபனங்களையும் பலப்படுத்துதல்.

2 விவசாயம்.

(அ) நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள எல்லா நில எஸ்டேட்டுகளையும் (தனிப்பட்டவர்களுடையவும், தேவாலயங்களினுடையவும், மடங்களினுடையவும், நிலங்களும் பிற நிலங்களும் இதில் சேரும்.) பறிமுதல் செய்து தேசிய மயமாக்குதல்; அரசாங்கத்தினுடையவும் முனிசிபாலிடிகளுடையவும் எல்லா நிலச்சொத்துக்களையும் (காட்டுப் பிரதேசங்கள், உலோகங்கள் நிறைந்த பிரதேசங்கள், ஏரிகள், ஆறுகள் முதலியன) 'சோவியத்து'களுக்கு மாற்றி, பிறகு, எல்லாவற்றையுமே தேசிய மயமாக்குதல்.

(ஆ) பெரிய நில எஸ்டேட்டுகளுக்குச் சொந்தமான பொருளுற்பத்தி சாதனங்கள் அனைத்தையும்—உதாரணமாக, கட்டிடங்கள், இயந்திர வகைகள், கால் நடைகள், விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய இடந்திர வகைகள் முதலியன—பறிமுதல் செய்துவிடுதல்.

(இ) பெரிய எஸ்டேட்டுகளையும், பொருளாதார முக்கியத்துவம் பெற்ற மற்றவைகளையும் தொழிலாளர்களின் ஆதிக்கம் பெற்ற ஸ்தாபனங்களுக்கும் 'சோவியத்து'களின் விவசாயப் பண்ணைகளுக்கும் மாற்றிவிடுதல்.

(ஈ) நிலச்சுவான்தார்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களின் ஒரு பாகத்தை—சிறப்பாக எந்தெந்த நிலங்களை குடிவார பாத்தியதையில் விவசாயிகள் சாகுபடி செய்து அது காரணமாக நிலச்சுவான்தார்களின் பொருளாதார பந்தத்திற்கு உட்பட்டிருந்தார்களோ, அந்த நிலங்களை—குடியானவர்களின் உபயோகத்திற்கே மாற்றி விடுதல். அப்படி எவ்வளவு நிலத்தை மாற்றுவதென்கிற பிரச்னையானது, பொருளாதார அவசியத்தை முன்னிட்டும் தேவையை உத்தேசித்தும் தீர்க்கப்பட வேண்டும். தவிர, விவசாயிகளை, தொழிலாளர்களின் பக்கமாக இழுக்கக்கூடிய மாதிரியாகவும் இந்தப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும். எவ்வளவு நிலம் மாற்றப்பட வேண்டுமென்பது சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(உ) விவசாயிகளுக்குத் தேவை என்பதற்காகவும், முதலாளிகள்,

நிலத்தைக் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்கும் நில வியாபாரிகள் முதலியோர் கைகளுக்குச் செல்லவொட்டாமல் தடுக்கும் பொருட்டும், நிலத்தை வாங்குவதையோ விற்பதையோ தடுத்தல். இந்தச்சட்டத்தை மீறி நடக்கிறவர்களை, கடுமையான தண்டனைக்குட்படுத்துதல்.

(ஊ) அதிக வட்டி வாங்குதலைத் தடுத்தல். பந்தகப்படுத்திக் கொள்கிற எல்லாப் பற்று வரவு நிபந்தனைகளையும் ரத்து செய்தல். சுரண்டப்பட்ட குடியானவர்களின் எல்லாக் கடன்களையும் ரத்து செய்தல். விவசாயிகளிலே மிக ஏழையாயுள்ளவர்களுக்கு வரி இல்லாமற் செய்து விடுதல்.

(எ) விவசாயத்தின் உற்பத்தி சக்திகளை அதிகப்படுத்த அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் செய்தல். டும், கிராமங்களில் மின்சார அபிவிருத்தி ஏற்படச் செய்யல். உழுபடைச்சால்களையும், நல்ல எருக்களையும், நல்லவிதமான விதைகளையும் உற்பத்தி செய்து வழங்க ஏற்பாடு செய்தல். நிலங்களைச் சாகுபடிக்கு லாயக்காகச் செய்யும் பொருட்டு, கடன்கள் கொடுக்கக் கூடிய ஸ்தாபனங்களை நிறைய ஏற்படுத்தல்.

(ஏ) விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகமான பண உதவி செய்தல். கூட்டுறவு முறையில் பொருள்களை வாங்கவும் விற்பனை செய்யவும் சங்கங்களை ஸ்தாபித்துக் கொள்ளுமாறு குடியானவர்களிடையே பிரசாரஞ் செய்தல். விவசாயப் பொருள்களைப் பெருவாரியாக உற்பத்தி செய்வதால் உண்டாகும் தொழில் சாதகங்களையும் பொருளாதார சாதகங்களையும் எடுத்துக் காட்டி விவசாயிகளிடையே பிரசாரஞ் செய்தல்.

3 வர்த்தகமும்
நாணயச் செலாவணியும்

(அ) தனிப்பட்டவர்களுடைய பாங்கிகளை (தங்கச் சேமிப்பு, செக்யூரிட்டிகள், டெபாசிட்டுகள், முதலிய எல்லாவற்றையும் தொழிலாளர் அரசாங்கத்திற்கு மாற்றிவிட வேண்டும்.) தேசீய மயமாக்கி விடுதல். எல்லா அரசாங்க, முனிசிபல் பாங்கிகளையும் (தொழிலாளர்) அரசாங்கத்திற்கு மாற்றி விடுதல்.

(ஆ) பாங்கித் தொழிலை ஒருமுகப் படுத்தல். எல்லாப் பெரிய தேசீய பாங்கிகளையும், மத்திய அரசாங்க பாங்கிக்குக் கீழ்ப் பட்டவையாக அமைத்து விடுதல்.

(இ) மொத்த வியாபாரத்தையும் சில்லரை வியாபாரத்தையும் தேசீய மயமாக்கி அவற்றை சோவியத் அரசாங்க ஸ்தாபனங்களுக்கு மாற்றி விடுதல்.

(ஈ) பொருள்களை வாங்கி விநியோகிக்கும் ஸ்தாபனங்களுக்கு எல்லாச் சாதகங்களையும் செய்து கொடுத்தல்.

(உ) அந்நிய நாட்டு வியாபாரத்தை அரசாங்க சுவாதீனத்திற்கு உட்படுத்தல்.

(ஊ) வெளி நாடுகளிலும் உள்நாட்டிலும் அரசாங்கம் வாங்கியிருக்கும் கடன்களை மறுத்து விடுதல்.

4 வாழ்க்கை நிலை,
தொழிலாளர் நிலை முதலியன

(அ) தொழிலாளர்களின் வேலை நேரத்தை, தினமொன்றுக்கு ஏழு

மணி நேரமாகக் குறைத்தல். தொழிலாளர்களின் தேக சுகத்திற்குப் பாதகம் விளைவிக்கக் கூடிய மாதிரியுள்ள தொழில்களில், வேலை நேரத்தை தினம் ஆறு மணி நேரமாக ஆக்கி விடுதல். உற்பத்தி சக்தி அபிவிருத்தி யடைந்துள்ள பிரதேசங்களில், வேலை நேரத்தைக் குறைத்தும், வாரத்தில் ஐந்து நாள் வேலை செய்வதென்றும் ஏற்பாடு செய்து விடல்.

(ஆ) இரவு நேரத்தில் வேலை செய்யக் கூடாதென்று தடுத்து விடுதல். தீங்கு விளைவிக்கும் தொழில்களில் ஸ்திரீகளை அமர்த்தாதபடி பார்த்தல். குழந்தைகளை வேலைக்கமர்த்திக்கொள்ளாதபடி தடுத்தல். அதிக நேரம் வேலை செய்யாதபடி நிறுத்தல்.

(இ) பதினெட்டு வயதுக்குட்பட்டவர்கள், தினம் ஆறு மணி நேரமே அதிகப்படியாக வேலை செய்ய வேண்டுமென்று நிர்ணயித்தல். தொழில்களில் அமர்ந்திருக்கும் இளைஞர்களுக்கென்று ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி அவற்றில் அவர்களுக்குப் பொது அறிவும் அரசியல் அறிவும் புகட்டுதல்.

(ஈ) வியாதி, மூப்பு, ஆபத்து, வேலையில்லாமை முதலிய எல்லா வகைகளுக்கும் அரசாங்கச் செலவில் இன்ஷ்யூரன்ஸ் செய்விக்க ஏற்பாடு செய்தல். இன்ஷ்யூர் செய்து கொண்டவர்களாலேயே இந்த இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனங்கள் நிருவகிக்கப்பட வேண்டும்.

(உ) சுகாதார வசதிகளை அதிகமாக ஏற்படுத்திக் கொடுத்தல். இலவச வைத்திய உதவிக்கான ஸ்தாபனங்களை ஏற்படுத்தல். அதிக மதுபானத்தினால் உண்டாகும் வியாதிகள், ஸ்திரீ ரோகங்கள், க்ஷய ரோகம் முதலியவற்றைத் தொலைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தல்.

(ஊ) சட்டத்தின் முன்னிலையிலும், சமுதாய வாழ்க்கையிலும் ஆண்களும் பெண்களும் சமமானவர்களே. விவாகச் சட்டத்தையும், குடும்ப சம்பந்தமான சட்டங்களையும் அடியோடு சீர்திருத்த வேண்டும். பெண்கள், தாய்மார்களாவதென்பது, சமுதாயக் கடமைகளில் ஒன்றென மதிக்கப்பட வேண்டும். தாய்மார்களையும், சிசுக்களையும் போஷணை செய்தல். குழந்தைகளைப் பாதுகாத்து வளர்ப்பதற்கென்று குழந்தை விடுதிகள், கிண்டர் கார்டன் பள்ளிக்கூடங்கள் முதலியவற்றை ஸ்தாபித்தல். வீடுகளில் பெண்கள் செய்யக் கூடிய வேலைகளைக் குறைப்பதற்கு அநுகூலமாக, பொதுச் சமையல்கள், துணி வெளுக்கும் பொது ஸ்தாபனங்கள் முதலியவற்றை ஏற்படுத்துதல். பெண்கள் எப்பொழுதும் புருஷர்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்ற எண்ணத்தோடு போராடி அதனைத் தொலைத்தல்.

5 வீட்டு வசதிகள்

(அ) பெரிய பெரிய வீட்டுச் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல்.

(ஆ) அங்ஙனம் பறிமுதல் செய்யப்பெற்ற வீடுகளை அந்தந்த ஸ்தல 'சோவியத்து'களின் நிருவாகத்தின் கீழ் விடுதல்.

(இ) பணக்காரர்கள் வசித்து வந்த பிரதேசங்களில் தொழிலாளர்களைக் குடியிருக்கச் செய்தல்.

(ஈ) அரண்மனைகள், தனிப்பட்ட வர்களுடைய பெரிய மாளிகைகள், பொதுக் கட்டிடங்கள் முதலிய வற்றை, தொழிலாளர் ஸ்தாபனங்களி டம் விட்டு விடுதல்.

(உ) அதிகமான வீடுகள் கட்ட ஏற்பாடு செய்தல்.

6 வெளி நாட்டுப் பிரச்னைகள்

(அ) எந்தத் தேசமும், அந்தத் தேசத்தில் எந்த ஜாதியார் வசித்த போதிலும், சுயநிர்ணய உரிமைக்கு அருகதையுள்ளது என்பதை அங்கீக ரித்தல். பிரிந்து வாழும் உரிமை யும், இந்தச்சுய நிர்ணய உரிமையில் அடங்கியதாகும்.

(ஆ) முதலாளித்துவத்தினின்று விடுதலையடைந்த எல்லா நாடுகளி னுடைய ராணுவ சக்திகளும் பொரு ளாதார சக்திகளும் ஏகாதிபத்தியத் தோடு போராடும் பொருட்டு தன்னிச் சையாக ஒரு முகப்பட அதன் விளை வாக அபேதவாத முறையில் பொரு ளாதார சமுதாயத்தை அமைத்தல்.

(இ) ஒரு தேசத்திற்கோ, ஜா திக்கோ எந்தவிதமான கட்டுப்பாடும் விதிக்கப்படுவதை எதிர்த்துப் போரா டுதல். எல்லா நாட்டினருக்கும் எல்லா ஜாதியினருக்கும் சம உரிமை உண்டு.

(ஈ) முதலாளித் துவத்தினின்று விடுதலை பெற்ற நாடுகளின் தேசியக் கலை ஞானங்களை ஆதரித்து, அவைக ளுக்குப் பாதுகாப் பளிப்பதாக சோ வியத் அரசாங்கம் உறுதி கூறுகிறது. அந்தக்கலை ஞானங்களின் அபிவிருத் திக்காகவும் பாடுபடும்.

(உ) ஏற்கனவே ஒடுக்கப் பட் டிருந்த பிரதேசங்கள் அல்லது டொ மினியன்கள், அல்லது குடியேற்ற நாடுகள் இவைகளின் பொருளாதார, அரசியல், கலைஞான அபிவிருத்திக்கு எல்லா உதவிகளும் செய்யப்படும். இந்த நாடுகள் அபேதவாத வழிக்கு வரவேண்டுமென்பதே நோக்கம். அப்பொழுதுதான் தேசிய சமத்து வத்திற்கு அடிகோலப்படும்.

(ஊ) முதலாளித்துவத்தி னின்று பிறந்த குறுகிய மனப்பான்மை, தேசிய வெறுப்பு, ஜாதித் துவேஷம் முதலியவைகளை எதிர்த்துப் போரா டல்.

7 லட்சிய சாதனங்கள்

(அ) அச்சுத்தொழில் ஸ்தாபனங் களைத் தேசியமயமாக்குதல்.

(ஆ) பத்திரிகைகள், புத்தகப்பிர சுரங்கள் முதலியவற்றை அரசாங்க சுவாதீனத்திற் குட் படுத் திக் கொள்ளுதல்.

(இ) சினிமா தொழில், நாடகக் கொட்டகைகள் முதலிய வற்றைத் தேசிய மயமாக்குதல்.

(ஈ) அறிஞர்கள் இயற்றும் நூல் களினால் உண்டாகும் தேசியசாதனங் களை, தொழிலாளிகளின் அரசியல் அறிவு அபிவிருத்திக்கும், பொது அறி வுக்கும் உபயோகப்படுமாறு செய் தல்.

திருவிளையாடலின் ரகசியம்

—எஸ். கே. நாராயண ஐயர்
B. A., B. L.,

சிறுவர் கதைகளில் அநேகமாய் ஔவை யிராமலிராது. அதே போல் புராணக் கதைகளிலும் பெரும் பாலும் நாரதர் வந்தே தீருவார். உண்மை விஷயங்களையும் தெய்வ நிலையையும் விளக்க வென ஏற்பட்ட கண்ணன் திருவிளையாடல்களிலும் நாரதர் அடிக்கடி வருவார். இப்போது வெள்ளித் திரையில் காட்டப்பெறும் அநேக புராணக்கதைகளில் நாரதர் பெரும் பங்கு எடுத்துக் கொள்வது யாவருமறிந்ததே. கிருஷ்ண லீலைப் படங்களிலும் நாரதர் பங்கெடுத்துக் கொள்வது கண்கூடு.

சிறுவர் கதைகளில் ஔவையைப் புகுத்துவதன் நோக்கம் வயதேயன்றி அனுபவமும் அறிவும் முதிர்ந்துள்ள ஒருவர் வாயிலாக விஷயங்கள் கேட்பது நேரிது என்பதனாலேயே. மேனாட்டிலும் இத்தகைய கருத்து இல்லாமலில்லை. உதாரணமாகப் பெரும் நாவலாசிரியராகிய சர் வால்டர் ஸ்காட் என்பவர் 'தாதா கதைகள்' என்று சிறுவர்க்கு அறிவு விளங்கவும் ஞானம் வளரவும் கதைகள் தொகுத்துக் கூறியிருக்கின்றனர். புராணக் கதைகளில் நாரதர் வயதும், அனுபவமும் அறிவும் மிகுந்தமைக்குப் பெரும்பாலும் கூறப்பெறுவதில்லை. பிரமனுடைய புதல்வன் என்னும் முறையில் வயது முதிர்ந்திருக்கவும் ஞானமடைந்திருக்கவும் சந்தேகமில்லை. ஆனால் 'வைத்தியன் பிள்ளை நோயாளி; வாத்தியார் பிள்ளை கோமாளி' என்னும் உலக வழக்குக்கியங்க அறிவும் ஞானமுமுடைய பிரமனுடைய புத்திரன் அவைகளில்லாதிருக்கவும் கூடும். இந்நிலையும் நிகழாமலில்லை. சிற்சில சந்தர்ப்பங்களில் நாரதர் கோமாளியாய் ஆடுவதும் பெரிய ஏமாற்றமடைவதும் நாம் காணலாம்.

பொதுவாக உற்று நோக்கும் போது நாரதர் எப்போதும் ஜீவன் மனதைக் காட்டும். நாரதர் கலகப் பிரியன் என்று உலகோர் கூறுவர். அதாவது ஜீவன் மனது சதா எதனையோ நினைத்துக் கொண்டேயிருக்கும். சாதாரணமாய் மனிதன் எதையும் செய்யாமல் வாளாவிருக்கலாம். ஆனால் மனத்தால் நினைப்பதை மட்டும் நிறுத்தவியலாது. மனித தத்துவத்தில் மனது எப்படியோ அப்படியே தெய்வ நிலையிலும் நாரதர் உண்டு. நாரதரில்லாத தெய்வ சரித்திரமோ புராணக் கதைகளோ கிடைப்பது துர்லபம்.

கடவுளின் கல்யாண குணங்களையும் அவர் நிலையையும் விளக்க நினைத்த பெரியார், யாதொரு குணம் அல்லது நிலைமை குறித்த சந்தேகத்தையோ

நினைவையோ நாரதருக்கு முதலில் தோற்றுவிப்பர். அவர் அவ்வெண்ணத்தைப் பரீக்ஷை செய்து பரிசீலனை செய்யு முகத்தான் உலகத்தினருக்கு உண்மையைப் போதிப்பர். உதாரணமாக ஈசனெங்குமுளன்; அவனில்லாத இடமில்லை யென்பதனை விளக்குவதற்காகக் கண்ணன் லீலைகளில் ஒரு சரித்திரமுண்டு.

கண்ணனுக்கு எண்ணிறந்த மனைவியருண்டென்றும் முக்கியமாய் அஷ்டபாரியர்கள் குறிப்பிடத் தக்கவரென்றும் சரித்திரம் கூறும். இதனிலும் ஓர் உண்மையுள்ளது. அதனைப் பின்னர் ஆராய்வோம். அத்தகைய மனைவியர்களில் ருக்மணியே முதன்மையானவளென்றும் அவள்பால் கண்ணன் அத்தியந்த பிரீதி காட்டுவதாகவும் தனக்கு அத்தகைய விஸ்வாசம் காட்டாமையால் தானும் அதனையடையப் பொறுமைப் படுவதோடு பலவிதத்திலும் சத்தியபாமாமுயன்று வந்தனள் என்பதும் புராணக்கதை. அவ்விதம் கிருஷ்ணனிடத்தில் சிறிது அவநம்பிக்கையுள்ள சத்தியபாமாவிடம் நாரதர் ஒருநாள்கலகம் செய்யப்புறப்பட்டார். இத்தகைய சௌகர்யம், அவருக்குக் கிருஷ்ணன் ருக்மணியோடு அவள்இல்லத்தில் இருந்தபோது பார்த்ததால் இயைந்தது. ஏற்கனவே அசூயைகொண்டுள்ள சத்தியபாமாவுக்குக் கிருஷ்ணன் ருக்மணியோடுமிருக்கும் விஷயத்தைத் தெரிவித்தால் வெறுப்பு அதிகப்படுமென்பதே நோக்கம். அதனால் நாரதர் அதிவிரைவாக சத்தியபாமாவின் அந்தப்புரம் சென்று கண்ணன் கரவுடைமையைக்கூற முற்போந்தனர். அவர் எதிர் பார்த்ததற்கு மாறாகத் தாம் உள் நுழைந்ததும் கிருஷ்ணனும் சத்தியபாமாவும் இவரை எதிர்கொண்டழைத்து உபசரித்தனுப்பினர் என்பது புராணக்கதை.

தான் சங்கல்பித்த காரியம் சத்தியபாமாவிடம் பலிக்காமையால் ஒரு வேளை கண்ணன் தன்னிலும் துரிதமாய்ப் பின்வழியாய் ருக்மணி வீட்டினின்றும் சத்தியபாமை வீட்டிற்கு வந்திருக்கக் கூடுமாதலாலும், அவர் கோபிகள்வீட்டிற்கு அவ்விதம் செல்வது இயலாதாலும், கண்ணன் தம் தம் மட்டு அதிகமும் அன்புடையவ யிருக்கின்றனென்று பெருமைப் படுத்திக்கொள்ளும் கோபியர் மனத்திலேனும் குறையுண்டாக்கலாமென்றும் சடுதியில் நடந்து சிறிது தூரத்திலிருந்த ஒரு கோபியின் வீட்டில் நுழைந்தார். அவ்விதம் வேர்க்க வியர்க்க ஓடிய அவர் அங்கு கண்ட காக்ஷி யென்ன? அவர் நிலை யென்ன? அக்கோபியோடும் கிருஷ்ணன் கேலி செய்து கொண்டு உல்லாச மாயிருந்தனன். முழுதும் ஏமாற்ற மடைந்த நாரதர் கோபியும் கிருஷ்ணனும் செய்த மரியாதையேற்று வெளிப்போந்தனர்.

சபல சித்தமுள்ள நாரதர் ஏனைய கோபிகள் வீட்டிலும் கண்ணன் செல்ல சாத்தியமில்லை யென்று நினைத்து அடுத்துள்ள கோபிகள் வீடு தோறும் நுழைந்து பார்த்தார். ஒவ்வோர் கோபியின்வீட்டிலும் கண்ணன் அவரவர் மனதிற்கிசைந்த முறையில் பெரிதும் சரசசல்லாபம் செய்திருக்கக்கண்டு மனமுடைந்து வீதிவழியே சென்றார். தெருவழியே சென்று கொண்டிருந்த நாரதரைக்கண்ணனும் தொடர்ந்து வந்துசேர்ந்து இருவரும் நடந்து சென்றனர். அத்தருணம் நாரதர் தமக்குமுன்கண்ணன் களைத்து

தாழ்மையின் தகவுடைமை

—வ. மு. இரத்தினேசுவர ஐயர்

இன்பமும் துன்பமும் உடலெடுத்து வாழும் உயிர்களுக்குஉளதாம். இவ்விரண்டும் ஒரே காலத்தில் நிகழமாட்டா. இன்பமான வாழ்வையே மக்கள் மிகவும் விரும்புவர். உண்மையறிவு உள்ளவர்களே பெரியவராவர். உலகில் உள்ள ஏழைகளை வாழ்விக்க வந்த வடநாட்டுப் பெரியார் காந்தியடிகள், தள்ளாத வயதில் செல்லாத இடம் எல்லாம் செல்வது துன்பத்தை மனிதர்கள் அடைதல் கூடாதென்ற ஒரு பெருங் குணத்தினாலல்

வழிநடந்துவரக் கண்டு அவரோடும் அளவளாவி நின்றனர். தன்பக்கல் ஒருகண்ணனும் தன்முன் ஒருகண்ணனுமிருக்கக்கண்டு பிரமையடைந்ததன்றி ஈசன் எங்குமுளன் என்பதறிந்து அவன் சில இடங்களிலில்லையென்று காட்டி மனக்கிலேச மடைவிக்க முயன்றதன் எண்ணத்தை நினைந்து வெள்கினர்.

பாரதப்போர் வாராமல் காக்க வழியுண்டோ வென்றுகேட்ட கண்ணனுக்கு சகாதேவன், கன்னனுக்கு ராஜ்யம்தந்து பார்த்தனைக் கொன்று பாஞ்சாலியின் சிகையை நீக்கி அவள் காலில் விலங்கிட்டு உன்னையும் நான் கட்டினேனானால் பாரதப்போர் நிகழாதென்றான். கிருஷ்ணன், முன்குறித்தவைகள் முடியுமென்றாலும் என்னை நீ கட்டுவதெங்ஙனம்? அதியலாததன்றோ வென, சகாதேவன், கண்ணனை நோக்கி 'உன்னை உனக்கே தெரியாது; ஆனால் நீ உன் உண்மைஉருவத்தைக்காட்டினால் நான் தளைந்திடுவே'னென்று கூறினான். மாயவனும் அன்பன் மனம் அறிவான். தன் தூயவடிவம் பதினாயிரம்கொண்டான். தூயவனும் தன்கருத்தினால் கண்ணனைப் பிணித்தான்.

அதேபோல் பல வடிவங்களோடு எண்ணிறந்த கோபியரோடும் பாரியரோடும் தன்னோடும் தனக்கெதிரும் தோன்றிய கிருஷ்ணனைக்கண்டு உள்ளம் கசிந்து ஈசன் எங்குமுளன் எனவறிந்து தன்னறியாமையால் கிலேசமுண்டாக்க முயன்றமை குறித்துநாரதர் வெட்கிச்சென்றனர் என்பர். இப்படியே பிரகலாதனும் இரணிய கசிபுக்கு ஈசன் நிலையை அறிவுறுத்துவன். அங்கே முன்னின்ற தூணிலன்றிகனகன் சொல்லிய சொல்லினு முளன் ஈசன் என்றார். உருவகத்தினையன்றி அருவகத்திலும் ஈசன் 'வியாபித்துள்ளானென்பதை வற்புறுத்த வந்த விஷயம் அதுவாகும்.

லவா? ஆ! கருணையின் வடிவைக் கண்டால் கல்மனமும் உருகுதலை வெட்ட வெளியாகப் பார்க்கிறோம் அல்லவா? இந்நிலையில் மதச் சண்டை மானத்தை யழிக்கின்றது. கருணை, கடலுள் மூழ்கி விட்டது. அன்பு அருகியது. வஞ்சகம் தலையாட்டம் போடுகின்றது. தன்னலம் தாண்டவம் செய்கிறது. ஐயன்மீர்! மறந்து விட்டேன். தலை எழுத்துப் படி நடக்கும். நானும் தலை எழுத்தை விவரிக்கிறேன்.

கல்வி, ஒழுக்கம், அன்பு, பிறர்க்குதவி முதலியன மக்களுக்குப் பெருமை தருவனவாம். கல்வி பல திறப்பட்டாலும் மெய்ப் பொருள் கண்டு அறிஞராதல் நலமாகும். ஒழுக்கத்தினும் சிறந்தது உலகில் எதுவுமில்லை. நன்னடைதான் உயர்வு காட்டும். பிறருக்கு உதவிபுரியாது வாழ்தல் வாழ்க்கையின் பாற்பட்டதன்று. 'எட்டி பழுத்தென்ன ஈயாதான் வாழ்ந்தென்ன'? இது ஒரு பழமொழி.

தாழ்மையான பேரிரத்தினம் இருந்தால் அம்மணிதனின் ஒளி உலகெலாம் வீசும். இத்தகைய பெரியார் மேனாடுகளிற் பலருளர். நம் பாரத நாட்டுஞ் சிலருளர். முன்னாளினும் செந்நெறிச் செல்வர் பலரிருந்தனர். இந்நாளினும் பணிவுடைய திருவுடையார் அனேகருளர்.

ஸ்ரீ ராம பிரானுடைய தாழ்மைக் குணம் எப்பொழுது விளங்குகின்றது? வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்தது போல இராச்சிய பட்டாபிஷேகத்தின் போது, கைகேயி வரத்தால், நாடாட்சி நீங்கிக் காடாட்சி கிடைக்கும் போது விளங்குகின்றது.

பெரியார் சிறியார் என்ற வேற்றுமை இக்காலம் போய்விட்டது. பண்டைக்காலம், தந்தை, தாயார், குரு முதலியோரை மிகவும் மரியாதையாக நடத்திவரும் ஒரு முறை மக்களிடம் நிகழ்ந்தது. இப்போது நாஸ்திகம் என்று ஒரு புல்லுருவி ஒழுக்க மாகிய விருக்ஷமீது பட்டுக் கெட்டொழியத் தோன்றியதால் தாழ்மையும் தாழா வாயிற்று. எப்படியானாலும் உண்மைக்குக் கண்ணியமுண்டு.

கைகேயியை ஸ்ரீராமபிரான் கண்டு, பூமியில் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று, பவளவாய் ஒரு கையாற் பொத்தி, மற்றொருகையில் வஸ்திரத்தை ஒதுக்கிக் கொண்டு வளைந்து, தாய்ப்பசுவைக் கண்ட அதன் கன்றைப் போலப் பரிவுடன் நின்றான்.

வந்தவள் தன்னைச் சென்னி மண்ணுற
வணங்கி வாசச்
சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையிற்
புதைத்து மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை மடக்குறத்
துவண்டு நின்றான்
அந்திவந் தடைந்த தாயைக் கண்ட ஆன்
கன்றின் அன்னான்

அப்போது, கைகேயி, தசரத சக்கிரவர்த்தி உன்னைப் பதினான்கு வருடங்கள் காட்டில் வசிக்க உத்திரவு செய்ததாகத் தெரிவிக்கச் சொன்னார்; அதை நானே சொல்ல வேண்டியதாயிற்று என்றாள். அச்சமயத்தில் இராம பிரானுடைய முகம் அன்று மலர்ந்த செந்தாமரைப் பூவைப் போலப்பிரகாச மடைந்தது. அரசன் கட்டளை அல்லாது போனாலென்னை? உமது கட்டளையை யான் மறுப்பவனா? தம்பியடைந்த செல்வம் அடியேன் பெற்ற பேறுக்குச் சரியல்லவா? எனப் பல கூறிக் காடேக விடைதாரும் என்பது

பணிவையும் அன்பையும் அள்ளிச் சொரியும் இன்மொழிகள் என்பதை அன்பர்கள் கவனிப்பார்களாக.

பின்னும் ஸ்ரீ ராமபிரான் தனது தாயாகிய கௌசலாதேவியிடம் விடைபெறுங்கால், குற்றமற்ற குணக்குன்றனான் தம்பி, முடிசூட்டிக்கொள்ளப் போகின்றான் என்று வஞ்சனை அற்ற வார்த்தையை வழங்கினார். இதனால் வஞ்சமற்ற உயர் குணம் இராமபிரானிடம் வந்து தங்கியமை விளங்கும்.

பெரியோர் கட்டளைக்குப் பணிவது முக்கிய கடமை என்பதைச் சிலர் அறிகின்றிலர். தம்மிடமில்லாத பெருமையை விழைந்து தாமே இறுமாப்படைவது எவ்வளவு புத்தியீனம். இளமையில் கல்வி கேள்விகளில் மிக்கிராதவர் பணிவுடையராதல் எங்ஙனம்? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? ஒருகாலும் வளையாது! இராமபிரான் உத்தம இராஜ லட்சணங்களோடும் சகலகுண சம்பந்நராக விருந்தமையால்,

'மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன்
விடையுங் கொண்டேன்'

என்று இன்புறப் புகன்றமை போதரும். பொய்யுரைபுகலுவோர் உண்மையின் நிறமுமறியார்.

பணியுமா மென்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து,

என்ற பொய்யில் புலவர் திருவாக்கை நவீன உலகம் கடைப்பிடித்தல் மிக்க அவசியமாகும்.

தசரதர் அரசராயிருந்து கைகேயிக்கு முன் கொடுத்த வரத்தை மறுக்க முடியாதும் புத்திர வாத்ஸல்யத்தைவிட முடியாதும் தத்தளிக்கும் நிலையில் 'பெண்ணே! வண்மைக் கேகயன் மானே! பெறுவாயேல் மண்ணே கொள், நீ! மற்றைய தொன்றும் மற என்றான்' என்று கூறியதாக வரும்பகுதி பலவித பொருள் தந்து நிற்கின்றது. சமயம் நோக்கித் தாழ்மை தலை காட்டியதைத் தெரிக்கின்றது.

தெருளுடையுலகந் தாங்கினனும் மன்னன் நீதி அருளுடையாக்கந் தரின் அனைவரும் உய்வர். தசரதர் தெருளுடை மனத்தராயினார் என்று கம்பர் கூறுவர்.

'தெருளுடை மனத்து மன்னன் ஏவலிற்றிறம்ப அஞ்சி, இருளுடை உலகந்தாங்கும் இன்னலுக்கு இயைந்து நின்றவன்' என்று பெரியார் சொற் கேட்டலும், அவர் தம்பணி ஆற்றலும், பிறவும் இராமாவதாரப் பூஞ்சோலையில் உதிர்ந்த சில மலர்களாகக் காணலாம்.

இந்தியாவில் இறக்குமதியாகும் இயந்திர சாமான்கள்

வருஷம்		மதிப்பு
1933-34	....	12,76,93,000
1934-35	....	12,63,20,000
1935-36	....	13,87,10,080
1936-37	....	14,30,97,459
1937-38	....	17,34,29,480

ஐரோப்பாவில் ஸ்பெயினுடைய ஸ்தானம் என்ன?

—மான்யுவல் அஜானு

ஸ்பெயின் குடியரசின் அந்திய காலம்வரை-அதாவது ஸ்பெயின் முழுவதும் தளபதி பிராங்கோவின் ஆதிக்கத்திற் குட்படுகிறவரை அதன் தலைவனயிருந்தவன் அஜானு என்பவன். ஸ்பெயின் வீழ்ச்சிக்குப் பிறகு இவன் வாய் திறக்கவே இல்லை. இந்தக் கட்டுரையில்தான் முதன் முதலாகத் தன் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கிருன்.

சுமார் மூன்று வருஷங்களுக்கு முன்னர், ஒரு ஸ்பானிஷ் ராஜதந்திரி, என்னேடு பேசிக் கொண்டிருந்த போது, 'நம்முடைய அந்நிய நாட்டுக் கொள்கையைப்பற்றி அதிகப் பேச்சா யிருக்கிறதே. நமக்கென்று ஓர் அந்நிய நாட்டுக் கொள்கை வேண்டாமா? அது தேவைதானு' என்று குறிப்பிட்டார். இப்படி நாங்கள் பேசிக் கொண்டிருந்து, கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தோம். அதாவது, ஸ்பெயினனது, ஐரோப்பிய சச்சரவுகளில் கலந்து கொள்ளாமல், தனது உள்நாட்டுச் சீர்திருத்தத்தையே முக்கியமாகக் கவனிக்க வேண்டும் என்பதேயாம். இந்த அபிப்பிராயத்தைத் தான் ஸ்பெயினிலுள்ள பெரும் பாலோர் கொண்டிருக்கின்றனர்.

ஸ்பானியர், தன் மதிப்புணர்ச்சியுள்ளவர்கள். இந்த உணர்ச்சிக்கு இப்பொழுது ஊறு ஏற்பட்டிருப்பதாக இவர்கள் உணர்கிருர்கள். மேலே சொன்ன அபிப்பிராயத்திற்கு அடிப்படையாயுள்ளது இந்த உணர்ச்சிதான். ஸ்பெயினுடைய சரித்திரம் புராதனப் பெருமை நிரம்பியது. இதிலே ஒவ்வொரு ஸ்பானியனும் பெருமை யடைகிருன். ஆனல் தற்போதைய தன் பலஹீனத்தையும் உணர்கிருன். இதனுலேயே, ஐரோப்பிய அரசியல் விவகாரங்களில் பின்பாட்டுபாடுகிற அந்தஸ்தோடு திருப்தியடைகிருன். ஒன்று, வாழ்ந்தால் நன்ருக வாழ வேண்டும்; இல்லா விட்டால் அடியோடு வீழ்ந்து கிடக்க வேண்டும். இந்த மாதிரிதான் சாதாரண அந்தஸ்திலுள்ள ஒவ்வொரு ஸ்பானிஷ்காரனும் நினைக்கிருன். தவிர, ஐரோப்பிய வல்லரசுகள், ஸ்பெயின் விஷயத்தில் அநீதமாக நடந்துகொண்டிருக்கின்றன என்பதையும் இவன் நன்ருக உணர்கிருன். இப்படி இவன் நினைப்பது சரியாகவும் தவருகவும் இருக்கலாம். ஆனல் இந்த எண்ணம் இவன் மனத்தில் நன்ருகப்பதியுமாறு

இவனுடைய கல்வி முறை அமைக்கப் பட்டு வந்திருக்கிறது.

இந்த மாதிரி, ஒதுங்கி வாழ வேண்டுமென்ற எண்ணம், ஸ்பானியனுக்கு 1898ம் வருஷத்தில் ஏற்பட்ட குழப்பங்களின் போதே உண்டாகி விட்டது. அப்பொழுது, ஸ்பெயினின் குடியேற்ற நாடுகளை அமெரிக்கா ஆக்ரமித்துக் கொண்ட வண்ணமாயிருந்தது. அந்தக் காலத்திலேயே கிரேட் பிரிட்டனும் பிரான்ஸும் தன்னைக் கைவிட்டு விட்டதாக ஸ்பெயின் கருதியது. உண்மை யென்னவென்றால், அமெரிக்காவின் ராணுவ பலத்தில், ஸ்பெயினுக்கு நம்பிக்கையில்லாமலிருந்தது. இதனாலேயே, தன்னைத்தான் ஏமாற்றிக் கொண்டது. தவிர, ஐரோப்பிய அரசியலில் தைரியமாகக் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்ததன் பயனே இது. ஸ்பெயினுக்கு அதிகமான குடியேற்ற நாடுகள் இருந்தும், அதற்குத் தகுந்த கப்பற் படையை அது வைத்துக் கொள்ளவில்லை. மற்றும், தன்னுடைய பாதுகாப்புக்கு அவசியமான சில சிநேக ஒப்பந்தங்களையும் அது மற்ற நாடுகளுடன் செய்து கொள்ளத் தவறி விட்டது.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் ஏற்பட்ட நெப்போலிய யுத்தங்களுக்குப் பிறகு, ஸ்பெயின், ஐரோப்பிய பிரச்னைகளில் கலந்து கொள்ளவில்லை. இந்தக் காலத்தில், பிரான்ஸ், ஸ்பெயின் மீது படையெடுத்தது. இதன் விளைவாகச் சுமார் அரை நூற்றாண்டுகள் வரை ஸ்பெயினில் வறுமையும் குழப்பமும் நிரம்பியிருந்தன. இதனால் பிரான்ஸ் மீது ஒருவிதத் துவேஷம் ஏற்பட்டிருந்தது. நாளாவட்டத்தில்தான் இது மறைந்தது.

இங்கிலாந்தை, ஒரு விரோதியாகவே ஸ்பெயின் கருதி வந்திருக்கிறது. இடை யிடையே, இரண்டு நாடுகளுக்கும் சிநேக ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருந்த போதிலும், பிரிட்டனிடம் ஒருவித அவநம்பிக்கை ஏற்பட்டிருந்ததென்றே கூற வேண்டும்.

இருபதாவது நூற்றாண்டுத்தொடக்கத்தில், ஸ்பெயின் மிகக் கேவலமான ஸ்திதியில் இருந்தது. ஸ்பெயினுடைய தனி வாழ்வு, இனி மறைந்து போவது நிச்சயம் என்றே ஸ்பானிஷ் அறிஞர்கள் பலரும் நம்பினார்கள். ஜோயகின் காஸ்டா என்ற அறிஞன் தோன்றி, அந்நிய நாடுகளின் விவகாரங்களில் நாம் தலையிட வேண்டா மென்றும், ஜனங்களுக்கு உணவும் அறிவும் வழங்குவதிலேயே ஸ்பெயின் தன் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டுமென்றும் இவன் கூறிக்கொண்டு வந்தான். இதொரு புதிய தத்துவமல்ல. ஆனால் ஜனங்களின் அப்பொழுதைய எண்ணத்தை வாய்விட்டுச் சொன்னான். அவ்வளவு தான். மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிட வேண்டாமென்றும் மத்தியஸ்தமாயிருந்துவிட வேண்டுமென்றும் சொன்னது என்னவாயிற்றென்றால், தன்னைத்தான் பாதுகாத்துக் கொள்ளும் சக்தியையும் ஸ்பெயின் இழந்து விட்டது. மத்தியஸ்தமாயிருப்பதையும் மற்ற நாடுகள் மதிக்க வேண்டாமா? அப்படி மதிப்பதற்கு தற்காப்பு பலம் தேவை யில்லையா?

பிரான்ஸும் பிரிட்டனும் ஒற்றுமையாயிருந்ததால்தான் ஸ்பெயின் நடு நிலைமை வகிக்க முடிந்தது. 'இந்த

இரண்டு நாடுகளும் ஏதோ ஒரு காரணமாகச் சண்டை போட்டுக் கொண்டிருக்குமானால், ஸ்பெயின் ஏதேனும் ஒரு நாட்டுடன் சம்பந்தப் பட்டுக் கொண்டுதான் இருக்க வேண்டும்.

ஸ்பெயின் நடு நிலைமை வகித்தாலும் வகிக்கா விட்டாலும், அது மொராக்கோ விஷயத்தில் சிரத்தை கொள்ளாமலிருக்க முடியாது. அது சம்பந்தமாக ஏதேனும் சச்சரவுகள் ஏற்பட்டிருக்குமானாலும் அதற்காக ஸ்பெயின் ஒரு கட்சியைச் சேரத் தான் வேண்டியிருக்கும். ஸ்பெயினுக்கும் மொராக்கோவுக்கும் நீண்டகாலச் சரித்திரத் தொடர்பு உண்டு. தவிர, மொராக்கோவினால், ஸ்பெயினுக்குச் சில பொருளாதார சௌகரியங்கள் உண்டு. மற்றும் ஸ்பெயினுடைய தற்காப்புக்கு மொராக்கோ அவசியமாயிருக்கிறது. இத்தியாதி காரணங்களினாலேயே, மொராக்கோ ஸ்பெயினுக்கு மிகவும் அவசியமாயிருக்கிறது. ஆனால்மொராக்கோவில் தனக்குச்சேர வேண்டிய பிரதேசம் எவ்வளவென்று எதிர் பார்த்ததோ அதை விடக் குறைவாகவே அதற்கு 1912ம் வருஷத்து ஒப்பந்தப்படி கிடைத்திருக்கிறது. இது ஸ்பெயினிலுள்ள ராஜதந்திரிகளுக்கு அதிக ஆசாபங்கத்தை உண்டு பண்ணியது.

ஐரோப்பிய யுத்தத்தில் ஸ்பெயின் நடு நிலைமையே வகித்தது. நேசக் கட்சியாரோடு, இத்தலி சேர்ந்து கொண்டு விட்டமையால், ஸ்பெயினின் நடு நிலைமை சாத்தியமாயிற்று. மத்திய தரைக் கடலின் மேற்குப் பாகத்தில் ஐரோப்பிய யுத்தத்தின் ஒரு பகுதியேனும் நிகழ்ந்திருக்குமாயின், ஸ்பெயின் நடு நிலைமை வகித்திருக்குமாவென்பது சந்தேகம். ஸ்பானிஷ் அரசாங்கம் நடு நிலைமை வகித்த தேயானாலும், ஸ்பானிஷ் ஜனங்கள் நடுநிலைமை மனப்பான்மை கொள்ளவில்லை. ஸ்பெயினில் ஐரோப்பிய யுத்தஆரம்பத்திலிருந்தே இரண்டுகட்சிகள் தோன்றலாயின. ஏறக்குறைய உள்நாட்டுக் குழப்பம் மாதிரியே இந்தச் சச்சரவு பெருகியது. ஐரோப்பிய யுத்தம், ஸ்பானியர்களுக்குத் தான் முக்கியத்துவம் போலிருந்தது. ஆனால் இவர்களில் எத்தனை பேருக்கு ஐரோப்பிய யுத்தம் ஏன் நடைபெறுகிறதென்ற காரணங்களே தெரியாமலிருந்தது. யுத்த களத்திலிருந்து போர் புரிந்தவர்களுக்கே தெரியாமலிருந்த போது, இவர்களுக்கு தெரிந்திருக்கவில்லையென்றால் அது மன்னிக்கக் கூடியது தான்.

இந்த இரண்டு கட்சிகளில் ஒரு கட்சியினர், ஜெர்மனியை ஆதரித்தனர். இந்தக் கட்சியில் ராணுவத்தைச் சேர்ந்தவர்கள், பாதிரிமார்கள், மத்திய வகுப்பினர், அரசருடைய ஆதிக்கத்தை ஆதரிப்போர் ஆகிய இவர்களே யிருந்தனர். ஜெர்மனிக்கு விரோதமாயிருந்த கட்சியில், குடியரசுவாதிகள், அபேதவாதிகள், ஜனங்களிற் பெரும்பாலோர் முதலியோரே இருந்தனர். ஐரோப்பிய யுத்தத்தில் ஜெர்மனி வெற்றி பெறுமேயானால், அது,ஸ்பெயினில் பிற்போக்கான ஆட்சிமுறை ஏற்படுவதற்குத் துணையாயிருக்குமென்று இரண்டு கட்சியினருமே கருதினார்கள். ஆனால் ஜெர்மனிக்குச் சாதகமாயிருந்த கட்சியினர் ஜெர்மனி வெற்றி பெறுமானால், பிரான்ஸும் பிரிட்டனும் சேர்ந்து ஸ்பெயினுக்கு இழைத்த அநீதிகளுக்கெல்லாம் பரிகாரந் தேடிக் கொள்ளலாமென்று

கருதினார்கள். ஆக யார் வெற்றி பெற்றாலும் ஏதேனும் ஒரு கட்சி, அரசாங்க ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டு, எதிர்க்கட்சியின் மீது தனக்குள்ள ஆத்திரத்தை யெல்லாம் காட்டும் என்று தான் எல்லாருமே எதிர்பார்த்தார்கள்.

யுத்தம் முடிந்தது. அதன் விளைவாகச் சர்வதேச சங்கம் ஏற்பட்டது. இந்தச் சங்கத்தினால், ஸ்பெயினில் நிரந்தரமான சமாதானம் ஏற்படுமென்றுதான் எல்லாருமே கருதினார்கள். எல்லா வல்லரசுகளும் ஒன்று சேர்ந்து, எல்லாத் தேசங்களினுடைய க்ஷேமத்தைப் பாதுகாக்கப் போவதாகச் சொன்னதால், ஸ்பெயின், தன்னுடைய க்ஷேமத்திற்கு எவ்வித பாதகமும் உண்டாகாதென்று கருதியது. இதனால் தன்னுடைய ராணுவத்தைப் பலப்படுத்திக் கொள்ளாமலே இருந்தது. ஆனால் ஜெர்மனியை ஆதரித்து வந்த கட்சியினரோ, இந்தச் சர்வதேச சங்க விஷயத்தில் அதிகமான சிரத்தை காட்டவில்லை.

ஆனால், சர்வதேச க்ஷேமத்திற்காக எல்லாரும் ஒன்று சேர்ந்து பாடுபடுவதென்ற ஏற்பாடு சிதறிப் போகவும், சர்வதேச சங்கமானது வலியிழந்து நிற்கவும், மறுபடியும் யுத்தம் ஏற்பட்டால், ஸ்பெயின் எந்தப் பக்கத்தில் சேருவதென்ற பிரச்னை முக்கியத்துவம் பெற்றது. ஆனால் பொது ஜனங்களைக் கேட்டுப் பார்த்தால், எப்படியாவது சமாதானந்தான் தேவை என்று கூறுவார்கள்.

சென்றதெல்லாம் செல்க. எப்பொழுதைக் காட்டிலும் இப்பொழுது ஸ்பானிஷ் மக்களுக்குச் சமாதானம் மிக அவசியமாயிருக்கிறது. எந்த அரசாங்கத் தலைவரும் இதை உணராமலிருக்க முடியாது. இன்னொரு யுத்தத்தில் ஸ்பெயின் கலந்து கொள்ளுமானால், ஸ்பெயினுக்கு அழிவு காலம் ஏற்பட்டு விட்டதென்று நிச்சயமாகக் கருதிவிடலாம். இதனாலேயே ஸ்பெயின், இனி ஏற்படப் போகிற ஐரோப்பிய சச்சரவுகளில் எவ்விதத்திலும் கலந்து கொள்ளக் கூடாதென்று கூறுகிறேன்.

ஸ்பெயின், சுயமதிப்புப் பெற்றுத் தன் சக்தியை அதிகப்படுத்திக் கொள்ளுமானால், அது, பிரான்ஸின் அதிகாரபலத்தைப் பாதிக்கும். அது, தன்னலத்திற்காக, ஸ்பெயினைப்பலஹீனப்படுத்தி வைப்பது அவசியமென்று கருதுகிறது. இப்படியே பிரிட்டனும், ஸ்பெயினுடைய பலஹீனமான தன்மையிலேயே திருப்தியடைகிறது. ஏனென்றால், ஜிப்ரால்டர் துறைமுகம், தன்னுடைய ஆதிக்கத்திலேயே நிரந்தரமாக இருக்கவேண்டுமென்று அது விரும்புகிறதல்லவா?

ஜெர்மனியோடு, ஸ்பெயினுக்கு எப்பொழுதும் சண்டை இருந்ததில்லை. 1521ம் வருஷத்திலிருந்து 1712ம் வருஷம்வரை இரண்டுநாடுகளும் ஒரே விதமான கொள்கைகளையே அனுஷ்டித்து வந்தன. இதற்குப் பிறகு, ஐரோப்பிய அரசியலில் ஸ்பெயினுடைய ஆதிக்கம் மிக உச்ச நிலையை யடைந்திருந்தது. இந்த ஸ்தானத்திலிருந்து இது வீழ்ந்த பிறகு, ஜெர்மனிக்கும் ஸ்பெயினுக்கும் மேலாக பிரான்ஸ் கத்த ஆரம்பித்தது. ஆகையால், ஸ்பெயினும் ஜெர்மனியும் எப்பொழுதுமே பிணங்கி இருந்ததில்லை. இரண்டு நாடுகளின் நன்மையும் ஒன்று சேர்ந்தாற் போலவேயே இனியும் இருக்கவேண்டும்.

சமஷ்டி அரசியலில் சட்டசபைகள்

—ஸ்ரீ கே. வி. ராமசுப்ரமண்யம்
B. A., B. L.,

சமஷ்டி சட்ட சபையின் அமைப்பைப்பற்றி (சுடர் 2—கதிர் 7ல்) நாம் ஆராய்ந்தோம். இந்த இதழில் மேற்படி சபையின் அதிகாரங்களைப் பற்றி ஆராய்வோம். சமஷ்டி சட்ட சபைக்கு இன்னின்ன அதிகாரங்கள் என்றும், மாகாண சட்ட சபைகளுக்கு இன்னின்ன அதிகாரங்கள் என்றும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இந்தியா சட்டத்தின் 7-வது ஷெடியூலில் மூன்று ஜாப்தாக்கள் கண்டிருக்கின்றன. எந்தெந்த விஷயங்களில் சமஷ்டி சட்ட சபைக்குத் தனித்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ, அவை முதல் ஜாப்தாவிலும், மாகாண சட்டசபைகளுக்குப் பிரத்தியேகமாக பாத்தியப்பட்ட விஷயங்கள் இரண்டாவது ஜாப்தாவிலும், சமஷ்டி சபை, மாகாண சபை, இவை இரண்டும், சட்டங்களை ஏற்படுத்தக்கூடிய விஷயங்களை மூன்றாவது ஜாப்தாவிலும் கண்டிருக்கிறது.

பொதுவாக இந்தியா முழுவதையும் பாதிக்கக் கூடியதாயும், என்னென்ன விஷயங்களை ஒரு மத்திய சர்க்கார் நிர்வகித்து வருவதால் இந்தியா முழுவதுக்கும் நன்மை ஏற்படக் கூடியதாயுமுள்ள விஷயங்கள் முதல் ஜாப்தாவில் கண்டிருக்கின்றன. உதாரணமாக ராணுவ சம்பந்தமான விஷயங்கள், தந்தி, தபால், நாணயச் செலாவணி, முக்கியமான ரெயில்வேக்கள் முதலிய விஷயங்கள் இந்தியா முழுவதிற்கும் பொதுவானவை. இந்தியாவின் நன்மையை யுத்தேசித்து இவைகளை ஒரு மத்திய சர்க்கார்தான் நிர்வகிக்க வேண்டும். ஆகையால் இவைகள் முதல் ஜாப்தாவில் கண்டிருக்கின்றன. இந்த ஜாப்தாவில் கண்டிருக்கும் மற்ற விஷயங்களில் முக்கியமானவை அடியிற் கண்டவைகள் :—

கப்பற்படை, ஆகாயக் கப்பல், வெளி நாட்டு வியவகாரங்கள், பாங்கிகள், சுங்கம், உப்புவரி, வருமான வரி, இன்ஷூரன்ஸ், ஏற்றுமதி

ஆனால் இந்த அபிப்பிராயத்திற்கு நேர் மாறான ஓர் அபிப்பிராயமும் ஸ்பெயினில் இருந்துகொண்டு வருகிறது. அதாவது ஸ்பெயின் எப்பொழுதுமே, பிரான்ஸுடனும் பிரிட்டனுடனும் நட்புக் கொண்டிருக்க வேண்டுமென்பதாகும். இந்த அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளவர்களே, ஸ்பெயினினுள்ள லிபரல் கட்சியினர். இவர்களுடைய அபிப்பிராயத்தையும் நாம் எளிதில் புறக்கணித்து விடமுடியாதல்லவா?

இறக்குமதி வரி, காபிரைட், புரோநோட்டுகள், உண்டியல்கள்.

மாகாண சட்டசபைக்குப் பிரத்தியேகமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இரண்டாவது ஜாப்தாவில் கண்ட விஷயங்களில் முக்கிய மானவைகளாவன:—

அந்தந்த மாகாணத்தில் அமைதியை நிலை நிறுத்துவது, மாகாணத்தி லுள்ள கோர்ட்டுகள், போலீஸ், ஜெயில்கள், ஸ்தல ஸ்தாபனம், சுகாதாரம், கல்வி, நிலம், நிலவரி, தண்ணீர், தண்ணீர் வரி, தொழில் வரி, காடுகள், அந்தந்த மாகாணத்திற்குள் வர்த்தகம், வியாபாரம்.

இரண்டு சட்ட சபைகளுக்கும் பொதுவாக பாத்தியப் படுத்தப் பட்ட விஷயங்களில் (மூன்றுவது ஜாப்தாவில் கண்டவைகள்) முக்கியமானவைகளாவன:—

சிவில், கிரிமினல் வியவகாரங்கள், விவாகம், விவாகரத்து, மைனர்கள், சுவீகாரம், தர்மம், இன்சால்வென்ஸி, பத்திரிகைகள், தொழிற்சாலைகள், தொழிலாளர்கள் ஒப்பந்தங்கள்.

இவ்வாறு மூன்று ஜாப்தாக்களாக எல்லா விஷயங்களையும் பிரித்திருப்பது இந்திய அரசியல் சட்டத்தின் ஒரு பிரத்தியேகமான அம்சம். மற்ற சமஷ்டி அரசியல்களில் இவ்விதம் மூன்று ஜாப்தாக்கள் கிடையாது. ஒன்று அல்லது இரண்டு ஜாப்தாக்கள் தான் உண்டு. சமஷ்டி சட்ட சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விஷயங்களில் மாகாண சட்ட சபைகளும், மாகாண சட்டசபைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விஷயங்களில் சமஷ்டி சட்டசபையும் தலையிடக் கூடாது.

இந்த இரண்டு ஜாப்தாவிலும் காணப் படாத விஷயங்கள் இருக்கும் பக்ஷத்தில் (Residuary Powers) அந்த விஷயங்கள் சம்பந்தமான அதிகாரங்கள் ஆஸ்திரேலியாவிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் மாகாண சட்ட சபையைச் சேர்ந்தது. கானடாவில் சமஷ்டி சட்டசபையைச் சேர்ந்தது. இந்திய அரசியல் சட்டப்படி இத்தகைய விஷயங்கள் சமஷ்டி சட்ட சபையைச் சேர்ந்ததா அல்லது மாகாண சட்ட சபையைச் சேர்ந்ததா என்று நிர்ணயிக்கும் பொறுப்பு கவர்னர் ஜெனரல் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

இந்திய அரசியல் திட்டத்தில் சமஷ்டி சட்டசபைக்கும் மாகாண சட்டசபைக்கும் பொதுவாக பாத்தியப் படுத்தப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாக மேற்படி இரண்டு சட்ட சபைகளும் ஏற்படுத்தும் சட்டங்களுக்குள் பரஸ்பர விருத்தம் ஏற்படலாம். அப்பொழுது எந்தச் சட்டம் அமுலுக்கு வரக்கூடாது என்பதைக் குறித்து அடியிற்கண்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன:—

(அ) ஒருமாகாண சட்டசபை ஏற்படுத்திய சட்டம், சமஷ்டி சபையால் ஏற்படுத்தப் பட்ட சட்டத்திற்கு விருத்தமாக இருந்தால், சமஷ்டி சட்ட சபையால் ஏற்படுத்தப்பட்ட சட்டமே அமுலுக்கு வரும்.

(இ) ஆனால் மாகாண சட்டசபையால் ஏற்படுத்தப்பட்ட சட்டம் கவர்னர் ஜெனரல் அவர்களின் சம்மதிக்கு அல்லது, சக்கரவர்த்தி அவர்களின் சம்மதிக்கு நிறுத்தி வைக்கப் பட்டு, அவருடைய சம்மதியின் பேரில் அது சட்டமாக ஏற்படுத்தப் பட்டால்

மாகாண சட்டசபையால் ஏற்படுத்தப்பட்ட இந்தச் சட்டம் சமஷ்டி சட்டசபையால் இதே விஷயமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்டத்திற்கு விரோதமாயிருந்தாலும் செல்லக்கூடியது.

சட்ட சம்பந்தமான விஷயங்கள் எவ்வளவு துல்லியமாக வரையறுக்கப்பட்டாலும், மாகாண சட்டசபைக்கும் சமஷ்டி சட்டசபைக்கும் அதிகார சம்பந்தமாகத் தகராறுகள் ஏற்படலாம். உதாரணமாகச்சமீபத்தில் இந்தியாவில் இரண்டு மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்ட இரண்டு சட்டங்களை எடுத்துக் கொள்வோம். விவசாயிகளின் கடன் நிவாரணச்சட்டம் சமீபத்தில் சென்னை சட்ட சபையில் நிறைவேறியது. இந்தச் சட்டம் எல்லாக்கடன்களையும் பாதிக்கக்கூடியது. பிராமிசரி நோட்டுகள் மூலமும், உண்டியல்கள் மூலமும் வாங்கப்பட்டிருக்கும் கடன்களையும் இந்தச் சட்டம் பாதிக்கக் கூடியதா என்று பெருத்தவிவாதம் ஏற்பட்டது. விவசாயம், கடன்கள், இவை இரண்டும் மாகாணசட்ட சபைக்கு பிரத்தியேகமாகக் கொடுக்கப் பட்டிருக்கும் விஷயங்கள். இவைகள் சம்பந்தமாகச் சட்டம் ஏற்படுத்தும் பாத்தியம் மாகாண சட்டசபையைச் சேர்ந்ததுதான். ஆனால் பிராமிசரி நோட்டுகள், உண்டியல்கள், இவை இரண்டும் சமஷ்டி சட்ட சபைக்குப் பிரத்தியேகமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் விஷயங்கள். இவைகள் சம்பந்தமாகச் சட்டம் ஏற்படுத்த மாகாண சபைக்கு அதிகார மில்லை. ஆகையால் விவசாயிகளின் கடன் தொகை சம்பந்தமாகச் சட்டம் ஏற்படுத்த மாகாண சட்டசபைக்கு அதிகாரம் இருந்த போதிலும் மேற்படி கடன்கள் பிராமிசரி நோட்டுகள் மூலமாகவும் உண்டியல்கள் மூலமாகவும் வாங்கப் பட்டிருந்தால், இந்தக் கடன்களை மேற்படி சட்டம் பாதிக்காது என்று கடன் கொடுத்த புள்ளிகள் கட்சியாடினார்கள். இந்தக் கட்சியை சென்னை ஹைகோர்டு ஒப்புக் கொள்ள வில்லை.

மத்திய மாகாணத்திலும் ஒரு புது சட்டம் ஏற்பட்டு, அதைப்பற்றி விவாதம், சமஷ்டி ஹைகோர்ட்டில் நடந்தது. மாகாண சட்ட சபைக்குப் பிரத்தியேகமாகக் கொடுக்கப் பட்ட விஷயங்களில் விற்பனை வரி என்று ஒரு சட்டம் கண்டிருக்கிறது. இந்த அதிகாரத்தைக் கொண்டு மத்திய மாகாண சட்ட சபையில் 'விற்பனை வரி'ச் சட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் மத்திய மாகாணத்தில் விற்பனையாகும் எல்லா மோட்டார் எண்ணெய்களின்பேரில் ஒரு வரிவிதிக்கப்பட்டது. இந்தச் சட்டத்தை மத்திய சர்க்கார் ஆக்ஷேபித்தார்கள். மத்திய சட்ட சபைக்கு (அதாவது சமஷ்டி சட்ட சபைக்கு) பிரத்தியேகமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் விஷயங்களில் 'இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் மீது வரி விதித்தல்' (Excise) என்ற ஒரு ஐட்டம் கண்டிருக்கிறது. இந்தியாவில் உற்பத்தியாகும் மோட்டார் எண்ணெய்களின் பேரில் மத்திய சர்க்கார் இந்த அதிகாரப்படி, வரி விதிக்க பாத்தியமிருக்கிறதென்றும், அவ்விதமே தற்காலம் வரி விதிக்கப்பட்டு வருகிறது என்றும், இதே சரக்குகளின் பேரில் விற்பனை வரி என்று ஒரு வரி விதித்தால் அது மத்திய சர்க்கார் விதிக்கக்கூடிய (Excise) வரியையே விதித்ததாக ஏற்படும்

என்றும், அவ்விதம் வரி விதிக்க மாகாணங்களுக்கு அதிகாரமில்லை யென்றும் மத்திய சர்க்கார் தரப்பில் வாதாடப்பட்டது. இந்த வாதத்தை சமஷ்டி ஹைகோர்ட் ஒப்புக்கொள்ள வில்லை. மத்திய மாகாண சட்ட சபை ஏற்படுத்திய விற்பனை வரிச் சட்டம் செல்லக்கூடியதுதான் என்று தீர்மானித்தார்கள்.

இது போல் இன்னும் எவ்வளவோ விஷயங்களில் மாகாணங்களுக்கும் மத்திய ஸ்தாபனத்துக்கும் விவாதம் ஏற்படக் கூடியதாகவிருக்கிறது. மாகாண ஜாப்தாவில் கண்ட விஷயத்துக்கும் மத்திய ஸ்தாபனத்துக்குரிய விஷயத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமலிருந்தால் விவாதத்திற்கு இடமில்லை. அல்லது ஒரே ஒரு ஜாப்தாவை மட்டும் ஏற்படுத்தி, அதில் கண்ட விஷயங்கள் சம்பந்தமாக ஒரு சட்டசபைக்குப் பிரத்தியேகமாக அதிகாரம் கொடுத்து, மற்ற எல்லா விஷயங்கள் சம்பந்தமாக பிரத்தியேக அதிகாரம் மற்ற ஸ்தாபனத்துக்குக் கொடுத்திருக்கும் பக்ஷத்திலும், அதிக விவாதம் ஏற்படக் கூடியதில்லை. ஆஸ்திரேலியச் சட்டத்தில் ஒரு ஜாப்தா மட்டும் தான் இருக்கிறது. மத்திய ஸ்தாபனத்துக்கு எந்தெந்த விஷயங்கள் பிரத்தியேகமாக பாத்தியப் பட்டவைகளோ, அந்த விஷயங்கள் ஜாப்தாவில் கண்டிருக்கின்றன. அந்த ஜாப்தாவில் காணாத மற்ற எல்லா விஷயங்களும் மாகாணங்களுக்கு (ஆஸ்திரேலியாவில் ஸ்டேட் (state) என்று கூறப்படும்) பாத்தியப் பட்டவை. ஆகையினால் ஆஸ்திரேலியாவில் விவாதம் ஏற்படவேண்டுமானால், விவாதப்பட்ட விஷயம் மேற்படி ஜாப்தாவில் அடங்கியிருக்கிறதா வென்று மட்டும் ஆராயவேண்டும். கானடா சட்டத்திலும் மாகாணங்களுக்கு பாத்தியப் பட்ட விஷயங்கள் இன்னின்னவை என்று ஒரு ஜாப்தா இருக்கிறது. மேற்படி விஷயங்களைத் தவிர மற்ற எல்லா விஷயங்களும் மத்திய சட்டசபைக்குப் பாத்தியப் பட்டவை என்றும் வியக்தமாக கண்டிருக்கிறது. இத்துடன் நின்றிருந்தால், அதிக விவகாரத்துக்கு இடம் இருந்திராது. ஆனால் மேற்படி விஷயங்களையும் குறிப்பிட்டு ஒரு ஜாப்தா கொடுக்கப் பட்டிருக்கிறது. மத்திய ஸ்தாபனத்துக்கு பாத்தியப் பட்ட விஷயங்கள் பொதுப் படையாக விட்டு விடாமல், தெளிவுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் இவ்வாறு வியக்தமாக ஒரு ஜாப்தாவில் கொடுக்கப்பட்டதிலிருந்து தெளிவு ஏற்படாமல் சந்தேகத்துக்கும் விவாதத்துக்குமே இடம் ஏற்பட்டது.

இந்திய அரசியல் திட்டத்தில் மூன்று ஜாப்தாக்கள் கண்டிருப்பதிலிருந்து விவாதாஸ்பதமான விஷயங்கள் குறையுமா அல்லது அதிகமாகுமா என்பது நாளடைவில்தான் தெரியவரும்.



1939

மே

26 ஐர்லாந்தை, வட ஐர்லாந்தென்றும் தென் ஐர்லாந்தென்றும் இரண்டு கூறாகப் பிரிக்கக் கூடாதென்றும், இதனைக் கண்டிப்பதற்காக, ஐரிஷ்காரர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கெல்லாம், சங்கங்கள் ஏற்படுத்தி கிளர்ச்சி செய்ய வேண்டுமென்றும் டிவேலரா ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

27 ஆங்கிலோ-சோவியத் ஒப்பந்த விஷயத்தில் பிரிட்டிஷ்-பிரெஞ்சு திட்டங்களை மாஸ்கோவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர் ருஷ்யா அரசாங்கத்திடம் சமர்ப்பித்தார்.

டிரிபோலியில் வசிக்கும் 16வயதுக்குமேல் 55 வயதுக்குட் பட்ட எல்லா அராபியர்களும் ராணுவப் பயிற்சி பெற வேண்டுமென்று இத்தாலிய அரசாங்கம் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

29 முஸ்லிம்கள் காங்கிரஸில் சேர்ந்து இந்தியாவின் விடுதலைக்கு உழைக்க வேண்டுமென்று மௌலானா அபிபுர் ரஹ்மான் ஒரு பிரசங்கத்தில் கூறினார்.

இன்று லண்டனில் ஒரு சினிமா கொட்டகையில் வெடிகுண்டு வெடித்து இருபது பேருக்குக் காயம் ஏற்பட்டது.

மாகாணங்களில் நடை பெற்று வரும் வகுப்புக் கலவரங்களை அடக்கும் விஷயத்தைப் பற்றி ஆலோசிக்க எல்லா மாகாண உள்நாட்டு இலாகா மந்திரிகளும் சிம்லாவில் ஒன்றுகூடி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இன்று ஊபுவைப் பிரதம மந்திரியாகக் கொண்ட பர்மா மந்திரி சபை ராஜீனாமா செய்து விட்டது. உடனே ஊபுவையே பிரதம மந்திரியாகக் கொண்ட மற்றொரு மந்திரி சபை அமைந்து விட்டது.

மஞ்சூகோ எல்லைப் புறத்தில் 42 சீன ஆகாய விமானங்களை ஜப்பானியர் சுட்டு வீழ்த்தினர்.

துருக்கி ஜனக் கட்சியின் ஐந்தாவது காங்கிரஸ் இன்று கூடியது. குடியரசுத் தலைவரான இனோனு உலக சமாதானத்திற்காகத் துருக்கி உழைக்கும் என்று கூறினார்.

30 ஜெருசலேத்தில் ஒரு அராபிய மிதவாதத் தலைவர் அவருடைய வீட்டில் சுட்டுக் கொல்லப் பெற்றார்.

அந்நிய நாட்டுக் கப்பல்களை ஜப்பானியர் பரிசோதனை செய்வதைப் பற்றிக் கலந்து பேச பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய மூன்று நாட்டுப் பிரதிநிதிகளும் ஷாங்காய் நகரத்தில் கூடிக் கலந்து பேசினார்கள்.

31 பாலஸ்தீன நிருவாக சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வெளியிட்ட அறிக்கையை அராபிய ஹைகமிட்டியார் நிராகரிப்பதாக ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கட்டாயமாக இன்ஷ்யூர் செய்து கொள்ள வேண்டுமென்று பரோடா அரசாங்கத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

பாலஸ்தீன் கிராண்ட் மப்டி பாலஸ்தீனத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதென்று ஹைகமிஷனர் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்.

1 ஒரிஸா சமஸ்தானங்களின் ஏஜெண்டாயிருந்த தளபதி பாஸல் காட்டியைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரிக்கப் பட்ட பலருள் மூவர் மரண தண்டனை யடைந்தனர். எண்மர் தீவாந்திர தண்டனை பெற்றனர்.

ஸ்லோவேகியா அரசாங்கத்தின் சுதந்திரத்தை ஜப்பான் அங்கீகரித்துக் கொண்டது.

2 சுதேச சமஸ்தானங்களில் நடைபெறுகிற கிளர்ச்சியைப் பற்றி மகாத்மா காந்தி இன்று ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அதில் பின்வரும் அமிசங்கள் முக்கியமானவை:-

1 சமஸ்தானங்களில் சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தி வைக்கப்பட வேண்டும்

2 சமஸ்தானப் பிரஜைகள், அதிகாரிகளோடு நேர்முகமாகச் சமரஸம் செய்துகொள்ள வேண்டும்.

3 சிறையிலிருக்கும் சத்தியாக் கிரகிகளைப் பற்றி பிரஜைகள் கவலைப்படக்கூடாது.

4 துரிதமாக முன்னேற்றமடையும் பொருட்டு கோரிக்கைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

5 பொதுஜன சட்ட மறுப்புச் செய்யலாமென்பதை தற்காலிகமாக நிறுத்திக் கொள்ள வேண்டும்.

6 நிர்மாண வேலைகளை நிறைவேற்றி வைத்தல்.

மே மாதத்தில் மட்டும்ஐம்பத்தோராயிரம் ஜப்பானியர்கள் இறந்து போனார்கள் என்று ஒரு சீன அறிக்கை கூறுகிறது.

புதிதாக 24 யுத்தக் கப்பல்கள் கட்ட அமெரிக்கா ஏற்பாடு செய்து வருகின்றது.

தெடீஸ் என்ற நீர் மூழ்கிக் கப்பல் லிவர்பூலுக்கு அருகாமையில் மூழ்கி விட்டது. இதன் பயனாக 90 பேர் இறந்து விட்டனர்.

3 காங்கிரஸ் விதிகளைச் சீர்திருத்த நியமனம் செய்யப்பட்ட கமிட்டியானது இன்று பம்பாயில் கூடியது. மகாத்மா காந்தியும் ஆஜராயிருந்தார்.

4 மாஜி சோல்ஜர்களின் கூட்ட மொன்றில் ஹிட்லர், இன்று பேசியபோது, ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டு விடுவதே வார்சேல் ஒப்பந்தத்தைத் தயாரித்தவர்களுடைய நோக்க மென்று கூறினார்.

5 ஜப்பானுக்கும் ருஷ்யாவுக்கும் தகராறு ஏற்பட்டு இரு தரப்பிலும் பலர் கொல்லப்பட்டனர்.

மெக்ஸிகோ நகரத்தில் ஒரு சினிமா கொட்டகையில் ஒரு பெரிய நெருப்புப் பற்றிக் கொண்டது. சுமார் 150 பேருக்கு மேல் சேதம்.

ஜெர்மனியின் குடியேற்ற நாடுகள் ஜெர்மனிக்கே திருப்பிக் கொடுத்து விட வேண்டு மென்று டாக்டர் ஷாஷெட் இன்று இலங்கையில் பேசினார்.

6 கெண்ட் கோமகனின் மனைவி, தமது வீட்டை விட்டு வெளியே புறப்படுகிற போது ஒரு வெடி குண்டு வெடித்தது. தெய்வாதீனமாக ஒருவருக்கும் காயம் பட வில்லை.

ஸ்பெயின் யுத்தத்திலிருந்து திரும்பி வந்த ஜெர்மானியப் போர் வீரர்களைப் பார்த்து இன்று ஹிட்லர் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

7 இன்று மகாத்மா காந்தி தமது பரிவாரங்களுடன் பம்பாயினின்று புறப்பட்டு வார்தா சென்றார்.

ஜெர்மனியினுடையவும் இத்தலியினுடையவும் ஆகாயப் படைகளை ஒன்று சேர்த்து விட வேண்டு மென்று யோசனை செய்யப்பட்டு வருவதாகச் சொல்லப் படுகிறது.

8 இன்று அரசரின் பிறந்த நாள், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மெங்கணும் கொண்டாடப் பட்டது.

சமஷ்டி அரசியலில் சேர விருப்ப மில்லை யென்பதைத் தெரிவிக்குமாறு சுதேச மன்னர்களுக்கு ஆறுமாத அவகாசம் கொடுக்கப் பட்டிருக்கிற தென்றும், அவர்களுடைய பதில் ஜூன் மாதத்திற்குள் கிடைத்து விடலாமென்றும் இன்று காமன்ஸ் சபையில் கூறப் பட்டது.

நேட்டாலிலுள்ள பள்ளிக் கூடங்களில் ஐரோப்பியப் பிள்ளைகளையும் ஐரோப்பிய ரல்லாத பிள்ளைகளையும் தனித் தனியாக பிரித்து வைப்பதாக ஒரு சட்டம் ஏற்படுத்தப்படு மென்று தெரிகிறது.

9 வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் பிரதம மந்திரியான டாக்டர் கான் சாஹிபுவின் குமாரனான உபயதுல்லா கான், இன்று 18மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

வாஷிங்டன் நகரில் இன்று பிரிட்டிஷ் மன்னர் தம்பதிகளுக்கு ஒரு பெரிய விருந்து நடைபெற்றது.

வடமேற்கு எல்லைப் புறத்திலுள்ள மகம்மத் ஜாதியார், உலகயுத்தம் ஏற்படுமானால் பிரிட்டிஷாருக்கு உதவிசெய்வதில்லை யென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்.

10 சமஷ்டி அரசியலில் சேரும் விஷயத்தைப் பற்றி ஆலோசிக்க இன்று பம்பாயில் சுதேச மன்னர்கள் ஒரு மகாநாடு கூடினார்கள்.

ஜெர்மனியின் கோரிக்கைகளைப் பற்றி ஜெர்மனியுடன் கலந்தாலோசிக்கத் தான் சித்தமாயிருப்பதாக பர்மிங்ஹாம் நகரத்தில் ஸ்ரீ சேம்பர்லேன் கூறினார்.

11 டான்ஸிக் நகரத்திலுள்ள போலிஷ் சுங்க வரி இலாகா உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்று டான்ஸிக் நகரசபை விடுத்த வேண்டுகோளை, போலிஷ் அரசாங்கத்தார் மறுத்து விட்டனர்.

சீனாவிலுள்ள டீன்ஸ்டீன் நகரத்தில் பிரிட்டிஷாருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் உரிமைகள் இருக்கின்றன. பிரிட்டிஷார் சீனாவுக்கு உதவியாய் யிருக்கின்றனர் என்பதைக் கண்டிக்கும் பொருட்டு, மேற்படி நகரத்தைச் சுற்றி முற்றுகை போடுவதென்று ஜப்பானியர் தீர்மானித்து விட்டனர்.

12 சமஷ்டி அரசியல் திட்டத்தை நிராகரிப்பதாக இன்று சுதேச மன்னர் சபை ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

13 தளபதி பிராங்கோ, செப்டம்பர் மாதக் கடைசியில் ரோமாபுரிக்கு விஜயஞ் செய்வாரென்று தெரிய வருகிறது.

சீன-ஜப்பானிய யுத்தம் இன்னும் இரண்டு வருஷமாவது நடக்கு மென்று ஜப்பானிய அறிக்கை யொன்று கூறுகிறது.

14 டீன்ஸ்டீன் நகரத்தை ஜப்பானியர்கள் முற்றுகை யிட்டிருப்பதற்கு ஜெர்மனி பக்க பலம் காரணமா யிருக்குமோ வென்று ஊகிக்கப் படுகிறது.

சென்ற மூன்று மாதத்தில் பிரிட்டனில 336,090 பேர் ராணுவத்தில் பதிவு செய்து கொண்டிருக்கின்றனர்.

தேச சேவைக் கென்று நிரந்தரமான ஒரு தொண்டர் படை தேவை யென்று சர்தார் படேல் ஆமதாபாத்தில் ஒரு பிரசங்கத்தில் கூறினார்.

15 அந்நிய நாட்டுப் பிரசங்கத்திற் கென்று பிரிட்டிஷ் மந்திரிச் சபையில் புதிதாக ஓர் அரசாங்க இலாகா திறக்கப்பட்டிருக்கிறது.

ருஷ்ய அந்நிய நாட்டு மந்திரியான மோலோடோவுடன், பிரிட்டிஷ், பிரெஞ்சு ஸ்தானீகர் நீண்ட நேரம் கலந்து பேசினார்கள்.

16 காசி ஜில்லாவில் போலீஸ் படையை அதிகரித்திருப்பதாக ஐ. மாகாண கவர்னர் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

தென்னாப் பிரிக்கா விலுள்ள சுரங்கத் தொழிலாளர் சங்கத்தின் தலைவரான சார்லஸ் ஹாரிஸ் என்பவர் இன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஜினீவாவில் கூடியுள்ள 'மாண்டேட்ஸ் கமிஷன்' முன்னர், பிரிட்டிஷார், பாலஸ்

தீன விஷயத்தில் அனுஷ்டிக்கப் போகும் கொள்கைகளைப் பற்றி மால்கோம் மாக்டோனால்ட் விரிவாகக் கூறினார்.

17 சென்னை அரசாங்கத்தார் 150 லட்சம் ரூபாய் பொது மார்க்கட்டில் கடன் வாங்கத்தீர்மானித் திருக்கின்றனர்.

டீன்ஸ்டீன் நகரத்தை ஜப்பானியர்கள் முற்றுகை யிட்டிருப்பதற்குக் காரணம், உலக வல்லரசுகளின் கவனத்தை வேறு விதமாகத் திருப்புவதற்கே யென்றும், கீழ் நாட்டு விஷயத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் கொண்டிருக்கும் ஒற்றுமையை உடைப்பதற்கே யென்றும் சீன பத்திரிகைகள் கூறுகின்றன.

18 இப்ன் ஸாத் மன்னருடைய தூதரான கலீத் அல்ஹூத் என்பவர் இன்று ஹிட்லரைக் கண்டு பேசினார்.

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் எல்லைப்புற மாகாணத்தில் சுற்றுப் பிரயாணஞ் செய்யத் தொடங்கி யிருக்கிறார்.

வட மேற்கு எல்லைப்புற மாகாணத்தின் பிரதம மந்திரியான டாக்டர் கான் சாஹிபுவின் கடைசி குமாரனை ஜான் கான் சாஹிப், டைபாயிட் ஜுரத்தினால் இறந்து விட்டார். இவருக்கு வயது 26. பாரிஸ்டர் தொழில் நடத்தி வந்தார்.

டான்ஸிக் பிரதேசத்திற்கு விஜயஞ் செய்திருக்கும் டாக்டர் கோயப்பெல்ஸ் ரேடியோவில் பேசுகிறபோது, டான்ஸிக் பிரதேசம் ஜெர்மனியுடன் சேர்ந்து விடவே உறுதி கொண்டிருப்பதாகக் கூறினார்.

19 பாலஸ்தீனத்திலுள்ள ஹைபா நகரத்தில் வெடிகுண்டொன்று வெடித்து பதினெட்டு அராபியர் கொல்லப்பட்டார்கள்.

ஜெர்மனியிடம் ஜெக்கோ ஸ்லோவேகியா இணைந்து விட்டதைப் பிரிட்டன் அங்கீகரித்திருக்கிறது.

20 டீன்ஸ்டீன் நகரத்தை ஜப்பானியர்கள் முற்றுகை யிட்டிருப்பதைப் பற்றி பிரிட்டிஷ் மந்திரி சபையார் தீவிரமாக யோசித்து வருகின்றனர்.

21 இந்திய சுதேச மன்னர்கள், சமஷ்டியில் சேர முடியாதென்று கூறிவிட்டதைக் குறித்துக் கோபித்து 'மான்செஸ்டர் கார்டியன்' பத்திரிகை தலையங்கம் எழுதியிருக்கிறது.

சீனாவிலுள்ள ஸ்வாடோ நகரத்தை ஜப்பானியர் கைப்பற்றிக் கொண்டு விட்டனர்.

இத்தாலிய அரசாங்கத்தினுடையவும் ஜெர்மன் அரசாங்கத்தினுடையவும் கப்பற்படை உத்தியோகஸ்தர்கள் பெர்லின் நகரத்தில் கலந்துபேசுகிறார்கள்.

டீன்ஸ்டீன் நகரத்திலுள்ள பிரிட்டிஷாரில் பலர், மேற்படி நகரத்தை விட்டு வெளியேறிவிட்டனர்.

22 ஸ்வாடோ நகரத்திலுள்ள அந்நியநாட்டுக் கப்பல்கள் யாவும் வெளியேறிவிட வேண்டுமென்று ஜப்பானிய அதிகாரிகள் எச்சரிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

இன்று, பிரிட்டிஷ் மன்னர் தம்பதிகள், தங்களுடைய அமெரிக்கா சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொண்டு இங்கிலாந்து வந்து சேர்ந்தார்கள்.

23 மஞ்சுகோ எல்லைப் புறத்தில் ருஷ்ய விமானங்களுக்கும் ஜப்பானிய ஆகாய விமானங்களுக்கும் பலத்த சண்டை உண்டாயிற்று.

பிரான்சுக்கும் துருக்கிக்கும் இன்று சிநேக ஒப்பந்தம் கையெழுத்திடப் பெற்றது.

வட சீனாவில் ஜப்பானிய ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் பொருட்டு இத்தலி, தன்னாலான உதவியைச் செய்யத் தயாராயிருப்பதாக உறுதிகூறி யிருக்கிறது,

டீன்ஸ்டீன் நகர முற்றுகை சம்பந்தமாக, ஜப்பானிய அரசாங்கம், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குச் சில கோரிக்கைகளை விடுத்திருக்கிறது.

பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழிருந்த அலெக்ஸாண்ட்ரெட்டா பிரதேசம் துருக்கியின் வசம் வந்து விட்டது.

24 அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் இன்று பம்பாயில் பாபு ராஜேந்திர



விஜயா

வங்காளி மூலத்தை இயற்றியவர்: ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜி; தமிழில் மொழிபெயர்த்தவர்: திரு. எஸ். குருஸ்வாமி பி. ஏ; வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரவுன் அளவு 1x16; 292 பக்கங்கள்; விலை: ஒன்றரை ரூபாய்.

வங்காளி மொழியிலுள்ள உயர்தர நாவல்களை அப்படியே தமிழில் பாஷாந்தரப்படுத்திக் கொண்டு வருகிற முயற்சியைக்கண்டு நாம் சந்தோஷப்படுகிறோமாயினும், பிற பாஷைகளில் மொழி பெயர்த்து வெளியிடக் கூடிய மூல நூல்கள் ஒன்றும் இன்னும் தமிழில் தோன்றவில்லையே யென்ற ஏக்கமும் கூடவே உண்டாகிறது. மூல நூல்களென்று சொல்லிக் கொண்டு ஆடம்பரமான விளம்பரத்தோடு வெளி வருகிறவைகளில் பெரும்பாலன, குப்பைக் கூடையிலே சேர்க்கக் கூடியவைகளாகவே இருக்கின்றன. இது தமிழ் நாட்டின் துரதிர்ஷ்டம்! ஸ்ரீ சரத் சந்திருடைய கதைகளில், அநேகமாக ஒரு விதத்தொடர்பு இருக்கிறது. ஆனால் பங்கிம் சந்திருடைய காம்பீர்யமும் கற்பனைகளும் இவருடைய நூல்களில் இல்லை யென்றுதான் சொல்ல வேண்டும். என்றாலும் வாசிப்பதற்குச் சுவையாயிருக்கிறது. ஸ்ரீ குருஸ்வாமி, இந்தச்சுவை குன்றாமல் மொழி பெயர்த் திருக்கிறார். 'விஜயா, ஒரு

பிரசாத்தின் தலைமையில் கூடியது. இலங்கை யிலிருந்து இந்தியர்கள் வெளியேற்றப் படுவதைப் பற்றியும், தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு விரோதமான சட்டங்கள் இயற்றப் படுவதைப் பற்றியும் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

26 அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் இன்றுடன் முடிவு பெற்றது. காங்கிரஸ் விதிகளில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்பதற்காக நியமிக்கப்பட்ட சப் கமிட்டியின் அறிக்கையில் பெரும் பாகம் அப்படியே அங்கீகரிக்கப்பட்டது.

27 டைன்ஸ் டைன் நகரமுற்றுகை சம்பந்தமாக பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும் ஜப்பானிய அதிகாரிகளுக்கும் சமரஸப் பேச்சு நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

லண்டனில் பெரிய தீ விபத்து ஏற்பட்டது. 10 லட்சம் பவுன் சேதம்,

28 டோராடூன் எக்ஸ்பிரஸ் வண்டி, மோராதாபாத்துக்கு அருகாமையில் சென்று கொண்டிருக்கையில் தண்டவாளத்தினின்று பெயர்ந்து விட்டது. 10 பேர் மரணம். 2 பேர் காயம்.

புதுமைப்பெண்; புதுயுகப் பெண்' என்கிறார் ஸ்ரீ குருஸ்வாமி முகவுரையில். இந்த ஒரு திசையறி கருவியைக் கொண்டுதான், நாம் இந்த நூலை முற்றிலும் படித்தோம். விஜயா, ஒரு புதுமைப் பெண்தான். அதில் ஆட்சேபணையே இல்லை. ஆனால் அவளிடத்தில் நமக்குப், பக்தியோ பரவசமோ உண்டாகவில்லை.

இளைஞன் கனவு

திரு சுபாஷ் சந்திர போஸ் இயற்றியது; தமிழில் மொழி பெயர்த்தவர்: திரு. த. நா. குமாரஸ்வாமி பி. ஏ; வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரவுன் 1x16 அளவு; 248 பக்கங்கள்; விலை: ஒன்றே கால் ரூபாய்.

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸின் மீது, தமிழ் நாட்டில் துரதிருஷ்டவசமாக ஒரு தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நூலின் மூலமாக அந்தத்தப்பபிப்பிராயம் நீங்குமானால், அது நமக்குப் பரம திருப்தியாயிருக்கும்.

ஸ்ரீ போஸ் உயர்ந்த லட்சியத்தையுடையவர்; துறவு மனப்பான்மை பூண்டவர். இவருடைய இந்த இரண்டு தன்மைகளும், இந்த நூலில் நன்கு பிரதிபலிக்கின்றன. ஸ்ரீ போஸ் பர்மாவுக்குக் கொண்டு வரப்பட்டு இன்சின் சிறையிலிருந்த போது, 4—4—1927 தேதி யிட்டு, தமது சகோதரர் ஸ்ரீ சரத் சந்திர போஸுக்கு எழுதிய கடிதத்தில் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:—

> நிச்சயமாய் எந்த அக்னிப் பரீக்ஷைக்கும் உடன்படத் தயார். என்னுடைய ஜாதியினர் செய்த ஸகல விதமான பாபங்களுக்காக நான் பிராயச்சித்தம் செய்து கொள்ளுகிறேன். இதுவே எனக்கு அளவற்ற திருப்தியைக் கொடுக்கிறது. என் எண்ணங்களும் நான் பின்பற்றும் ஆதர்சமும் நீடூழி நிலவும், ஸ்வதேச நன்மைக்காக என் எண்ணத்தை நிறைவேற்றுவார்களென்ற நம்பிக்கையினாலேயே இந்த இடும்பைகளையும், அநீதிகளையும் முகமலர்ச்சியுடன் ஸஹித்துக் காலத்தைக் கழிக்கிறேன்.

இந்த வாக்கியங்கள், யாரையும் உருக்க வல்லன.

திரு. குமாரஸ்வாமி, இந்த மொழி பெயர்ப்பைச் செய்கிறபோது கொஞ்சம் சிரமப்பட் டிருக்கிறார் என்றே தோன்றுகிறது. வங்காளி மூலத்திலிருந்து மொழி பெயர்த்திருப்பதாகக் கூறும் இவர், ஏன், இடையிடையே ஆங்கில வாக்கியங்களையும் துணையாகச் சேர்த்துக் கொண்டிருக்க வேண்டு மென்பது தெரியவில்லை. மூலமே, அப்படித்தான் இருக்கிறதோ என்னவோ, நமக்குத் தெரியாது.

பொதுவாகவே, ஸ்ரீ குமாரஸ்வாமியின் மொழி பெயர்ப்பு, கம்பீரமாக இருக்கிறது.

தான வ்ருதம்

மோசூர் நா. சுப்புக்குட்டி அம்மாள் இயற்றியது; பிரசுரித்தவர்; ஸ்ரீ த. நா. குமாரஸ்வாமி பி. ஏ; டபிள் கிரவுன் அளவு 1x16; 24 பக்கங்கள்; விலை: இரண்டு அணா.

பக்தி ரசமான பாக்கள் பல இதில் அடங்கி யிருக்கின்றன.

ஸ்ரீ ஜோதிவாலே பரமானந்த சுவாமிகள் சரித்திரம்

ஸ்ரீ சுவாமிகளுடைய ஜீவிய சரித்திரமும், அவரால் அருளப்பட்ட பொருட்பா, பூஜாவிதி இயந்திரம் முதலியனவும் இந்நூலில் அடங்கியிருக்கின்றன. ஸ்ரீ சுவாமிகள், தற்போது ரங்கூனில் அநேக அன்பர்களுக்கு அருட்பொருள்கள் பல வழங்கி வருகின்றார். அன்பர்கள், சுவாமிகள் வாயிலாக நலம் பல பெறுவார்களென்றுநம்பு கிறோம். இந்தப் புத்தகத்தின்விலை ஒரு ரூபாய். வேண்டியவர் கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்:—

1 திரு. ரா. குருசாமி அவர்கள்
10—123, 50-வது தெரு,
இரங்கூன்.

2 திரு. கே. பி.
கோவிந்தசாமி வன்னியர் அவர்கள்,
புஷ்ப வியாபாரம்,
மன்னார்குடி,
தஞ்சை ஜில்லா

வந்தனத்துடன் வரப் பெற்றோம்

1. கொப்பனுப்பட்டி கலை மகள் கல்லூரியின் முதலாவது அறிக்கை.
2. கம்பை செட்டியார் [illegible] ஸ்கூல் வருஷ மலர் 1939.
3. பாகனேரி தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்—மூன்றாவது நான்காவது ஆண்டு அறிக்கை.
4. காரைக்குடி விவேகானந்தர் சங்கத்தின் மூன்றாவதாண்டு அறிக்கை.

கீர்த்திக்குப் பிரதிபந்தமாயுள்ள துக்கமாகிய இந்த இருட்டினது எல்லையைக் கடந்தோம். அசுவினிகளே! உங்களுக்காக நாங்கள் செய்த ஸ்தோத்திரங்கள் உம்மிடத்து வந்து சேர்ந்தன. நன்றாகத் தோன்றும் தேவர்கள் செல்லும் நெறியின் வழியாக இங்கு வருவீர்களாக. நாங்களும், உணவு, பலம், நீண்டவாயுள் இவற்றை யடையட்டும்—ருக்வேதம்.

கம்பர்

நா. லக்ஷ்மீநரசிம்மம்

1 கவியின்பம்

கவிஞர், கருவிலே திருவுடையார். ஆயினும் கல்லாமலே கவி மழை பொழிவோரல்லர். அவர் கற்ற கல்வி வெறும் இலக்கிய இலக்கணங்கள் மட்டுமன்று. அவர்களுக்கு இயற்கையே கல்லாசிரியன். காடும், மலையும், நதியும், நாடும், நகரும், சமூகமும், பிறவுயிர்களும் அவர்களுக்கு நூல்களாம். அவர்கள் பித்தர்களாய் அவ்வியற்கை நூல்களில் மூழ்கி உண்மை காண்பர். அக்கல்வியறிவே அவர்களுடைய கவிதா சக்தியை ஒளிவீசச் செய்கிறது. அவர்களது கற்பனு சக்தி ஓசை யின்பத்துடன் கவியாக வெளி வருகிறது. அவர்கள் உலகத்தை ஊடுருவி ஆராய்கின்றனர். கவிப் பொருள், அவர்களது ஆழ்ந்த உள்ளத்திலிருந்து புறப்படுகிறது. அத்தகைய இன்பக் கவி கற்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுதல் வியப்போ? இப்படிப்பட்ட தெய்வக் கவிஞருள் தமிழுக்குப் பெருமை தந்தவர் மூவர். அவர்களை 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை. உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை' என்று புகழ்கிருர் பாரதியார். அவருள் கவிச்சக்கரவர்த்தி கம்பர் வடமொழியிலுள்ள இராமாயணத்தைத்தான் எழுதினர். ஆனல் அது தமிழ்க்கதையாகவே காட்சியளிக்கின்றது. அதன் கதை யின்பத்துடன் கவிதை யின்பத்தையும் காண்பதே இக்கட்டுரைகளின் நோக்கமாகும்.

புவியினுக் கணியாய் ஆன்றபொருள் தந்து புலத்திற்ரு
அவியகத்துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவிச்
சவியுறத்தெளிந்து தண்ணென்றொழுக்கமும் தழுவிச்சான்றோர்
கவியெனக் கிடந்தகோதாவிரியினை வீரர் கண்டார்.

அழகின் உறையுளாய் சிறந்த பொருளைத் தருவதாய், அறிவைப் பெருக்குவதாய் அன்பின் ஐந்திணையின்பமூட்டுவதாய், தெளிவான நிலையினதாய், யாற்றொழுக்கின் ஒரே ஒழுங்கினதாய் அமைவது சான்றோர் கவி. இவ்விலக்கணத்திற்குக் கம்பர் கவியே இலக்கியம்.

கவிஞன், தான் எழுதும் கதையில் வரும் இன்ப துன்பங்களை அனுபவிப்பான். கதையில் வரும் பாத்திரங்களாகவே மாறி வருவான். தான் வேறு, தான் எழுதும் கதை வேறு என்று அவன் எண்ணுவதில்லை. அந்த நிலைதான் அவனை உலகினருக்குப் பைத்தியக்காரனுக்கி விடுகிறது. இராமாயணத்தில் கம்பர் இத்தகைய நிலையையே எய்துகின்ருர்.

ஸ்ரீ ராமனும் இலக்குவனும் முனிவருடன் மிதிலையிற் பிரவேசிக்கின்றனர். வீதியில் வரும்பொழுது கன்னிமாடத்திலிருந்த சீதை இராமனைப் பார்க்கின்ருள். இராமனும் சீதையைப் பார்க்கின்ருன். கண் வழி நுழையுமோர் கள்வன் போல் இராமன் சீதையின் நெஞ்சத்தை யடைகின்ருன். சீதையும் இராமன் உள்ளத்தில் இடம் பெறுகின்ருள். தலைவன் தலைவியர் ஒருவரை யொருவர் பார்த்துத் தணியாக் காதல் கொண்டனர் என்ற இன்ப நிலையைக் கம்பர்,

வரிசிலையண்ணலும் வாட்கண் நங்கையும்
ஒருவரையொருவர் தம் உள்ளம் ஈர்த்தலால்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்.

'இராமனும் சீதையும் ஒருவரையொருவர் தம்மேல் மற்றவர் கொண்ட அன்பைக் காண்பதற்காக உள்ளத்தை இழுக்கின்றனர். இருவரும் வெற்றியடைந்து ஒருவருள்ளத்தை மற்றவர்க்குப்பறி கொடுத்துச் செல்கின்றனர்' என்று கூறி மகிழ்கின்றார்.

இதனைத் துன்ப நிலையிலும் கூறிக் கண்ணீர் விடுகின்ற காட்சி கற்போர் நெஞ்சை அள்ளுகின்றது. வாலி, இராம பாணத்தால் இறந்து விடுகின்றான். அவன் மனைவி தாரை செருக்களத்தே வந்து வீழ்ந்து புலம்புகின்றாள்.

செருவார் தோளநின் சிந்தையுளேனெனில்
மருவார் வெஞ்சரம் என்னையும் வௌவுமால்
ஒருவேனுள் ளுளையாகின் உய்தியால்
இருவேமுள் இருவேமும் இருந்திலேம்.

'தலைவனே! நான் நின்நெஞ்சில் புகுந்திருக்க வேண்டிய இயற்கையின் வண்ணம் என்னை உன் உள்ளத்தில் வைத்திருந்தால் உன் மார்பைத் துளைத்த இராம பாணம் என்னையும் கொன்றிருக்க வேண்டுமே. உனக்கு என் உள்ளம் ஆலயமாக இருக்குமானால் நீ இறந்து போக முடியாதே. நீயும் இறந்து விட்டாய். நானும் உயிருடனிருக்கிறேன். ஆதலால் நம் இருவருள்ளமும் மற்றவர் நெஞ்சில் மாறிப்புகவில்லையோ' என்று சொல்லிக் கதறுகிறாள். முன்னர் சீதையின் மன நிலையால் இன்பத்து உச்சி எய்திய கம்பர், இங்கு தாரையின் மன நிலையால் துன்பப் பள்ளத்தில் வீழ்ந்து துடிக்கின்றார்.

பிறர் மனோபாவத்தைத் தான் உணர்வது போலவே எல்லோரும் அறியுமாறு வெளியிடுவதில் கம்பர் சதுரர். மாரீசன் மாயமானாக வருகின்றான். அதனைக் கண்டு சீதை கவர்ந்து கா என்கின்றாள். இராமன் இசைகின்றான். இலக்குவன், 'அண்ணா, அது மாயம்' எனத் தடுக்கின்றான். வாக்குவாதம் நிகழ்கிறது. இலக்குவனுக்கு அதைக் கொன்றுவிட வேண்டும் என்ற எண்ணம் நிலைத்து விடுகின்றது. அந்த எண்ணத்தைக் கம்பர் வெளிப்படுத்துகின்றார்.

தொடுத்த வெம்பகழி தூவித்தொடர்ந்தனன் விடாது பற்றிப்
படுக்குவன் அன்றுயிற் பற்றினன் கொணர்வல் என்றான்.

'அண்ணா, நீங்கள் போக வேண்டாம். நான் போய் அதனை மீளவிடாமல் துரத்திக் கொல்வேன். இல்லையானால் பிடித்து வருகின்றேன்' எனக் கூறுகின்றான். இதில் கம்பரது சாமர்த்தியத்தைக் கவனியுங்கள். கொடிய விலங்கொன்றை உயிருடன் பிடிப்பதற்கு வேண்டிய முயற்சி செய்து பலிக்கவில்லையானால் கொன்றுவது அதன் துன்பத்தைப் போக்குவதுதான் இயற்கை. இலக்குவன், வாக்கில் அவ்வியற்கை மாறுகின்றது. கொல்வேன்; இல்லையானால் பிடித்துத் தருவேன், எனக் கூறுகின்றான். இதுதான் அவன் உள்ளத் துடிப்பை வெளியிடும் உபாயம். கோபத்தில் மூழ்கியவன், சொல்லும் முறையறியானல்லவா?